UNIVERSAL
LIBRARY
OU_208129
UNIVERSAL
LIBRARY

VIJAYARANGAM

A DRAMA IN TAMIL

BY

RAO BAHADUR P. SAMBANDAM, B.A., B.L.

Author of

The Two S[isters], Galava, Manohara, The Curse of [illegible], The Two Friends, Fate and Love, Simhalanatha, Pushpavalli, Amaladitya, Magapathi, Farces, Sirithondar, The Golden Letters, True Love, The Bandit Chief, Bricks between, At any cost, The [illegible] Ghost, The Wedding of Valli, The Eye of Love, Sarangadhara, As [You] Like It, Ratnavali, Lord Buddha, The Tragedy of Silence, The Good Fairy, Geetha Manjari, The True Brother, [illegible] Sow-So We Reap, Malavikagnimitra, Chandrahari, [illegible] Demon Land, Sabapathy Part I, The Po[illegible] on Sabapathy Part II, A Rehearsal or Sa[illegible] Part III, Blessed in a Wife, The Dancing Girl, Subadra Arjuna, Karna the Giver, Sahadeva's Stratagem, The Surgeon General's Prescription, Vichu's Wife, Sakun[illegible] [illegible], Vikramorvasi, The Point of View, The Two Selves, The [illegible]

SECOND EDITION.

MADRAS:
[PRIN]TED BY THE BRITANNIA PRESS
1931

Copy Right

OSMANIA UNIVERSITY LIBRARY

Call No. TM 894.8112 S 18V Accession No. TM 669

Author Sambandam, P

Title Vijayarangam 1931

This book should be returned on or before the date last marked below.

விஜய ரங்கம்

— அல்லது —

'தோன்றிற் புகழொடு தோன்றுக'

இந்த நவீன நாடகம்

ராவ் பஹதூர் ப. சம்பந்த முதலியார், பி. ஏ., பி. எல்.,
அவர்கள் இயற்றியது

இந்த நூலாசிரியா இயற்றிய மற்றத தமிழ் நூல்கள் :—

"லீலாவதி சுலோசனை," "கள்வா தலைவன்," "விககிரம ஊர்வசி" "இரணடு நணபர்கள்," "சாரஙகதரன," "நற்குல தெய்வம்" "சத்ருஜித," "யயாதி," "மாாக்கணடேயர்," "காதலர் கணகள்," "பேயல்ல-பெண்மணியே," "மகபதி," "மெய்க்காதல்," "பொன் விலஙகுகள்," "சிம்ஹளநாதன்" "விரும்பிய விதமே," "சிறுத்தொணடா," "பிரஹசனஙகள்," "வாணீபுர வணிகன்," "ரஜபுதரவீரன்," ஹரிசசந்திரன்," "ரதனவளி," "புதத அவதாரம" "கீதமஞசரி," "புஷ்பவல்லி," "ஊாவசியின் சாபம," "அமலாதிதயன்," "சபாபதி முதறபாகம," "பொஙகல் பணடிகை" அல்லது சபாபதி இரணடாம் பாகம், "ஓா ஒததிகை" அல்லது சபாபதி மூன்றுமபாகம, "வள்ளிமணம்" "முற்பகற்செய்யின் பிற்பகல விளையும்," "சகாதேவன் சூழ்சசி" "காலவரிஷி," "மனைவியால மீணடவன்," "தாசிப் பெண" "சுபததிராா்ஜுனு" "கொடையாளி கர்ணன்" "சாஜன் ஜெனரல் விதிதத மருந்து" "விச்சுவின் மனைவி" "மாளவிகாகனிமிததிரம" "இடைசசுவா இருபுறமும்" "என்ன நோந்திடினும," "சகுந்தலை" "நோக்கததின் குறிப்பு" "இரணடு ஆதமாக்கள்" "மனோஹரன்" "உணமையான சகோதரன்" "விபரீதமான முடிவு" "சுல்தான் பேட்டை சப் அசிஸ்டெணட் மாஜிஸ்டிரேட்" முதலியன.

இரண்டாம் பதிப்பு.

1931.

காபிரைட்.]

முகவுரை.

இந்நாடகத்தையாவது அல்லது நான் பதிப்பித்துள்ள, எனது மற்ற நாடகங்களையாவது, எந்த சபையாராவது ஆடவேண்டுமென்றால், முன்னதாக எனக்குச் சேரவேண்டிய ராயல்டி கட்டணத்தைக் கட்டி, என் அநுமதி பெற்றே, பிறகு ஆடவேண்டும்; இல்லாவிடில் காபிரைட் சட்டப்பிரகாரம், போலீஸ் கோர்ட்டில், தாவாவுக்கு உள்ளாவார்கள் என்பதை இதனால் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

ஒரு கிரந்தகர்த்தாவுக்குச சேரவேண்டிய ராயல்டி, அவர் ஆயுசு பர்யந்தமும், அதற்குமேல் 50 வருஷம் அவரது வார்சுகளுக்கும் உரித்தாயது என்பதை எல்லோரும் அறிவார்களாக.

நான் அச்சிட்டிருக்கும் புஸ்தகங்கள் வேண்டியவர்கள் சென்னை ஆச்சாரப்பன் வீதி, 70-வது கதவிலக்கமுளள வீட்டிலும், எலலாப் பிரபல புஸதக வியாபாரிகளிடமும வாங்கிகொள்ளலாம.

இப்படிக்கு,

ப. சம்பந்தம்.

விஜய ரங்கம்

— அல்லது —

'தோன்றிற் புகழொடு தோன்றுக'

நாடக பாத்திரங்கள் :

விஜயரங்கப் பிள்ளை .	ஒரு நூலாசிரியன்
ரங்கநாதப் பிள்ளை ..	விஜயரங்கப் பிள்ளையின் உறவினனும் நண்பனும்.
தாமோதரம் பிள்ளை ...	விஜயரங்கப் பிள்ளையின் மாமனார்.
சுப்பராய ஐயர் . .	ஒரு வக்கீல்.
திருமேஞ்ஞான முதலியார் ...	ஒரு பணக்கார சீமான்.
கரிகிருஷ்ண நாயக்கர் .	ஒரு வயோதிகன்.
பரஞ்சோதி ...	விஜயரங்கப் பிள்ளையின் வேலையாள்
கிருஷ்ண ராவ்	ஒரு வயித்தியா.
கோவிந்தராஜ முதலியார் ...	ஓா உதவி வயித்தியர்.
அ. ர. மு. முத்தையன் செட்டி ..	ஒரு நாட்டுக்கோட்டை செட்டி.
கிருஷ்ணசாமி முதலியார் / முத்துகிருஷ்ண நாயுடு } ..	நாடகம நடிப்பவர்.
சாமிநாதன்	விஜயரங்கப் பிள்ளையின மகன்.
மங்கையர்க்கரசி	விஜயரங்கப் பிள்ளையின் மனைவி
ராஜேசுவரி .	ரங்கநாதப் பிள்ளையின் மனைவி
அன்னபூரணி	ஒரு கைம்பெண.
மனோன்மணி . .	திருமெஞ்ஞான முதலியார் குமாரத்தி
லோகநாயகி	நாடகம நடிப்பவள்.

ஒரு பிச்சைக்காரன், ஜனங்கள், ஒரு வேலைக்காரன், எட்டினபுரம ஜமீன்தார், வேஷதாரிகள், ஒரு கான்ஸடெபில, ஒரு குதிரைக்காரன் முதலியோா.

கதை நிகழ் இடம் :—திருநெலவேலியிலும. சென்னையிலும.

கதை நிகழ் காலம் :—1926.

விஜய ரங்கம்

அல்லது

'தோன்றிற் புகழொடு தோன்றுக'

முதல் அங்கம்

முதற் காட்சி

இடம்---திருநெல்வேலியில் தாம்ரபாணியின் கரையோரமாயுள்ள ஒரு மெத்தை வீட்டின் மேல்மாடியில் ஓர் அறை.

கிழக்குப்புறத்தில் திறந்திருக்கும் பலகணி வழியாகப் பார்க்கையில் எதிரில் ஓடுகிற ஆறு தெரிகிறது. அறையின் மேற்குப் புறத்து வாயில் வழியாக மாடிக்கு ஏறுகிற படிக்கட்டு தெரிகிறது. அறையிலுள்ள சாமான்களெல்லாம் மிக்க ஒழுங்காக அமைந்திருக்கின்றன. ஒரு மூலையில் வீணை முதலிய வாத்தியக் கருவிகள் இருக்கின்றன. இன்னொரு மூலையில் சித்திரப்படம் எழுதும் கருவிகளும், இப்பொழுதுதான் எழுதி முடிந்த படமொன்றும் வைத்துள்ளன. அறையின் வடக்குத் தெற்குச் சுவர்களின் ஓரமாக ஆங்கிலத் தமிழ்ப் புஸ்தகங்கள் வரிசை வரிசையாக அடுக்கியுள்ளன. பச்சைப் பட்டு ஜாலா கட்டப்பட்ட தீபமொன்று அறையின் மத்தியிலுள்ள மேஜையின்மீது எரிந்துகொண்டிருக்கிறது. அதன் இருபக்கங்களிலும் பிழை திருத்தவேண்டிய அச்சுக் காகிதங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன.

கைகளைத் துடைத்துக்கொண்டு
விஜயரங்கப் பிள்ளையும், ரங்கநாதப் பிள்ளையும்
படிக்கட்டின் வழியாக அறைக்குள் வருகிறார்கள்.

வி. [சிரித்துக்கொண்டே] ஆம் ஆம்! இன்று மழை எப்படி திடீரென்று வந்ததோ, அப்படியே திடீரென்று நீயும் வந்தாய்.

[இருவரும் பிரம்பு நாற்காலிகளை இழுத்துக் கொண்டு பலகணி ஓரமாக உட்காருகிறார்கள்.]

ர. என்ன மழை! என்ன காற்று! என்ன மின்னல்! என்ன இடி! அதுவும் பகற்பொழுதில்!

வி. காலையில் சூர்யோதய காலத்தில் என்ன நிர்மலமா யிருந்தது தெரியுமா ஆகாயம? திடீரென்று இன்றைக்குள் இப்பெரும புயல் அடிக்குமென்று எவனும் எண்ணியிருக்க முடியாது.

ர. அப்படித்தான் வருகின்றன நமக்கு நேரிடும் தீமைகளும —திடீரென்று—முன் குறிப்பு ஒன்றுமின்றி.

வி. ரங்கநாதம், நீ யாரைப்பற்றியோ குறிப்பாகப் பேசுகிறாய்—யாருக்கு அப்படி நேரிட்டது இப்பொழுது?

ர. [ஒருவாறு நகைத்து] யாருக்காவது அப்படி நேரிட்டால்தான் சொல்லவேண்டுமோ? பொதுவில் ஊகித்தறியலாகாதா? நீயே உன் புதிய கதைப் புஸ்தகங்களில் இதைப்பற்றி எத்தனை முறை எழுதியிருக்கிறாய்?

வி. அது சரிதான்—நீ கூறியபோது எதையோ குறிப்பிட்டதுபோல் தோற்றியது—அதிருக்கட்டும்—என் கடைசி புஸ்தகம் உனக்குச் சேர்ந்ததா?

ர. 'தோன்றிற் புகழொடு தோன்றுக' என்பதுதானே?

வி. ஆம—அதை முற்றிலும் படித்தாயா? அல்லது, புஸ்தகம் அனுப்பியபடியே இருக்கிறதா?—முதலில் புஸ்தகம் இருக்கிறதா, எங்கேயாவது போகக்கடித்துவிட்டாயா?

ர. இல்லை இல்லை! இருக்கிறது—அதை நான்கு ஐந்து முறை திரும்பித் திரும்பிப் படித்தேன்.

வி. ஆஹா! என்ன ஆச்சரியம!—அதுதான் காற்றுமழை அடித்தது இன்று.

திருத்திய பழம முதலியன ஒரு தட்டில் எடுத்துக்கொண்டு படிவழியாக மங்கையர்க்கரசி வருகிறாள்.

ம. நான் வரலாமோ?

வி. வா, சீக்கிரம.

ர. யார் அது?—நீயா! என்ன அம்மா, நீ கூடவா கேட்டுக் கொண்டு வரவேண்டும?

ம. அப்படித்தான் உத்தரவு செய்திருக்கிறார்கள்.

ர. இதென்ன விஜயரங்கம்? உனக்கென்ன பயித்தியமா?

வி. உனக்கென்ன சொல்லாமல், அந்தக் கஷ்டம் எனக்கல்லவோ தெரியும். இல்லாவிட்டால் நான் ஏதாவது அதிக கடினமான விஷயத்தைப்பற்றி ஒரே சிந்தையாய் யோசித்துக் கொண்டிருக்கும்பொழுது, பாலில் மிளகு தூள் போடவா அல்லது கல்கண்டு போடவா என்று கேட்க வருவாள். அவ்வளவுதான் அவள் புத்தி—

ம. [ஒன்றும் பேசாமல், அவர்களிருவருக்கும் மத்தியில் ஒரு சிறு மேஜையைப்போட்டு அதன்மீது தான் கொண்டுவந்த தட்டை வைக்கிறாள்]

ர. இதெல்லாம் என்ன? விஜயரங்கம், எனக்கு விருந்து செய்கிறீர்களா, என்ன?

வி. ஆம், உனக்குக் கலியாணமானபின் இதுதானே முதல் முறை நீ இங்கே வருவது?

ம. ஆம் நல்ல கலியாணந்தான்! என்னதானிருந்தபோதிலும் உற்றார் உறவினர் என்று வேண்டாமா? சொந்த உடன் பிறப்பாயில்லாவிட்டாலும், இரண்டாங்கால'கத்தான் இருந்தால் என்ன? கலியாணம் என்று ஒரு கடிதமாவது போட வேண்டாமா? அப்பா இல்லாததற்கு சிற்றப்பா யிருக்கிறோமென்று அவருக்காவது தெரிவிக்கலாகாதா?

வி. [பழத்தைத் தின்றுகொண்டே] சரிதான்.—அவருக்குத் தெரிவித்திருந்தால், வேண்டாம் என்று ஒரே ஆட்சேபணை செய்திருப்பார்—அவ்வளவு தான் பலன்.

ர. இல்லை அம்மா, நீ கோபித்துக் கொள்ளாதே—அங்கே போயிருந்த இடத்தில், திடீரென்று மறுநாள் முகூர்த்தம் என்று நிச்சயித்தார்கள். அன்றியும் இங்கிருந்து அவ்வளவு தூரம் யாழ்ப்பாணத்திற்கு வரப்போகிறீர்களா என்று முன்பாகத் தெரிவிக்கவில்லை.

ம. இல்லை—எனக்கேதோ சந்தேகமா யிருக்கிறது—அவர்கள் சொல்லியபடி [தன் கணவனைப் பார்த்து] ஏதோ காரண மிருக்கவேண்டும்.

ர. இல்லை அம்மா, அப்படி யொன்றுமில்லை.

ம. ஏன் அண்ணியை அழைத்துக்கொண்டு வரவில்லை?

ர. திடீரென்று நான் புறப்பட்டு வரவேண்டியதாயிற்று.

ம. என்ன அப்படி அவசரமான வேலை?

வி. [ரங்கநாதத்தின் முகத்தை உற்றுப் பார்க்கிறான்].

ர. ஒரு காரணமாய் வரவேண்டி நேர்ந்தது —

[வாயில் பழத்தைப் போட்டுக்கொண்டு]

இன்னொருமுறை — வந்தால் — வரும்பொழுது அழைத்து வருகிறேன்.

ம. சந்தோஷம்—அதிருக்கட்டும்—அண்ணி எப்படி யிருக்கிறார்கள்—சிகப்பா யிருக்கிறார்களா—மாநிறமா யிருக்கிறார்களா?

வி. சரி, ஆரம்பித்தாயா? அப்புறம் என்ன நகை போட்டுக் கொள்ளுகிறார்கள், என்ன புடவை கட்டிக்கொள்ளுகிறார்கள், எல்லாம் கேட்க ஆரம்பிப்பாய் நீ! புத்திசாலிதான்—

ம. [தன் கணவனை உற்றுப் பார்க்கிறாள்].

வி. நீ கீழே போ.

ம. [போகும் பொழுது] இன்னொருமுறை வரும்பொழுது எப்படியும் அண்ணியை அழைத்துக் கொண்டுதான் வர வேண்டும். [கீழே இறங்கிப் போகிறாள்.]

வி. படிப்பில்லாததின் கெடுதி இதுதான்—ரங்கநாதம், என்ன யோசித்துக் கொண்டிருக்கிறாய்?—

ர. அடடடா! என்ன மடையனாயிருக்கிறேன்! இதுவரையில் தோற்றாமல் போயிற்றே.—

வி. என்ன அது, ரங்கநாதம்?

ர. இங்கேவா இப்படி—சொல்லுகிறேன்—

[அறையின் மூலையில் வைக்கப் பட்டிருக்கும் புதிதாக எழுதி

முடிந்த சிததிரப்படததின எதிரில்
அழைத்துககொண்டுபோய்]

இநதப் படம ஒருவருடைய முகததைதயும் பார்த்து எழுதிய தல்ல என்கிருயா ?

வி. இல்லையென்று உனக்கு எததனைமுறை சொல்லி யிருக கிறேன், இதுவரையில, நீ வநதது முதல ?

ர. உண்மையில ?

வி. இன்னொரு முறை எனனை இபபடிக கேடபாயாயின எனககுக கோபம வரும.—எததனை முறை சொலவது ?—இதில நான ஒளிபபானேன உனனிடம ?—எனககெனன பயமா ?

ர. பயமிலலாதிருககலாம—வெடகமாயிருககலாம !

வி. வெடகமாவது ? உனககென்ன பயிததியம பிடிததிருக கிறதா, எனன ?

ர. அபபடியாஞல உனனையும அறியாதபடி நீ இதைச செய திருககவேணடும — இநதப படம மஙகையாககரசியின ஜாடையா யிருககிறதா ? இல்லையா ? இபபடி வநது பார.

வி. எனன ! மஙகையாககரசியின ஜாடையா ? உனககெனன பயிததியம முதிர்நதுவிடடதா ? அலலது இனறு இருணடு மழை பெய்தபொழுது மினனிய மினனலினுல கண் பொட டையாய் விடடதா ? இநதப படததின அழகெஙகே, மஙகை யர்ககரசி எஙகே ?

ர. பிடிவாதம பிடிககாதே—இப்படி அருகிலவா—அநத கண மூககு வாய் எலலாம அபபடியே இருககிறதா இலலையா பார்—அவசரபபடாதே—அவள அணிநதிருககும தெறகத திய ஆடை ஆபரணஙகளை யெலலாம கழறறிவிடடு, இதே மாதிரியான ஆபரணஙகளையும ஆடையையும அணிவிததுப பககததில நிறுததிப பார, அப்படியே அசசில வார்ததது போலிலலாவிட்டால என பேர் ரஙகநாதம அல்ல !

வி. [கொஞ்சநேரம் படததை உற்றுப் பார்த்து.] ஆம—அநத ஜாடை யிருக்கிறது—வாஸ்தவநதான்—இதுவரையில நான்—இதைக் கவனிக்கவில்லை.

ர. அம்மா திரி நீ கவனிக்காத விஷயங்கள் அநேகம் இருக்குமென்று நினை.

வி. நிரம்ப கெட்டிக்காரன்தான்—வா இப்படி உட்கார—

[இருவரும் முன்பிருந்த இடம் போய் உட்காருகிறார்கள்]

என்ன பேசிக்கொண்டிருந்தோம் கொஞ்சம் முன்பாக?—ஆம்—நான் கடைசியாக அச்சிட்ட புஸ்தகத்தைப்பற்றி.

ர. ஆம்.

வி. ஆமாம்—என் வழக்கத்தைப்போல அப்புஸ்தகத்தைப்பற்றி உன் அபிப்பிராயத்தை எனக்கெழுதவில்லை?—நன்றாக இல்லையா என்ன?

ர. நன்றாக இல்லையாவது!—உனக்கப்பொழுதே எழுதவேண்டுமென்றிருந்தேன் ஏதோ அவசரத்தில் மறந்தேன். அந்தப் புஸ்தகம் வந்தவுடன் சாப்பாட்டு வேளை தவிர ஒரே மூச்சாகப் படித்துக்கொண்டிருந்தேன், இரவு பன்னிரண்டு மணியாகிவிட்டது; அப்படியே தூங்கிவிட்டேன். பிறகு ஐந்து மணிக்கு விழித்துக்கொண்டு பார்த்தால், ராஜேசுவரி அந்தப் புஸ்தகத்தைப் படித்துக்கொண்டிருக்கிறாள்!—இரவெல்லாம் கண் விழித்து!—என்னவென்று கேட்டால், ஆரம்பித்த பிறகு மத்தியில் விட்டுவிட முடியவில்லை என்று சொல்லி, பிறகு கடைசி பக்கம் வரையில் படித்தபிறகே என்னிடம் கொடுத்தாள்—பிறகு விசாரித்ததில் நீ அச்சிட்டிருக்கும் புஸ்தகங்களையெல்லாம் சற்றேறக்குறைய முழுமையும் குருட்டுப் பாடமாக ஒப்பிக்கிறாள்.

வி. அடடா! நான் பெரிய நூலாசிரியனாகி விட்டேன்போலிருக்கிறதே; அதிருக்கட்டும்—அதில் என்ன குறைகளிருந்தன? சொல்

ர. அப்படி முக்கியமான குறையிருந்ததாக நான் கவனிக்கவில்லை.

வி. முக்கியமான குறைகள் அகப்படாவிட்டாலும், முக்கியமில்லாத குறைகளைத்தான் கூறு.

ர. எனக்கொன்றும் ஞாபகத்திற்கு வரவில்லை.

வி. அதெல்லாம் உதவாது, சொல.

ர. ஞாபகமிருந்தால் சொல்லப் பயமென்ன ?

வி. உம்—என்நேரமும் சிருங்காரமே எழுதிக்கொண் டிருக்கிறேன் என்றாயே, இதற்கென்ன சொல்லுகிறாய்—முதலிலிருந்து கடைசி வரையில் எங்கேயாவது சிருங்காரத்தின அருகிற சென்றேனா ?

ர. ஆமாம்—அதுதான் எனக்கு அதிக சந்தோஷத்தைக் கொடுத்தது.—ஆயினும்—

வி. ஆயினும், என்ன சொல. என்ன அஞ்சுகிறாய் ?—ஏதாவது குறையிருந்தால் கிழி கிழி யென்று கிழி ! நான் என்ன பயப்பட போகிறேனா ? கோபங்கொள்ளப் போகிறேனா ?

ர. அப்படி நீ கோபித்தாலும் நான் பயப்பட போகிறேனா ? —அதொன்றுமில்லை—அது இன்னதென்று சொல்வது கஷ்டமாயிருக்கிறது—அது— [யோசிக்கிறான்.]

படியோரமாகப் பரஞ்சோதி வருகிறான்.

ப. எசமான—எசமான.

வி. யார அது ?

ப. நானதான

வி. மடையா ! உன பெயரா நான்தான ? உனக கெத்தனைமுறை சொலலியிருக்கிறேன பெயரைச சொலலவேணடுமென்று.

ப. புத்தி.

வி. இப்பொழுது இங்கே யார வரசசொன்னது உன்னை ?

ப. அம்மா வெற்றிலை பாக்கைக் கொண்டுபோயக கொடுக்கச சொன்னாங்கள.

வி. இத்தனை நாழிகை கழிததா ? கொண்டுவா சீககிரம், வாடா சீககிரம

ப. [விரைவாக நடக்க முயன்று கால்தடுக்கி, தட்டைக் கீழே போட்டுக்கொண்டு விழுகிறான்.]

வி. தடிக்கழுதை ! [பரஞ்சோதியின் கன்னத்தில் புடைக்கிறான்.] எத்தனைமுறை சொலலியிருக்கிறேன ஜாக்கிரதையாக நடக்க வேண்டுமென்று.

ர. விஜயரங்கம், வா இப்படி போதும்—பாபம !

வி. என்ன விழித்துக்கொண்டு நிற்கிறாய் ! போ கழுதை !

[தட்டை எடுத்துக் கொண்டு மெல்ல பரஞ்சோதி போகிறான் படிவழியாக]

ர. ஏன் அநதக கிழவனை அடிததாய் ? பாபம !

வி. உனக் கொன்றும தெரியாது ; நான் எததனை முறை பொறுபபது ? வரவரக குருட்டுக் கழுதையாகப் போகிறான்.

ர. அதனால்தான அவன்மீது நீ கோபிததுக கொளளக்கூடாது ; அவனமீது பரிதாபம அல்லவோ கொளளவேண்டும்.

ர. அப்படிப பரிதாபபபடுவதினால்தான் இனனும அவனை வேலையில் வைததுக்கொண்டிருககிறேன். இல்லாவிட்டால் எப்பொழுதோ அவனை நாட்டுப்புறததிற்கு அனுப்பிவிட் டிருப்பேன் தெரியுமா ? நான் பிறநததற்கு முன்பாக இநத வீட்டில வேலைககாரனு யிருககிறானும ; ஆம ஊம என்றால், எசமான தகப்பனார் தாயார் சினன வயசிலேயே இறநத போது நானதானே எசமானை எடுதது வளர்ததேன் என கிறான் ; அவனை என்ன செய்கிறது ?—ஒரு வேலையும செய்ய முடியவில்லை—அவனால் எனக்கு ஒரு பிரயோஜனமுமில்லை.

ர. உனககு ஒரு பிரயோஜனமு மிலலாவிட்டாலும எனககுப் பெரிய பிரயோஜனமானனை இப்பொழுது.

வி. என்ன அது ?—விளையாடுகிறாயா என்ன ?

ர. இல்லை உண்மையில்—சறறு முன்பாக உனது புஸ்தககங்களில் ஒரு குறை யிருககிறது, அதை இன்னதென்று குறிப்பிட்டுச சொலவது எனககுக கஷ்டமா யிருககிறதென்று யோசித்துககொண்டிருநதேனே -அதை விளககினான் அவன்.

வி. அதெப்படி ?

ர. மற்றெல்லாம நீ அநேகமாய் அறிநதிருநதபோதிலும், உலக வாழ்ககையின் கஷ்டம இப்படிப்பட்டதென்று உண்மையில் நீ நன்றாயறியவிலலை இன்னும.

வி. ஏன் ? என் கடைசி புஸ்தகததில் மதிவாணன் கஷ்டங் களைப்பற்றி நான் எழுதியது சரியாக இல்லையோ ?

ர. ஒருவாறிருந்தது — ஆயினும் — எப்படி யிருந்தபோதிலும் பிறந்தது முதல், தகப்பனார் தாயாரால சிட்சிக்கப்படாமல், மாமனாரால் செலவக் குழந்தையாய் வளர்க்கப்பட்டு, சுகத திலேயே வாழ்ந்து வந்துவிட்டாய். உலகத்தின் கஷ்டம என்பது இத்தனமையது என்று அதைக கொஞ்சம அனுப வித்தால்தான், அதன் உணமையை யறிவாய். என்னதான் ஊகித்தறிந்தாலும அனுபவ ஞானத்திற்கு ஈடாகாது அது ; அந்தக் குறை உன் சுபாவத்திலு மிருககிறது, உன் புஸ்தகங் களிலு மிருககிறது. அதை மாத்திரம நீ தீர்ப்பாயாயின் எல்லா விதத்திலும மிகவும மேலாகும்.

வி. ஆனால—நீ சொல்வதைப பார்த்தால—எனககு ஏதாவது பெருங்கஷ்டம நேரிடவேணடுமென்று கோருகிறாயா?என்ன?

ர. சீசீ ! அபபடி ஒன்றும நேரிடாவண்ணம கடவுள உன்னைக காப்பாராக !

வி. பிறகு என்னை என்ன செயயவேணடுமெனகிறாய ?

ர. உம—எனககு ஒரு யோசனை தோன்றுகிறது—இந்த செல் வாககை யெல்லாம விட்டு, ஒருவருககும தெரியாமல் எங்கே யாவது தூரதேசம போய, மூன்று மாத காலம ஒரு எளிய வேலைககாரனாகக கஷ்டபபட்டு ஜீவனம செய்துபார். அப பொழுது இல்லாமையின கொடுமை இபபடிபபட்டதென்று உண்மையாய் அறிவாய், அன்றியும உன குணத்திலுள்ள கெடுதிகளும விலகும.

வி. நான் ஏன அப்படிச செய்யககூடாது ?—அதுவும ஒரு வேடிக்கையா யிருக்கும.

ர. வேடிககையா யிருககிறதோ இல்லையோ அதை அப்புறம சொல் என்னிடம.

வி. அப்படியே ஆகட்டும்—

[சுவரின் ஒருபுறம் இருக்கும்பெரிய கடி யாரம் ஒன்பதுமணி அடிககிறது]

ர. ஒன்பதாகிவிட்டதா !—ஆனால சீககிரம உன மோட்டார் வண்டியைக கொண்டுவரச் சொல்—நான் ரெயிலுக்குப் போக நேரமாய்விட்டது.

வி. முன்பே உததரவு செய்திருக்கிறேன்—சரியாக வரும—இன்னும் எவவளவு நாழிகை இருககிறது, இதற்குள அவசரமா ?

ர. பிறகு ரெயில் தவறிபபோனல் ?—

[தன் சட்டை தலைக்குட்டை முதலியன போட்டுக கொள்ளுகிறான்.]

வி. ரஙகநாதம, இபபொழுதாவது நீ திடீரெனறு யாழ்ப்பாணம விட்டு வநததறகுக காரணம சொல்லமாட்டாயா ?

ர. அறிவு துன்பம் தருவதாயின் அறியாமையே மேலாகும என்னும வாககியம நீ கேட்டதிலலையா ?

வி. ஆனல் உன் இஷ்டம, ஆயினும—நீயாகக கூறுவிட்டாலும, நான் ஒன்று கூறுகிறேன், அது சரியா இலலையா என்ருவது சொல்லுகிருயா ?

ர. உன்னல் கூறமுடியாது. சாப்பிட்டு இளைபபாறுவதைவிட்டு என் புததிககு ஏன விருதாவாகக கஷ்டம கொடுககிருய் ?

வி. ஏதோ திடீரெனறு பெருங கவலைககுளளாகி திடீரென்று யாழ்ப்பாணமவிட்டு வநதிருககிருய்—உணமையா இலலையா ?

ர. அதைகக கூற, விஜயரஙகம—பெயர் பெறற நூலாசிரியன்—ஒருவன வேண்டுமோ ?

வி. நான் பெயர் பெற்ற நூலாசிரியன அலல—இபபொழுது—

ர. இப்பொழு திலலாவிட்டாலும சீககிரததில அபபடி ஆவாய், என் ஜோஸ்யததைபபார்—நான வரவா ?

வி. ரஙகநாதம—என்னை மன்னிபபாய—அககவலை விரைவில் முடிநத உன் விவாஹததைப பொறுததது—எனறு என் புத்திக்குப புலப்படுகிறது.—

ர. [அவன் எதிரில் வந்து அவனது தோள்மீது தன் கையைவைத்து] நான் ஒன்று கேட்டுககொள்ளுகிறேன, அதன்படி செய்கிருயா ?

வி. ஆகட்டும்.

ர. கை போட்டுக்கொடு.

வி. [கைபோட்டு] ஆகட்டும்.

ர. [அவனிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்து] இக்கடிதத்தை நான் போனபின் ஐந்து நிமிஷம் பொறுத்துப் பிரித்துப் படித்துப் பார். அதில் உன்னை ஒன்று வேண்டி யிருக்கிறேன் கடைசியில், அதன்படி செய்கிறதாக வாக்களி.

வி. அப்படியே. [மறுபடி கைபோட்டுக் கொடுக்கிறான்.]

ர. [அப்படியே அவன் கரத்தைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு] நீ கடைசியில் அச்சிட்ட புஸ்தகத்தின் பெயரென்ன?

வி. தோன்றிற் புகழொடு தோன்றுக.

ர. அஃதிலார்?

வி. தோன்றலிற் றோன்றாமை நன்று?

ர. அது வாஸ்தவமாயின் என்மீது குறை கூறமாட்டாய்—

[வெளியில் மோடார் வரும் சத்தம் கேட்கிறது.]

இங்கேதான் நில். கீழே இறங்கி வரவேண்டாம் வண்டி வரையில்—நான் வருகிறேன்—விஜயரங்கம்—நான் வருகிறேன்.

[திடீரென்று கையைவிட்டு, கண்களில் நீர் ததும்ப, விரைந்து வெளியே போகிறான்.]

வி. [சற்றுநேரம் நின்றுவிட்டு, கடியாரத்தைப் பார்த்து, பிறகு மேஜையின்மீது அக்கடிதத்தை வைக்கிறான்] ரெயில் தவறமாட்டான—சரியாகக் கொண்டுபோய்விடும் வண்டி—

[நாற்காலியின்மீது சாய்கிறான்.]

படிவழியாக மங்கையர்க்கரசி, ஒரு தட்டில் வெற்றிலைப்பாக்கு எடுத்துக்கொண்டு வருகிறாள்.

ம. நான் வரலாமோ?

வி. வா.

ம. அண்ணா போய்விட்டாற்போ லிருக்கிறதே?

வி. ஆம்.

ம. பரஞ்சோதி முன்பு அனுப்பிய வெற்றிலையைக் கீழே கால் தடுக்கிக் கொட்டிவிட்டதாகச் சொன்னான்—வேறே கொண்டு வந்திருக்கிறேன்—போட்டுக் கொள்ளுகிறீர்களா?

வி. இப்பொழுது வேண்டாம—ஒரு புறமாய் வை.

ம. என்ன ஒருவா றிருக்கிறீர்கள ?—நான் கேட்டால் சொல்வீர்களா ?

வி. இப்படி வா.

[அவள் கரதகைதப்பற்றி அழைத்துக் கொண்டுபோய் படததின் பககததில் நிறுததி, படததையும் அவளை யும் சற்றுநேரம் உற்றுப் பார்க்கிறான்]

ரஙகநாதன சொன்னது உண்மைதான்.

ம. என்ன சொன்னார் அண்ணா ?

வி. இநதப படம உன ஜாடையா யிருககிறதாம.

ம. என ஜாடையா யிருககிறதா ! என படமலல இது ?

வி. உன படமென்று நினைததுககொண டிருநதாய ?

ம. ஆம்—இல்லாவிட்டால் வேறொருததியின் படததை நீர் எழுத நான பாரததுககொணடு சுமமா இருப்பேன் என்று நினைததீர்களோ ?

வி. ஊம !— [சிறு நகைப்பாய் நகைக்கிறான்.]

ம. உஙகளுக கென்ன இது நகைபபா யிருககிறதோ ? என் படமா யில்லாவிட்டால வேறு யாருடைய படததை எழுதினீர்கள சொலலுஙகள—சொலலாவிட்டால—நான உஙகளுககு ஒரு முககிய மான சமாசாரம சொலலலா மென்றிருநதேன, அதைச சொலலவே போகிறதிலலை.

வி. என்ன அபபடிபபட்ட சமாசாரம ?

ம. அது ஒரு ரகசியம—நீஙகள இதைச சொன்னால், நான அதைச சொல்லுவேன்.

வி. நான் சொல்லாவிட்டால ?

ம. நானும சொல்லவே மாட்டேன—என்ன ? சொலலுகிறீர்களா மாட்டீர்களா ?

வி. நான் சொல்லுவதற் கொன்றுமில்லை—நான் ஒருத்தியையும் நினைதது எழுதியதன்று இப்படம்—

ம. நீங்கள் உண்மையை எனக்குச சொல்லாவிட்டால் நானும என் ரகசியததை—உஙகளுக்குச சொல்லமாட்டேன்.

வி. சொல்லவேண்டாம—போ.

ம. அவ்வளவுதானே ?

வி. நீ போய் படுததுககொள்—எனக கொருவாருக இருக் கிறது—என்னைத தொநதரவு செய்யாதே.

ம, என் ரகசியததை மாததிரம சொன்ஞல் உங்கள தொந தரவெலலாம போய்விடும.

வி. அப்புறம உன ரகசியததைக கேடகிறேன—இப்பொழுது என்னைத தொநதரவு செய்யாதே.

ம. நான தொநதரவா செய்கிறேன ?—இநத ரகசியததை உஙகளுககுச சொலகிறேனு பாருஙகள் !

வி. சொல்ல வேண்டாம் போ.

ம. ஆகட்டும. [போகிருன்.]

வி. ஐநது நிமிஷம ஆய்விடடது !—

[விரைந்து மேஜை யருகிற் போய்கடிதத்தைக் கிழிததுப் பிரிததுப் பார்கிருன்.]

என்ன !— [கதவண்டை விரைந்து போய் திடீரென்று நிதானிதது]

சீ ! பிரயோஜனமிலலை ! இநநேரம ரெயில போயிருக்கும !—

[மறுபடியும் கடிதத்தை வாசித துப் பார்தது]

' நீ கூறிய வாககுததததததினபடி எனனைப் பின தொட ராதே ' [திகைத்து நிற்கிருன்.]

காட்சி முடிகிறது.

இரண்டாம் காட்சி

இடம்—தாமோதரம் பிள்ளையின் வீட்டின் கூடம்

நடுவில் ஒரு மேஜை போட்டிருக்கிறது. அதைச சுற்றிலும் நான்கு நாற்காலிகள் இருக்கின்றன. மேஜையின் மீதிலும் தரையின்மீதிலும் பல கணக்குப்புஸ்தகங்கள் கிடக்கின்றன.

தாமோதரம் பிள்ளை மிகவும் வாடிய முகத்துடன் மேஜையினருகிலுள்ள ஒரு நாற்காலியில் சாய்ந்திருக்கிறார்.

விஜயரங்கம் கையில் ஒரு நிருபத்துடன் மனக்கவலையோடு உலாவிக்கொண்டிருக்கிறான்.

வி. [சற்றே பொறுத்து] இந்தக் காகிதம் எப்பொழுது வந்தது உங்களுக்கு?

தா. நேற்றிரவு.

வி. இதையேன் என்னிடம் முன்பே சொல்லவில்லை?

தா. சொல்லலாமா—கூடாதா—எப்படிச் சொல்வது—என்று ஏங்கியே இராத்திரியெல்லாம் தூக்கமில்லாமல் கழித்தேன்.

வி. இந்த நஷ்டமெல்லாம் எவ்வளவு ஆகும்?

தா. கணக்கிட்டுப் பார்த்தேன், சற்றேறக்குறைய மூன்றரை லட்சமாகிறது.

வி. நம்முடைய சொத்துக்களெல்லாம் சேர்த்தால் எவ்வளவாகும்?

தா. எனக்குத் தற்காலம் இருக்கும் சொத்துக்களையெல்லாம் ஜாபிதா போட்டுப் பார்த்தேன், இதோ பார்—கொஞ்சம் ஏறக்குறைய மூன்று லட்சத்திற்கு வருகிறது.

வி. என் சொத்து—அதாவது—என் தகப்பனார் வைத்துவிட்டுப்போன சொத்து எவ்வளவு இருக்கிறது?

தா. பூஸ்திதியெல்லாம் ஒரு ஐம்பதினாயிரத்திற்கு இருக்கிறது—ரொக்கப்பணம், இப்பொழுது அறுபதினாயிரத்திற்கு வியாஜ்யம் செய்திருக்கிறோமே — அவ்வளவுதான்—அதையேன் கேட்கிறாய்?

வி. ஒரு காரணமாகத்தான்—மாமா—தயவுசெய்து குறுக்கே ஒன்றும் பேசாதீர்கள்—நான் சொல்வதைக் கேளுங்கள்—இந்தக் கடிதத்தில் அந்தச் சென்னபட்டணத்து லாயர் எழுதியிருக்கிறபடி ஒரு மோசமும் செய்யவேண்டாம். பிறரை மோசஞ்செய்து இப்பொருளையெல்லாம் நம்மிடம் வைத்துக்கொண்டிருப்போமானால் அப்படிப்பட்ட பொருள் எத்தனை நாள் நிலைக்கும் நம்மிடம் என்று எண்ணுகிறீர்?

அப்படி நிலைத்தாலும் அதனால் நாம் என்ன சுகம் அடையப் போகிறோம? வேண்டாம. உடனே நம்முடைய சொத்துக்களை யெல்லாம் விற்று ரொக்கமாக்கி, அந்த மூன்றரை லட்ச நஷ்டத்தையும அடைத்துவிடும—மிகுதியாயிருக்கும அந்த அறுபதினாயிரம ரூபாயைக்கொண்டு நாம எல்லோரும சௌக்கியமாக வாழலாம—சுருக்கே பேசாதீர் என்றேனே !—

தா. அப்பா-நான சொலவதைக்கேள—இப்படி ஏதாவது விபரீதமாய்ப் பேசுவாயெனறே, இக கடிததததை உனக்குக் காட்டலாமா வேண்டாமா என்று இதுவரையில யோசித்தேன்—நான சொலவதையும கேள—சுளிக்காதே முகத்தை—என் மைத்துனனை நமபி நான மோசமபோனதினால் உண்டான நஷ்டத்தை, நான என பொருளைக் கொடுதது அடைகக வேண்டியது என கடமையாகும அதறகாக உன பொருளை நீ கொடுபபது நியாயமலலவே ?

வி. இலலாவிட்டால நீர எபபடி இநத நஷ்டம முழுவதையும அடைககப போகிறீர ?

தா. கொடுகக வேணடியவாகளுக்கு சொலலாம கொஞசம குறைவாகக் கொடுததுப பைசல செயகிறேன.

வி. அவாகள வாஙகமாட்டேன் என்றால ?—இனசாலவெனட் ஷெட்யூல தாககல செயவீர்களா ?

தா. ஈசனே ! ஈசனே !—வேறு வழியிலலை.

வி. அப்படிச செய்வீராயின யாருககுச சுகம ? யாருககுச சந்தோஷம ? நமமுடைய கடனகாரார்களும வருததப்படுவார்கள, நீரும வருததபபடுவீர் !

தா. நீயாவது சந்தோஷமா யிருப்பாய—உன் பொருள் ஒன்றும பறிகொடுககாமல.

வி. உமககென்ன பயித்தியம பிடித்திருக்கிறதா ?—திவால் ஆனவருடைய மருமகப்பிளளை யென்று பெயரெடுத்து சநதோஷமா யிருபபேனோ நான் ? மாமா, இனி வீண் வார்த்தை வேண்டாம். நான் சொன்னபடி உடனே செய்யும்.

தா. ஈசா ! ஜகதீசா ! இக்கதியும எனக்கு வரவேண்டுமா !—எனக்கு நேர்ந்த நஷ்டத்தின் பொருட்டு உன் பொருளில் பாதியும இழக்கச செய்து, நீ வருததப்பட, அதைக கண்டு நான எப்படிச சகிப்பேன் ?

வி. நான வருததப்படுவேன் என்று உமக்கு யார சொன்னது ? என் பொருளில பாதியலல முழுவதும உமது கடனுககாகக கொடுப்பதானாலும வருததப்படமாட்டேன் நான் ; இப்படி உமக்கு ஆபததகாலததில் உதவுகிறேனே யென்று சநதோஷப் படுவேன். எனனை நீர் நன்று யறியவிலலை இன்னும—நான் கடைசியில அச்சிட்ட புஸ்தகததைப படிததிருககிறீரா?—நீர் தான என புஸ்தகஙகள ஒன்றையும படிப்பதில்லையே.

தா. உன் கடைசி புஸ்தகம ' தோனறிற புகழொடு தோனறுக ' எனபதை நேறறிரவுதான படிததேன்—தூககம வராம லிருநதபொழுது

வி. ஏது ! அமமட்டும என அதிர்ஷ்டநதான —மாமா, அதைப படிதத பிறகு, அதை எழுதியவன வேறு ஏதேனும செய்ய உடனபடுவான என்று எணணுகிறீரா ?—இன்னும என்ன யோசனை ?

தா. வேறொன்றுமிலலை—எனககாக நான ஒன்றும யோசிகக விலலை.—நான இனி நெடுநாள உயிருடன இருப்பேன என்று நான நமபவில்லை—நீ பிறநத நாள முதல செல்வததி லேயே வளாநது வநதவன்—

வி. எனககாக நீர் துககபபட வேணடியதில்லையென்று முன்பே கூறினேனே.

தா. நீ கூறிவிட்டால ஆமோ ? நான் எபபடித துககப்படாம லிருப்பேன்?-என் துரதிர்ஷ்ட உனனையும பற்ற வேண்டுமா?

வி. இதென்ன இவவளவு நியாய மெடுததுக கூறியும இபபடிப் பேசுகிறீரே ! என் கடைசி நியாயததைக் கேளும—உம திச்சைப்படி நடபபதானால் உமமுடைய கடன்காரர்களுக் கும துககம், எனக்கும துககம், உமக்கும துக்கம், நான் சொல்லுகிறபடியே நடப்பதானால், எங்களுக்கெல்லாம் சந

தோஷம உமக்கு மாத்திரம துககம—இவவிரண்டில எது மேமபட்டது? எது கீழ்பபட்டது?

தா. [கண்ணீர்விட்டு] அப்பா! விஜயரஙகம, உன நற்குணத் திறகு, உனககும இககதி வரலாமா, என் தீவினைப் பயனுல?—ஜகதீசன உனககு எபபடியும அருள் செய் வான.

[வீதிககுப் போகும் நடை வழியில் 'என்னடா! இழவு' நான அவசரமாய்ப் பார்ககவேண்டு மென்கிறேன் தடுககிருயா" என்னும் கூச சல் கேட்கிறது.]

வி. யார் அது?

வககீல சுப்பராய ஐயர் வாயிற்படி வழியாக கூடததிற்கு விரைந்து வருகிருர்.

சு. இநத வேலைககாரரகள தொநதரவு பெரிய இழவாய்ப போய்விட்டது!

தா. வாருஙகள — வககீல அவாள — உட்காருஙகள — என்ன விசேஷம?

சு. வேறொரு இழவும இலலை—நான அவசரமாகப பிளளை யவாளைப பாரககவேணடுமெனறுல—அநத இழவெடுதத வேலைககாரன உளளே விடமாட்டேன எனருன; என்ன இழவு போஙகள!—அவனை மீறிக கொணடு வருவது போதும எனறு போசசுது—உஙகளுககு உடமபு என்ன வாயிருககிறது? நேறறிரவு வநதபொழுது, ஏதோ, மாரபு நோய, இபபொழுது பார்கக சாததியபபடாதெனறு சொனனுர்கள. இபபொழுது எபபடி யிருககிறது, அநத இழவு வலி!

தா. அபபடிததா னிருககிறது—கொஞசம தேவையிலலை— தாஙகள் அவசரமாக வநத விஷயம என்ன?

சு. வேறென்ன இழவு இருககப போகிறது? அநதத துலுக கசசி, மாப்பிள்ளை பேருககு எழுதிககொடுதத அணடிமாண் டின்பேரில வியாஜ்யம போட்டிருககிருமே—அதிலே ஒரு பெரிய இழவு கஷ்டம வநதிருககிறது!

தா. என்ன ? என்ன ?

சு. என்ன இழவு போங்கள் !—அந்த அண்டிமாண்டில் சாட்சி கையெழுத்துப்போட்ட இரண்டு பேரில், ஒருத்தன் எங்கேயோ இருப்பிடம் தெரியாமல் ஓடிப்போய்விட்டான். மற்றொருவனாவது சாட்சி சொல்வானென்று அவன்மீது சாட்சி சம்மன் செய்து வைத்திருந்தேன். நம்முடைய இழவு—என்னவென்றால், அவன் இறந்து போய்விட்டதாக நேற்றுச் செய்தி வந்தது—இந்த இழவு இப்படி நேரிடுமென்று நான் நினைக்கவேயில்லை !

வி. என்ன கஷ்டம் அதில் ?

சு. என்ன கஷ்டமாவது ! பெரிய இழவாகவல்லவோ முடிந்திருக்கிறது !—பிரதிவாதி தான் பத்திரத்தில் கையெழுத்துப் போடவில்லை என்று மனு கொடுத்திருக்கிறாள்—அவள் பெண்பிள்ளை, துலுக்கச்சி, கோஷா !—இந்த இழவெடுத்த சட்டப்பிரகாரம் அவள் கையெழுத்துப்போட்டதாகவும், ரூபாய் பெற்றுக்கொண்டதாகவும் நாம் ருஜுப்படுத்தவேண்டும்.

தா. ஐயோ ! இதற்கென்ன செய்வது ?

சு. அந்த இழவைத்தான் கேட்கலாமென்று வந்தேன், அவசரமாக.—நாளைக்கு வாய்தா போட்டிருக்கிறது—ஒரு வேளை அவள் கையெழுத்துப் போட்டபோது—நம்முடைய—மாப்பிள்ளை பார்த்திருக்கக் கூடுமோ ?

வி. என்ன ஐயா அது ? நான்தான் அன்று நீர் கேட்டபொழுதே அப் பத்திரத்தைப்பற்றி எனக்கு நேரில் ஒன்றும் தெரியாது என்று சொல்லிவிட்டேனே.

சு. ஆமாம் அப்பொழுது சொன்னீர்கள்—இழவு—வாஸ்தவம் தான்—இப்பொழுது இந்தக் கஷ்டம்—ஒரு இழவு—வந்திருக்கிறதே—

வி. அதற்காக—இப்பொழுது என்னைப் பொய்யா பேசச் சொல்லுகிறீர்கள் ?

சு. சும்மா கோபித்துக் கொள்ளாதீர்கள்—மாப்பிள்ளை—நான் சொல்லவந்த தென்னவென்றால—இழவு—தொகை யென்னமோ? பெருந்தொகையா யிருக்கே—

வி. அதற்காகப் பொய்யாகப் பிரமாணம் செய்யலாம்போ லிருக்கிறது?

சு. என்ன இப்படிப் பேசுகிறீர் இழவு?—நீர் அஷ்டப்பிராப்தியாக அந்த இழவு அறுபதினாயிரம் ரூபாய் கொடுத்தது உண்மைதானே?

வி. ஆம்.

சு. அவள் பெற்றுக்கொண்டு கையெழுத்துப் போட்டதும் உண்மைதானே?

வி. உண்மைதானென்று நினைக்கிறேன்

சு. அப்படியிருக்க, கையெழுத்துப் போடும்பொழுது பார்த்தேன் என்று ஒரு வார்த்தை சொல்வதில் என்ன தவறு?

வி. அதுதான் பொய்யாகும்—நான் பார்க்கவே யில்லையே.

சு. சரி—அப்படி—இழவு, ஒரே பிடிவாதமா யிருப்பதானால் அந்த அறுபதினாயிரம் ரூபாயும் வட்டியும் போனதுதான்!—போதாக் குறைக்கு—இழவு—பிரதிவாதியின் செலவையும் நீங்கள் கட்டிக் கொடுக்கவேண்டும்—நான் சொல்லவேண்டிய இழவைச் சொல்லிவிட்டேன—பிறகு உங்கள் பாடு—என்ன சொல்லுகிறீர்?

வி. முன்பு சொன்னதுதான்.

சு. என்ன பிள்ளையவாள்—மாப்பிள்ளைக்கு நீங்களாவது கொஞ்சம் புத்தி சொல்லக்கூடாதா? அவருக்கு இள வயதாகையால், பொருள் அருமை தெரியவில்லை—அறுபதினாயிரம் ரூபாய் போவதென்றால இலேசான இழவா?

தா. [தழுதழுத்து] அப்பா—விஜய—ரங்கம்.

வி. [கோபத்துடன்] மாமா! என்ன—நீங்களும்!

தா. பரமேசுவரா! உகிரச் சுற்றினமேல் உரல் விழ்வதேபோல், ஒன்றின்மேல் ஒன்றாய் வருகிறதே—இப்படியும் எங்களைச

சோதிக்கிறீரா? நாங்கள் எந்த ஜன்மத்தில் என்ன பிழை செய்தோமோ? **[கண்ணீர் விட்டழுகிறார்]**

வி. மாமா! உம்முடைய மனதை திடப்படுத்திக்கொள்ளுங்கள்—மூன்றரை லட்சம் போனதிற்கு இவ்வளவு துக்கப்படவில்லை—கேவலம் இந்த அறுபதினாயிரத்திற்காகவா இவ்வளவு துக்கப்படுவது தாம்?

சு. அதென்ன இழவு ஐயா அது, மாப்பிள்ளை?

வி. இக் கடிதத்தைப் பாரும்.

சு. **[அவசரமாய்ப் படித்துப் பார்த்து]** அடடா! பேரிழவாயிருக்கிறதே!—இதற்கென்ன செய்யப்போகிறீர்கள்?

வி. எங்களிருவருடைய சொத்துக்களையெல்லாம் விற்று, இந்த நஷ்டத்தை அடைக்கப் போகிறோம்.

சு. ஐயோ பாபம்!—என்ன இழவாயிருக்கிறது!—இந்த சமயத்திலே அந்த அறுபதினாயிரம் ரூபாய் கைக்கு வந்தால—

வி. ஐயா, தாங்கள் தயவுசெய்து விடை பெற்றுக்கொள்ளுங்கள்—எனக்குக் கோபம் வரும்படி செய்யாதீர்.

சு. இந்த இழவைத்தான் கலிகாலம் என்கிறது! நன்மையைச் சொன்னால் கோபம் வருகிறதே!—நான் வருகிறேன்.—பிள்ளையவாளுக்கல்லவா, எனக்குச் சேரவேண்டிய பீசு இழவில் கொஞ்சம் பாக்கி யிருக்கிறது—எனக்கு இந்தச் சமயம் செலவின் பேரில் செலவாக வந்து சேர்ந்தது இழவு—ஆகவே—

வி. ஐயா! தாங்கள் ஒன்றும் பயப்படவேண்டாம். ஒரு காசும் பாக்கியில்லாமல் கொடுத்தனுப்புவார்.

சு. அதற்குச் சந்தேகப்படவில்லை நான—இந்தச் சமயம் கேட்டேன் என்று என்மீது வருத்தம் வேண்டாம். இந்தச் சமசார செலவென்றால—அவ்வளவு கஷ்டப்படுத்துகிறது அந்த இழவு—என்ன செய்கிறது?—நான் வருகிறேன.

[போகப் புறப்படுகிறார்.]

அவசரமொன்றுமில்லை—எதற்கும் நாளைக் காலையில் குமாஸ்தாவை அனுப்பவா?

தா. அனுப்புங்கள்.

சு. நான் வருகிறேன். உங்கள் உடம்பை ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ளுங்கள்.

[வாயில் வரையில் போய், திரும்பிவந்து]

நாளைக்கு எப்படியாவது பார்த்து அந்தப் பீசு பாக்கியைக் கொடுத்தனுப்பிவிடுங்கள்—என் கடைசி பெண்ணிற்கு—ஒரு கலியாணம் இழவுக்கு நாள் குறித்துவிட்டேன்—அதற்காகத்தான் உங்களுக்குக் கஷ்டம் கொடுக்கவேண்டி யிருக்கிறது.

தா. உங்களுக்குச் சேரவேண்டிய பாக்கி—எவ்வளவு ?

சு. ஏ—எழுபத்தைந்து ரூபாய்தான்.

வி. ஆனால் இன்றைக்கே—இப்பொழுது உமமுடைய குமாஸ்தாவை அனுப்பும்—அனுப்பிவிடுகிறேன்.

சு. அப்படி அவசரம் ஒன்றுமில்லை—இந்தக் கலியாண இழவு ஒன்று வந்ததில் கொஞ்சம் கஷ்டமா யிருக்கிறது—இல்லாவிட்டால் இதை ஒரு பொருட்டாகக் கேட்கவுமாட்டேன். என்மீது கோபம் வேண்டாம்.

வி இல்லை, இல்லை.

சு. நான் வருகிறேன். [போகிறார்.]

வி. இப்படியும் இருக்குமா உலகம் ?

தா. அதுதான் எனக்குப் பெருங் கவலையா யிருக்கிறது —உலகத்தின் கஷ்டம் இன்னதென்று தெரியாது வளர்ந்து வந்தாய் இதுவரையில—அப்படிப்பட்டவனைக் கஷ்டசாகரத்தில் மூழ்கதிவிட்டாரே கடவுள் !—எப்படி அவர் கரையேறப் போகிறாரோ ?

வி. மாமா, அதையும் அனுபவித்துப் பார்க்கவேண்டுமென்று கொஞ்ச நாளாக எனக்கு ஆவலிருந்தது. அது கைகூடும் சமயம் வந்தாற்போ லிருக்கிறது—இது எனக்கு சந்தோஷத்தைத் தருகிறது.

தா. அப்பா ! அப்படிச் சொல்லாதே—இந்த உலகத்தின் கஷ்டம் இப்படிப்பட்டது என்று நீ அனுபவித்திருந்தால், அப்படிச் சொல்லமாட்டாய்.

வி. ஊம்—பார்ப்போம.

தா. விஜய ரஙகம—என் மார்பு நோய் அதிகமா யிருக்கிறது. கொஞ்சம ஆளை அனுபபு, அநத வயிததியரை சீககிரம வரவழை.

வி. இதோ போய் அனுப்புகிறேன். [விரைந்து போகிறான்]

[தாமோதரம் பிள்ளை நாற்காலியில் சாய்ந்துகொள்ளுகிறார்]

காட்சி முடிகிறது.

மூன்றும் காட்சி.

இடம்—ஒரு படுக்கை வீடு

ஒரு புறமாக மஞ்சததின்மீது மங்கையர்க்கரசி படுத்து உறஙகுகிறாள்

மற்றொருபுறம் மூலையில போட்டிருககும் ஒரு சிறு மேஜையின் பககததில விஜயரங்கம் உட்கார்நதுகொணடு எழுதியவண்ணம இருககிறான்.

வி. என்ன உலகம! என்ன உலகம!—இறநது போனவன் முன் அவா கூறியது உணமைதான.—உலகிலுளள தீமை இப்படிபபட்டது என்று இன்னும நன்று யறிநதிலன் நான—ஆயினும இப்பொழுது இநதப பதினாறு நாளாகத தெரிநததே போதுமபோ லிருககிறதே!—ஒருவனாவது முற்றிலும யோககியனா யிரானா?—என மாமனுருககாக என் சொதது முழுவதையும இக கடனகாரரகளுககுக கொடுததும, ஒருவனாவது என உணமையான மன நிலைமையை அறிநதவனைகக காணவிலலையே!—எல்லோரும நான ஏதோ அதிகமாக ஒளிததுவைதது, மேலுககுப் பாசாஙகு செய்வதாகவலலவோ எணணுகிறார்கள்!—பண ஆசை பிடித்த இவர்கள்தான இப்படியோ, அல்லது உலக மடஙகலும இபபடிததானோ? எலலாம் சீக்கிரததில அறிகிறேன்—இன்னும யாருககாவது எழுதவேண்டியது இருக்கிறதா?— என்ன அது?— விழிததுககொண்டாளா என்ன?—விழிததுககொண்டாலும பெரிதலல—வழககத்

தைப்போல் ஏதோ காகிதத்தில் கிறுக்கிக்கொண்டிருக்கிறேன் என்று எண்ணுவாள்!—என் மனைவியே என் மனத்தை யறியாமற்போனால், உலகம் எப்படி அறியும்?

[வீதியில் ஒரு பிச்சைக்காரன் மாலைக்கவளம் தாயே! என்று கூவிவிட்டுப் பாடுகிறான் "வாழ்வாவது மாயம்"]

வாஸ்தவம்!

பி. [வெளியில் பாடுகிறான்.]
"இது மண்ணாவது திண்ணம்"

வி. நிரம்ப வாஸ்தவம்!
[பரஞ்சோதி வெளியிலிருந்து] 'யாரடா அப்பா அது? எல்லோரும் படுத்துக்கொண்டார்கள் இப்பொழுது.—'

வி. பரஞ்சோதி! வா இப்படி—[தனக்குள்] இவன் இன்னுமா விழித்துக்கொண் டிருக்கிறான்?

பரஞ்சோதி உள்ளே வருகிறான்.

வி. பொறு! அவன் பாட்டை முடிக்கட்டும்.

பி. [வெளியில் பாடுகிறான்]
"பாழ்போவது பிறவித்துயர் பசிநோய்செய்த பறிதான்,
தாழாதறஞ் செய்மின் தடங்கண்ணான் மலரோனும்
கீழ்மேலுற நின்றான்திருக் கேதார மெனீரே".

வி. பரஞ்சோதி, அவனுக்கு ஏதாவது சாதம் போட்டு அனுப்பு—ஊம்—அனுப்பிவிட்டு நீ போய் படுத்துக்கொள்—இந்தக் காகிதங்களை யெல்லாம் மேல்விலாசப்படி நாளைக்குச் சரியாகக் கொடுத்துவிடு.

ப. எசமான் உத்தரவு. [போகிறான்.]

வி. என்ன விந்தை! இந்தப் பாட்டை, இந்தப் பிச்சைக்காரன் எத்தனையோ நாளாகப் பாடக் கேட்டிருக்கிறேன். இன்று பட்டதுபோல இதன் பொருள் என் மனத்தில் இதுவரையிற் படவேயில்லை. வேறு புதிய அர்த்தம் எவ்வளவோ தோற்றுகிறது இதில் இப்பொழுது!—இப் புஸ்தகமொன்றை நம்முடன் கொண்டு போகவேண்டும்.

[எழுந்து ஒரு புஸ்தகத்தை தன் மூட்டையில் வைத்துக் கட்டுகிறான்.]

இன்னும் நான் செய்யவேண்டியது என்ன இருக்கிறது ?

[உலாவுகிறான்.]

நான் சிறுவயதில் பள்ளிக்கூடத்தில் நாடகமாடக் கற்றுக் கொண்டது எவ்வளவு உபயோகமாகிறது இப்பொழுது—நான் மாறுவேஷம் பூண !

[உறங்கும் மனைவியின் அருகிற் சென்று]

இந்த ஒரு வருஷகாலம் என்னைக் காணாது வருந்துவாளா ? நான் நினைக்கவில்லை. இந்த ஒரு வருஷம் அவள் சுகமாக வாழ்வதற்குத்தக்க ஏற்பாடுகள் எல்லாம் செய்திருக்கிறே னென்று என் கடிதத்தின் மூலமாகக் கண்டறிந்ததும்—கவலைப்படமாட்டாள் என்று நினைக்கிறேன். கண்ணிற படும்படியாக இந்தக் கடிதத்தை அருகில் வைக்கிறேன்.

[அப்படியே செய்கிறான்]

என்ன இது ? ஏதோ புஸ்தகத்தைப் படித்துக்கொண் டிருந்தாள்போலும் உறங்குமுன—என்ன புஸ்தகம் பார்ப் போம்.

[தலைக்கணை யருகிலிருந்த ஒரு புஸ்தகத்தை எடுத்து]

அடடா ! ‘ தோன்றிற் புகழொடு தோன்றுக !’ இதைப் படிக்கும்படியாக அவ்வளவு கற்றுக்கொண்டாளா ? உம் !—படிக்கட்டும்—

[அப்படியே வைத்து விடுகிறான்.]

என்ன மணி யிருக்கும் ?

[கடியாரத்தைப் பார்த்து]

ஓஹோ ! நாம் தீர்மானித்த மணியாகிவிட்டது. இனி புறப்பட வேண்டியதுதான்.

[விரைவில் மாறுவேஷம் பூணுகிறான்.]

நான் நடப்பது நான் எழுதும் கதைகளில் ஒன்றைப்போ லிருக்கிறது !—எப்படி முடிகிறதோ இது பார்ப்போம்—

[மனைவி யருகிற்போய்]

நான் வருகிறேன்.

[முத்தமிடப் போகிறான்.]

என்ன பிரயோஜனம் ? விழித்துக்கொண்டால் — பிறகு இந்த வேஷத்தை யெல்லாம் காண்பாளாயின் கஷ்டமாய் முடியும் !—இனிக் காலதாமதம் செய்யலாகாது !—

[ஒரு மூட்டையை எடுத்துக்கொண்டு கதவை மெல்லத் திறக்கிறான்.]

வெளியில் என்ன இருட்டா யிருக்கிறது! ஓ! அமாவாசை யல்லவா? ஒரு விதத்தில் இது நல்லதுதான்.

[வெளியே வீதிக்குப் போகிறான்.]

காட்சி முடிகின்றது.

இரண்டாம் அங்கம்

முதற் காட்சி

இடம்.—சென்னபட்டணத்தில் திருமெஞ்ஞான முதலியார் வீட்டில் மெத்தையின்மீதிலுள்ள ஓர் அறை.

விலையுயர்ந்த நாற்காலிகள், மேஜைகள், படங்கள் நிறைந்திருக்கின்றன.

விஜயரங்கம் வேலைக்காரன் உடையில் ஒரு மூலையில் நின்றுகொண்டு, வெற்றிலை கிழித்து ஒரு வெள்ளித் தட்டில் வைத்துக்கொண்டிருக்கிறான்.

வி. அடடா! தேதியைத் திருப்பிவைக்க மறந்தேன். அதற்காக இரண்டு திட்டு கேட்கவேண்டி வரும் இன்னும்—

[தேதியைத் திருப்பி வைக்கிறான்.]

இன்னும் நான்கு நாளிருக்கிறதா நமது வருஷம் முடிய? எப்பொழுது அந்த நான்கு நாளும் தொலையுமென்றிருக்கிறது. ஏறக்குறைய இவ்வுலகிலுள்ள எல்லாவிதமான கஷ்டங்களையும் இந்த ஒரு வருஷமாக அனுபவித்துப் பார்த்தேன். தெருத் திண்ணைகளில் தூங்கினேன், பசியால் களைப்புற்றேன், வெயிலிலும் மழையிலும் அடிபட்டேன், எல்லாவிதமான கஷ்டத்தையும் அனுபவித்தேன்! அவைகளெல்லாம் எனக்கு ஒரு விதத்தில் சந்தோஷத்தையே தந்தது. இந்த ஒரு வருஷமாக நான் சந்தித்த மனிதர்களும் ஸ்திரீகளுமே எனக்கு வருத்தத்தை யுண்டுபண்ணினார்கள். உலகம் இவ்வளவு பாழானது என்று இப்பொழுதுதான் அறிகிறேன். இப்படி யிருக்குமென்று முன்பு நான் கனவிலும் எண்ணியிருக்கமாட்டேன். ஒரு மனிதனிடத்தி

லாவது—ஒரு ஸ்திரீயிடத்திலாவது—ஏதாவது ஒரு தீமை யேனும—தீய குணமேனும—இல்லா திருககுமா ?—இதைத்தானே நமது பூர்வீகர் கலிகாலமென்று கூறினர் ? இது போனும் போகிறது.—எவர்களாவது சிறிது நற்குண முடையவர்களாக இருந்தால், அவர்கள முன்னுக்கு வருவ தாகக காணேம ! அவாகளெலலாம வறிஞர்களாயும புகழற் றவர்களாயும காலம் கழிககினறனர். தர்மம தலையெடுககக் காணேமே ! பாபமே மேலுககு வருகிறது. பாபிகளே விருததி யடைகினறனர். துாககுணமும, பாபமும எங்கே செறிந்திருககிறதோ, அஙகேயே ஐசுவரியமும, உலகததின் புகழும நிறைநதிருககினறன ! இபபடிபபட்ட புகழைக் கருதியோ திருவளளுவா 'தோனறிற புகழொடு தோன றுக' எனறு எழுதினர் ! இதைப பெறுதலைவிட நான பிறவாதிருததலே மேலாகும. இவவுலகம இபபடிபபட்ட தெனறு இபபொழுதுதான உணமையில அறிகிறேன ! சீ ! என்ன உலகம ! என்ன செலவம ! என்ன புகழ் !—நான் இவ வொரு வருஷமாக அனுபவிததவைதை யெல்லாம் எழுதினால நலல கதையாகும. கடடுக கதையில நான எழுதுவதைவிட நான கணணாரககணடது அதிக விநதையா யிருககும இநத நான்கு தினஙகளையும இவவிடம ஒழிதது விடடு நமது ஊருககுப போனவுடன இதையே ஒரு புஸ்தக மாக எழுதவேணடும நான இதுவரையிற படடதெலலாம எனககுப பாரமாகத தோறறவிலலை. இநத நானகு தினங களையும இநதப பாழும எஜமானனிடம எபபடி கழிககப போகிறேனெனபதே பெருங கவலையா யிருககிறது ! நற் குணமுடையவர்க ளெல்லாம நசிககக, இப பாழும பாபி சுக மாகச சகல சமபததுக்களுடன் வாழ்வதைப் பார்ககு மிடதது, பரமேசுவரன என்று ஒருவனிருபபதாக நான் எவ்வாறு நம்புவது ! ஏதாவது தீயகுண மில்லாதிருகக வேண்டுமே இவனிடம ! இவனது சிறறப்பாவை விஷம் கொடுததுக கொனறே, இவன் இப்பெருஞ செல்வததை யெல்லாம் பெற்றதாக ஜனஙகள கூறுவது, உண்மையாகததா

னிருக்கவேண்டும். தயை யென்பது இவனது பெரிய உடலில் எங்கேயாவது ஒரு அணுவளவேனும் ஒளித்துக் கொண்டாவது இருக்குமா என்று நானும் பார்த்து வருகிறேன் இத்தனை தினங்களாக! இப்படி யிருந்தும், இவன் என்ன துன்பம் அனுபவிக்கிறான்? எல்லாச் செல்வங்களுடன், மனைவி மக்களுடன், சுகமாக வாழ்ந்து வருகிறான்! பாபிகளுக்குத் தான் இப் பாழும் உலகம்! நமது பெரியோர்கள் முற்காலத்தில் இவ் வுலக வாழ்வை வெறுத்ததற்குக் காரணம் இதுதான் போலும்—

அன்னபூரணி கதவின் வழியாகத் தலையை நீட்டுகிறாள்.

அ. [மெல்லிய குரலுடன்] ஐயா, எசமான் சாப்பிட்டாச்சுதுங்களா?

வி. அம்மா! வந்தீர்களா மறுபடியும் நீங்கள்! ஐயோ! உங்களுக்கு எத்தனை தரந்தான் சொல்வேன்! நீங்கள் என்ன கேட்டபோதிலும் அவர் மனம் கரையப் போவதில்லை. எல்லாம் வட்டியுடன் சரியாகக் கொண்டு வந்திருக்கிறீர்களா!—பணமெல்லாம்?

அ. ஏறக்குறைய எல்லாம் கொண்டு வந்திருக்கிறேன்—ஒரு பன்னிரண்டு ரூபாய்தான் குறைகிறது—

வி. ஐயையோ! ஒரு காசும் குறைய வாங்கிக்கொள்ள மாட்டாரே அவர்! நீங்கள் என்ன அழுது கேட்டபோதிலும் பிரயோஜன மில்லை. ஒரு காசு குறைவாகக் கொண்டு வந்தாலும், உள்ளே விடக்கூடாதென்று எனக்குக் கட்டளையிட்டிருக்கிறாரே—நீர்தான் நேற்று அதைக் கேட்டீரே. அதோ சாப்பிட்டுவிட்டு கையலம்பிக்கொள்ளுவதுபோ லிருக்கிறது! தயவுசெய்து இங்கிராதேயும்—பிறகு இங்கே உம்மை உள்ளே விட்டதற்காக எனக்கு இரண்டு திட்டுதான் லாபம். வீணாக எனக்கும் ஏன் கஷ்டம் வைக்கிறீர்கள்? கொஞ்சம் தயவுசெய்து அப்புறம் போய்விடுங்கள்.—

அ. அப்பா, உன் முகவாய்க்கட்டையைப் பிடித்துக்கொள்ளுகிறேன். கொஞ்சம் நீயாவது என்மீது இரக்கங்கொள்ள

லாகாதா? என்னைத் துரத்திவிடாதே. அவர் வந்தவுடன் அவர் காலில் விழுந்தாவது கடைசி முறைகேட்டுப் பார்க்கிறேன். அவ்வளவு தயவுசெய் நீ—போதும்.

வி. சரி—நடக்கப்போகிற தென்னமோ எனக்குத் தெரியும்—அப்புறம் உங்கள் பாடு.—

திருமெஞ்ஞான முதலியார் எப்பமிட்டுக்கொண்டு வருகிறார். அவருக்குப் பின்னாக மனோன்மணி வருகிறாள்.

தி. அடே முத்தா!—

வி. இதோ வந்தேன்.

தி. எங்கேயடா வெற்றிலை?—

[**சாய்வு நாற்காலியின்மீது சாய்ந்து கொள்ளுகிறார்.**]

வி. இதோ.

தி. அடே! இவளை யாரடா இங்கே உள்ளேவிட்டது?—என்ன அன்னபூரணி, கொண்டு வந்தாயா ரூபாயெல்லாம் சரியாக?

அ. இதோ—கொண்டு வந்திருக்கிறேன்.

தி. ஆத்தெரி!—இப்போ என்னடி கிடைச்சுது! நேற்று என்ன பாசாங்கு போட்டாய் மாயக்கள்ளி!—கொண்டு வந்ததற்குமேல் ஒரு காசும் கிடையாது என்று ஒரே அழையாய் அழுதாயே, இப்பொழுது அந்த மிகுதிப் பணம் எப்படிக் கிடைச்சுது?—எண்ணி வை, சரியாக மேஜையின் மேல்—யாரை நம்பினாலும் நம்பலாம், இந்த கம்மினாட்டிகளை மாத்திரம் நம்பக்கூடாது.

அ. ஐயா, என்பேரில் கோபித்துக் கொள்ளாதீர்கள்—இதோ எரிகிறானே சூரியபகவான் அவனறியச் சொல்லுகிறேன், இந்த மிகுதிப் பணம் என் கூறைப் புடவையை விற்றுக் கொண்டு வந்தேன்.

[**ரூபாய்களை எண்ணிக் குவியல் குவியலாக வைக்கிறாள்.**]

தி. [**வெற்றிலையை விஜயரங்கம்கொடுக்க வாங்கி போட்டுக்கொண்டே**] **ஏன், அதை முன்பே செய்திருந்தால்?**

அ. எங்களவர்கள் மணப் புடவையோடு மயானத்துக்குப் போக வேண்டும் என்று சொல்வார்கள், அதற்காக வைத்திருந்தேன்.

தி. இப்பொழுது மாத்திரம் எப்படி விற்ருய் ?

அ. பெற்ற வயிறு கேட்கவில்லை—அதற்காகத்தான்—இல்லா விட்டால் அதை விற்பேனு ?

தி. அதற்கும் இதற்கும் என்ன சம்பந்தம் ?

அ. உங்களுக்குத் தெரியாதல்ல—எனக் கிருக்கிறது ஒரே பெண—மற்றதெல்லாம் வாரிக் கொடுத்துவிட்டு அனுதையா யிருக்கிறேன். அந்தப் பெண்ணுக்கு இரண்டு வருஷமாக ஒருவித க்ஷயம். அவள் இப்பொழுது ஏழுமாதமாகக் கர்ப்பமா யிருக்கிருள். வயித்தியர்கள் இந்தக் கண்டம் தப்புவது அசாத்தியம் என்கிருர்கள். இந்தக் கம்மலை மீட்டுக் கொண்டுபோய்—அவள் காதில் போட்டு, அவளுக்குப் பூ முடித்துப் பார்க்கவேண்டும் என்று பதறுகிறது.—இந்தப் பாழும் வயிறு !—அவளையும் வாரிக்கொடுப்பதற்கு முன்பாக!
[அழுகிருள்.]

தி. அழுகிறது அப்புறம் இருக்கட்டும்—எத்தனை ரூபாயை வைத்தாய் ? எழெட்டு குறைகிறாற்போ லிருக்கிறதே !—

அ. ஐயா ! ஐயா !—ஒரு பன்னிரண்டு ரூபாய்மாத்திரம் குறை கிறது !—அது மாத்திரம் பெரிய மனசு பண்ணவேண் டும்—உங்கள் காலைப் பிடித்துக்கொள்ளுகிறேன்.

தி. அப்படியா சமாசாரம் !—விடு காலை !—
[காலை உதறிக்கொண்டு]
கழுதை முண்டை ! நான் நேற்றெல்லாம் கிளிப்பிள்ளைக்குச் சொல்லுகிறதுபோல் சொல்லியும்— குறைவாகக் கொண்டு வருகிருயா ! அந்தப் பன்னிரண்டு ரூபாயையும் முன்னே வைக்கிருயா என்ன ?

அ. ஐயோ ! என்னிடத்தில் அதற்குமேல் அரைக்காசு மில் லையே ஐயா !—ஐயா ! பன்னிரண்டு ரூபாய்தானே ! லட் சாதிபதி உங்கள் கால் தூசுக்குக் காணுமா ? அதை மாத் திரம் மன்னித்துவிடலாகாதா ?

தி. ஊம் ஊம்! அதெல்லாம உதவாது! இந்த மாயாக்கள்ளித் தனமெல்லாம எனக்கு நன்ருகத் தெரியும. போய் எப்படியாவது கொண்டுவா அந்த பனனிரண்டு ரூபாயையும், திருட்டு முண்டே!

அ. தெய்வமே! தெய்வமே!—ஐயா, என்னிடத்தில் அந்த ரூபாய்க்கு ஏதாவது வழி யிருந்தால உங்களிடம இந்த வார்த்தை யெல்லாம் கேட்பேனு?—கொஞசம மனசு இரங்குங்களேன்? சாகக கிடக்கிருள என பெண்—அவள முகத்தையாவது பார்த்து, இந்தப பனனிரண்டு ரூபாயை மனனித்து விடுங்களேன்?

தி. பழய கதையை மறுபடியும படிக்கிறையா?—ஏண்டா மடையா! சரியாக ரூபாயெல்லாம கொண்டுவராவிட்டால் இங்கே உள்ளே விடககூடா தெனறேனே, ஏன் இவளை விட்டாய இப்பொழுது? தடிககழுதை! உனககென்ன உதை கேட்கிறதா என்ன?

அ. தெய்வமே! தெய்வமே!—ஐயா, அந்த பிள்ளையாண்டான பேரில் கோபித்துககொள்ளாதீர்கள—இந்த ஒரு வார்த்தை மாத்திரம தயவுசெய்து கேளுங்கள்—இந்த முனனூற்று எணபத்திரண்டு ரூபாயையும நீங்களே வைத்துககொள்ளுங் கள—அந்த கம்மலை இரண்டு நாள இரவலாகக கொடுங்கள். அவள காதில போட்டுப பார்த்துவிட்டு—கொண்டுவந்து கொடுத்துவிடுகிறேன்—பிறகு எப்பொழுது அந்தப பன் னிரண்டு ரூபாய் கிடைக்கிறதோ அப்பொழுது கொண்டு வந்து கொடுத்து நகையை மீட்டுககொண்டு போகிறேன.

தி. ஓகோ! அதுவரைககும என வட்டி நஷ்ட மாகிறதா? அந்த நஷ்டத்தை யார் கொடுககிறது? உனனேடு வாதா டிக்கொண்டிருக்க எனககு நேரமிலலை. உன்னைக கடைசி முறை கேட்கிறேன. அந்தப பன்னிரண்டு ரூபாயையும முன்னே வைககிருயா, இல்லையா? எங்கேயாவது முடிந்து வைத்துககொண டிருப்பாய.

அ. ஐயோ! இல்லையே!—

தி. ஆனால் இதை வாங்கமாட்டேன்—எல்லாம் மொத்தமாய்க் கொண்டுவா, போ!

[ரூபாயைக் கீழே தள்ளிவிடுகிறான்.]

அ. ஆ! ஆ!—இதுவும் என் விதியா!

[ரூபாய்களைப் பொறுக்கிக்கொண்டு]

சூரியபகவானே! இதையும் நீ பார்த்துக் கொண்டிருக்கிறாயே, அப்பா!

தி. ஏ! கழுதைமுண்டை! என்ன அதிகமாகப் பேசுகிறாய்! பேசாதே, வாயை மூடிக்கொண்டு உன் ரூபாயை எடுத்துக்கொண்டு போ! ஒரு வார்த்தை பேசினால், கழுத்தைப் பிடித்துத் தள்ளச் சொல்லுவேன்.

அ. [கைகூப்பி வணங்கி] ஐயா! கோபித்துக் கொள்ளாதீர்கள். என்னை மன்னியுங்கள்—ஏதோ வாய் தவறிச் சொல்லிவிட்டேன்! உங்கள் பேரில் தவறில்லை. போன ஜன்மத்தில் நான் யார் வயிறு எரியும்படி என்ன பாபம் செய்தேனோ அதை நான் இந்த ஜன்மத்தில் அனுபவிக்கிறேன். உங்கள்மீது குறை சொல்லி என்ன பலன்? என் தலைவிதி!—நான் வருகிறேன் ஐயா! [போகிறாள்.]

தி. ஒழிந்தது சனி!—அப்பா!

[நாற்காலியில் நன்றாய்ச் சாய்ந்து கொள்ளுகிறார்]

வி. [கீழே மூலையில் உருண்டோடிய ஒரு ரூபாயைக் கண்டெடுத்து] ஐயோ பாபம்! இங்கொரு ரூபாய் இருக்கிறது! இதை விட்டுவிட்டுப் போய்விட்டார்கள் அந்த அம்மா! இதைக் கொண்டுபோய்க் கொடுத்துவிட்டு வருகிறேன்.

தி. என்னடா மடையா! அகப்பட்டது லாபம் என்றிராமல், அவள் பின்னால் போய்க் கொடுப்பதா?

வி. எஜமான் மன்னிக்கவேண்டும்—இதோ வந்துவிட்டேன்.

[வேகமாய் வெளியே போகிறான்.]

ம. அப்பா, அந்த நாற்காலியின் கீழ் இன்னொரு ரூபாய் கிடக்கிறதப்பா.

தி. எடு எடு அதை !

[*மனோன்மணி அதை எடுத்துக் கொடுக்க, தன் மடியில் அதை மறைத்து வைத்துக்கொள்ளுகிறான்.*]

விஜயரங்கம் திரும்பி வருகிறான்.

தி. ஏண்டா, இதற்குள்ளாக வந்துவிட்டாய் ! என்ன, ரூபாயைக் கொண்டுபோய்க் கொடுத்தாயோ அல்லது நான் பார்த்து விட்டேனே யென்று கொடுப்பதுபோலக் கொண்டுபோய், மறைத்து வைத்துக்கொண்டு வந்துவிட்டாயோ ? என்ன, கேட்பதற்கு பதில் சொல்லாமலிருக்கிறாய், திருடா ?

வி. இல்லை—கொடுத்துவிட்டேன்.

ம. அப்பா, அந்த ரூபாயையும்—

தி. சத் !—பேசாமலிரு—அந்தச் சுதேசமித்திரனைப் படித்து ஏதாவது முக்கியமான சமாசாரம் இருக்கிறதா சொல்—அடே ! தடிக்கழுதை ! கொஞ்சம் விசிறு.

[*விஜயரங்கம் விசிறுகிறான்.*]

ம. [*பத்திரிகையைப் பிரித்துக்கொண்டே*] அவ்வளவு அழுதானே பாவம் ! அப்பா, அந்தக் கம்மலை இரண்டுநாள் இரவலாகக் கொடுத்தால் என்ன கெட்டுப்போகிறது, அப்பா ?

தி. மனோன்மணி ! இந்த விஷயங்களிலெல்லாம் நீ தலையிட்டுக் கொள்ளக் கூடாதென்று எத்தனை முறை சொல்லி யிருக்கிறேன்—உன் வேலையைப் பார்—படித்துப் பார்த்து ஏதாவது விசேஷமிருந்தால் சொல்—யாராவது செத்தார்களா பார்.—அடே ! தூங்குமூஞ்சி !—விசிறு நன்றாக.

ம. அப்பா ! அப்பா !— [*படித்துக்கொண்டே*]

திருநெல்வேலி பெருஞ் ஜனச்சேதம் '

தி. என்ன என்ன ! படி படி !

ம. [**படிக்கிறான்.**] ' திருநெல்வேலியிலிருந்து திருச்செந்தூருக்குப் புதிதாகப் போடப்பட்ட ரெயில் மார்க்கமாய், கிருத்திகையின் பொருட்டு, வெகு ஜனங்களுடன் இன்று காலை ஆறு மணிக்குப் புறப்பட்ட ஸ்பெஷல் வண்டி, இடையில

ஒரு பாலம் ஒடிய, வண்டிகளெல்லாம் ஒன்றின்மேல் ஒன்றாய் விழ, உயிர்ச் சேதத்தையும் பொருட் சேதத்தையும் உண்டு பண்ணிவிட்டது. இதுவரையில் அகப்பட்ட கணக்கின்படி இருபது பெயருக்குமேல் இறந்துபோய்விட்டிருக்கிறார்கள்—காயம்பட்டவர்கள்—நூறு பெயருக்குமேல் இருக்கும்.'

தி. அடடா! இறந்துபோனவர்கள் பெயர் என்னவாகிலும் இருக்கிறதா பார்!—நம்முடைய கடன்காரன் எவனாவது இருக்கப் போகிறான் அதில்!

ம. [படித்துக்கொண்டே] 'இறந்தவர்களுக்குள் அடையாளம் கண்டுபிடிக்கப்பட்டவர்கள், வக்கீல் காந்திமதியாபிள்ளையும் அவர் மனைவியும், மிட்டாதார் சோமசுந்தர செட்டியார், மேற்படியாருடைய இரண்டு பிள்ளைகள், சென்னபட்டணம் முருகேச செட்டியார், பாளையங்கோட்டை குமாரசாமி முதலியாரும் அவருடைய தாயாரும்—காயப்பட்டவர்கள்—'

தி. போ!—செத்துபோனவர்களில் நமக்கு ஒருவரும் பாக்கியில்லை.

ம. அப்பா அப்பா! இதைக் கேளுங்கள்—

[படித்துக்கொண்டே]

'இதில் ஓர் ஆச்சரியம்—ஒடிந்த வண்டியின் சாமான்களை யெல்லாம் எடுத்துக்கொண்டு வரும்பொழுது—ஒரு சிறு காயமும் படாமல் ஒரு ஸ்திரீயும் அவளது மடியில் ஒரு பச்சைப் பாலகனும், கண்டெடுக்கப்பட்டார்கள். விசாரித்ததில் அவர்கள் 'தோன்றிற் புகழொடு தோன்றுக' முதலிய சிறந்த புஸ்தகங்கள் இயற்றிய, தற்காலம் தேசாந்தரம் போயிருக்கும் நூலாசிரியராகிய திருநெல்வேலி விஜயரங்கம் பிள்ளையின் மனைவியும் குழந்தையும் என்று கண்டறிந்தோம்.'

தி. போகட்டும்!—அந்தமட்டும். அவன் தன் மாமன் பட்ட கடனை யெல்லாம் நமக்குக் கொடுத்துவிட்டான்—அடே! விசிறுவதில் ஒய்யாரம் என்ன? பனுவில் கீழே விழுந்து

விட்டதோ? எடு தூங்குமூஞ்சிக் கழுதை!—இப்படிக் கொண்டுவா அம்மா, பத்திரிகையை.

[மனோன்மணி பத்திரிகையைக் கொண்டுவந்து கொடுக்கிறாள்.]

அடே! விளக்கைக் கொண்டுவா இப்படி.

[விஜயரங்கம் விளக்கை எடுத்துக்கொண்டு வரும்பொழுது, கை நடுக்கமுற்றுக் கீழே விட்டுவிட, அது உடைந்து போகிறது]

தடிக்கழுதை! [விஜயரங்கத்தின் கன்னத்தில் புடைக்கிறான்.]
அவ்வளவு அஜாக்கிரதையா?

வி. அப்பா!— [பல்லைக் கடித்துக் கொண்டு]
பாநுசோதி! பாநுசோதி!

தி. அது யாரடா அவன் பாநுசோதி? உன் பாநுசோதி, உடைந்துபோன விளக்கை வாங்கிக்கொண்டு வந்து வைக்கப் போகிறானா? இந்த நஷ்டத்தைக் கொடுக்கப்போகிறானா?

வி. இல்லை—புத்தி வந்தது!—இந்த நஷ்டத்தை நானே கொடுத்துவிடுகிறேன்.

தி. எங்கிருந்தடா கொடுக்கப்போகிறாய்! இந்த மாச சம்பளத்தின் வாயில் மண்தான!

வி. எசமான், கோபித்துக் கொள்ளவேண்டாம்—இந்த மாச சம்பளத்தை அப்படியே எடுத்துக் கொள்ளுங்கள்.

தி. அப்புறம்?—நீ சாப்பாட்டிற்கென்ன செய்வாய்? ஏதாவது திருடுவாயோ?—உனக்குக் கொழுத்துப்போயிருக்கிறது, அதுதான் இவ்வளவு அதிகப்பிரசங்கித்தனமாகப் பேசுகிறாய்.—உன்னை வேலையினின்றும் நீக்கிவிடுகிறேன் பார்!

வி. எஜமானுக்கு அந்த கஷ்டம் வேண்டியதில்லை.—நானே நின்று விடுகிறேன்.

தி. என்னடா அது? உனக்கென்ன பயித்தியமா பிடித்திருக்கிறது?

வி. ஒருவித பயித்தியந்தான்—என்று நினைக்கிறேன்.

தி. ஆனால் இந்த க்ஷணமே போ, வீட்டைவிட்டு!

வி. உத்தரவுப்படி. [வீட்டினுள்ளே போகப் பார்க்கிறான்.]

தி. உள்ளே எங்கேயடா போகப் பார்க்கிறாய் ?

வி. என் மூட்டையொன் றிருக்கிறது—அதை எடுத்துக்கொண்டு போக.

தி. ஓகோ! அதெல்லாம் உதவாது—வா இப்படி—இப்பொழுது நீயாக நின்று போகிறாய்—ஒரு மாசம் நோட்டீஸ் கொடுக்காமல்—ஆகவே உனக்கு இந்த மாச சம்பளம் கிடையாது சட்டப்படி—ஆகவே அந்த ஒடிந்த விளக்கின் விலையைக் கொண்டுவந்து கொடுத்துவிட்டு, அந்த மூட்டையை யெடுத்துக் கொண்டுபோ.

வி. அப்படியா சட்டம் ?—அப்படியே—பார்க்கிறேன்—

[விரைந்து வீட்டிற்கு வெளியேபோகிறான்.]

தி. இவனுக்கென்ன உண்மையில் பயித்தியம் பிடித்திருக்கிறதா என்ன ?—இந்தா அம்மா—மனோன்மணி—அவன் மூட்டையை எங்கே வைத்திருக்கிறான் தெரியுமா உனக்கு ?

ம. தெரியும் அண்ணா—இரண்டாம் கட்டில் விளக்குகள் வைக்கும் அறையில்.

தி. அதைப் போய் எடுத்துவா இப்படி

ம. ஏன் அண்ணா ?

தி. சொன்னபடி செய் முன்பு.

[மனோன்மணி உள்ளே போகிறாள்.]

இவன் வந்தது முதல்—ஏதோ எனக்குச் சந்தேகமாகவே இருந்தது—இவன் பேசுவதும் நடப்பதும் சாதாரண வேலைக்காரர்களைப்போல இல்லை—ஒருவேளை நம்மிடம் ஏதாவது திருடவேண்டி—எங்கே என் சொத்துக்களை யெல்லாம் வைத்திருக்கிறேன் என்று கண்டுகொண்டுபோக வந்தவனோ?

மனோன்மணி ஒரு சிறு மூட்டையை எடுத்துக்கொண்டு மறுபடியும் வருகிறாள்.

ம. இதோ அப்பா—வேலையிலிருந்துதான் தள்ளிவிட்டீர்களே—இந்த மூட்டையை அவனுக்குக் கொடுத்துவிடுகிறதுதானே, அப்பா ?

தி. [மூட்டையை அவிழ்த்து] எல்லாம கொடுக்கத் தெரியும—புஸ்தகங்கள் !—தேவார த திரட்டு !—தாயுமான சுவாமிகள் பாடல் ! படடினததுப பிள்ளையார் சரித்திரம—பகவதகீதை மொழி பெயர்பபு !—தோன்றிற் புகழொடு தோன்றுக—

[உள்ளே முதல் பக்கததைத் திருப்பிப்பார்த்து]

அடடா !—இப்பொழுது தெரிகிறது !

ம. என்ன அப்பா ?

தி. ஒன்று மில்லை. [கவலையோடு நிற்கிறான்.]

காட்சி முடிகிறது.

இரண்டாம் காட்சி

(இடம்—சென்னபட்டணம் கடற்கரை யோரம்

சமுத்திர ஸ்நானததிற்காக ஜனஙகள் ஒரு பாதை வழியே திரளாய்ப் போய்கொண் டிருக்கிறார்கள். சந்திரன் சற்றேறககுறைய பூரண கிரஹணததினால் பீடிக்கப்பட்டு இருண் டிருக்கிறது பாதையின் ஒரு பக்கமாக கிருஷ்ண நாயக்கர் என்னும் வயோதிகன் ஒரு பிட்டிலைக் கையில் வைததுக்கொண்டு வாசிததுக்கொண்டும் பாடிக்கொண்டு மிருககிறான் அவன் எதிராக ஒரு வெள்ளைததுணி பரப்பப் பட்டிருககிறது. அதன் ஒரு மூலையின்பேரில் ஒரு தகர விளககு எரிந்துகொண் டிருககிறது. சில ஜனஙகள் அவனைச் சுற்றிலும் நின்றுகொண்டு அவன் பாட்டைக் கேட்டு, பரப்பியிருக்கும் துணியின்மீது தம்பிடி, பைசா, போடுகின்றனா. ஒரு போலீஸ் கான்ஸடபில் அருகில் சுற்றிகொண டிருககிறான்.

மற்றொருபுரம் ஜனசந்தடி யில்லாதவிடததில் விஜயரங்கம் தன் முகததைத துணியால் பாதி மூடியவண்ணம் சந்திரனை நோககி நிற்கிறான். அவனுககுப் பின்னால், சற்றுத் தூரத்தில் ராஜேசுவரி சாதாரண ஆடை யுடுத்தி முககாடிட்டு ஒருவருமறியாதபடி ஒதுஙகி விஜயரஙகத்தை உற்றுப் பாாததவண்ணம் அசைவற்று நிற்கிறாள்.

வி. [தனக்குள்] சற்று முன்பாக பூரண கலைகளுடன் அழகாய் விளங்கிய சநதிரன் இபபொழுது கிரஹணத்தினால் பீடிக்கப்

பட்டு என்ன இருண்டு காட்டுகிறான்! இவ்வுலகில் சுகமும், புகழும், வாழ்வும் இத்தன்மையனவேபோலும்! இவைகளின்பொருட்டு, ஒருவன் கஷ்டப்பட்டு கல்வி கற்பானேன்? தன் ஐம்பொறிகளையும் அடக்கித் தர்ம மார்க்கத்தில் நடப்பானேன்? நற்குணமுடையவனா யிருப்பானேன்? இதனால் நான் பெற்ற பலன்? இக்கதி யடைந்ததே!—என் சொந்த மனைவி!—அவளது குறைகளையெல்லாம் பொறுத்து என்னுமியன்ற அளவு அன்பு பாராட்டி வந்த—என் சொந்த மனைவியே—எனக்குத் துரோகி யாயினளே!—நான் என்ன பாப மிழைத்தேன் இக்கதிக்கு வருவதற்கு? வேறு ஜன்மத்தில் இழைத்த பாபத்தின் பலனோ இது? ஐயோ! அப்படி எண்ணுவதற்கு என் அறிவிற்கு ருஜு ஒன்றும் அகப்படவில்லையே! அப்படி யிருக்குமாயின் அப் பாபம் இழைக்கும்படி என்னை யேன் படைத்திருக்க வேண்டும் அந்த ஈசுவரன்? சரி! இந்தக் கேள்விக்குப் பதில் அந்த ஈசனைத்தான் கேட்கவேண்டும்! உடனே—இவ்வுடலாகிய கவசத்தைவிட்டுப் பிரிந்து அவரிடம் போய்க் கேட்டுப் பார்ப்போமே!—தற்கொலை புரியலாகாதென்று என்னுள்ளே ஏதோ ஒன்று க்ஷணத்திற்கு க்ஷணம் தடுக்கிறதே!—இல்லாவிடின் அப்பொழுதே என் வேலையையும்—என்னைப் பிடிக்கும் இவ்வுலகமெனனும் துக்கத்தையும்—முடித்திருப்பேன் க்ஷணத்தில்! சமுத்திர ஸ்நானம் செய்யும்பொழுது ஏதோ மூழ்கிவிட்டான் என்று உலகம் தீர்மானித்துவிடும்—சுலபமாய் முடிந்துவிடும்—அப்படி இதனுடன் எல்லாம் முடிவதானால்—நான் ஒரு க்ஷணமும் யோசிக்க வேண்டியதில்லையே! இதனுடன் எல்லாம் முடியும் என்பது என்ன நிச்சயம்? முடிந்தால் நலமே—முடியாவிட்டால்? மற்றவைகளோடு தற்கொலை புரிந்த இப் பெரும் பாப மொன்றையும் அனுபவிக்க வேண்டுமன்றோ மறு பிறப்பில்!—இப்படி யோசித்துக்கொண்டிருப்பேனாயின் எனக்குப் பித்தம் பிடித்துப் போம்! அப்படிப் பித்தம் பிடித்து இப் பாழுலகில் பலர் நகைக்க உழல்வதைவிட, இவ் வுடலைவிட்டுப்

பிரிந்து, அதனால் வரும் பாபத்தை மற்றொரு பிறப்பில் அனுபவித்தலே மேலாகும்—அப்பொழுதும் இக்கதி வாய்த் தாலோ ?—

க. [உரத்த சத்தமாய்] ஐயா ஐயா ! ஐயா ! ஐயா ! அறுக்கா தைங்க ! அறுக்காதைங்க ஐயா !

வி. யார அது ? பாபம் ! [கும்பலருகில் போகிறான்.]

போ-கா. வழியிலே பாடக்கூடாதின்னு எத்தனிதரம் சொல் றது ? எடுத்தும் போ, உன் பிடடலே !

க. அய்யோ ! ரெண்டு தந்தி அறுந்து போச்சே !—பன் னெண்டு அணா போச்சு ! ஐயா, சும்மா போகச்சொன்னா போவமாட்டேனா ? ரெண்டு தந்தியெ அறுத்தூடணுமா ?

போ-கா. அடே ! என்னா அதிகமா பேசரே ! இன்னம் அதிகமா பேசனா, அந்த மீதி தந்தி ரெண்டும் பூடும் !—

[கும்பலைப் பார்த்து]

என்னா ஐயா ! கும்பலிங்கே ! போங்க எல்லாம் !

[கும்பல் கலைகிறது, கான்ஸ்டபில் ஒரு பக்கமாகப் போகிறான்].

க. அரை மணி நேரமா பாடி, ஒண்ணரை அணா வந்தது ! இந்த பாவிக்கு ரெண்டணா எங்கிருந்து நான் கொடுப் பேன் !—தலைவிதி ! தலைவிதி ! நானு எங்கே இணணு போவே ? ரெண்டு தந்தி ! பனரெண்டணா ! பாவி ! பாவி !

வி. என் ஐயா ? இரணடணாவா கேட்டான ?

க. ஆமாம்-கையிலே இருந்தாலு அழுதிருப்பேன் அவனுக்கு ! இப்போ—பன்ரெண்டணா நஷ்டமாச்சி—இண்ணெக்கிவரும் படி வாயிலேயும் மண்ணு விழுந்தது !—

வி. கொஞ்சம் பொறும் ஐயா—இதோ வருகிறேன்.

[ஒரு புறமாகப் போய் போலீஸ் கான்ஸ்டபி லுடன் ஏதோ பேசுகிறான்]

போ-கா. [திரும்பி வந்து] ஏ ! கிழவா ! போனாலேபோகுது—ஒருபக் கமாக உக்காந்துகினு பாடு போ. [போய் விடுகிறான்.]

க. நான் என்னத்தெ பாடறது ! தந்தியேதான் அறுத்துத் தொலைச்சியே பாவி !

வி. ஐயா பெரியவரே, அந்த பிடடிலே இப்படிக் கொடுங்கள் பார்க் கலாம.

[அதை இரண்டு தந்திகளுடன் சுருதி செய்துகொண்டு]

எனககுக கொஞசம வாசிககத தெரியும-நீஙகள பாடுஙகள—நான் வாசிககிறேன.

க. நீ—யாரபபா நீ ?

வி. எலலாம அபபுறம சொலலுகிறேன்—நீஙகள பாடுஙகள.

க. அபபடியே.

[பாடுகிறான், விஜயரங்கம் வாசிககிறான், ஜனஙகள் மறுபடியும் கும்பலாகக கூடுகின்றனர்]

ஒரு மனிதன். நணணு வாசிககிறாணடா இவன !

மற்றொருவன். ரெணடு தநதியிலே வாசிககிறாணடா !

[அநேகர் பைசா, அரை அணு, இப்படிப் போடுகிறார்கள், கடைசியாகச சற்றுதூரமாகவே பின தொடர்ந்து வந்த ராஜேசுவரி ஒரு ரூபாயை பரப்பியிருககும் வஸதிரததில எறிகிறாள்].

வி. [அதை யெடுத்து] யாரா அமமா அது ?—தவறிப போடடு விட் டாறபோ லிருககிறது !—அரை அணு போடுவதற்கு பதி லாக—இருடடில தெரியாமல— இதோ— வாஙகிககொள ளுஙகள.

ரா. [மெல்லிய குரலுடன்] வேணடாம—பெரிதல்ல—நீஙகளே-எடுததுககொளளுஙகள.—

க. அமமா ! நீஙக மஹாராஜியா யிருககணும !

[ராஜேசுவரி விரைந்து ஒரு புற மாய்ப் போய்விடுகிறாள்]

ஒரு மனிதன். அது யார்டா அது, இநதப பாடடுககு ஒரு ரூபா கொடுததவ !

மற்றொருவன். ஏண்டா கொடுககககூடாது ? எஙகிடட ரூபாயிருநதா நானும கொடுததிருபபேனே !—ஐயா, அநதத தாயுமான வர் பாடலலே இனனொரு பாடடு—

[விளக்கு அவிந்து போகிறது.]

அடடா !—இநதாஙகையா தீககுசசி, கொஞசம் கொளுத் திக்குங்கோ !—

க. [விளக்கைக் கொளுத்தப்பார்க்க, அது மறுபடியும் அவிந்து போகிறது] ஓகோ! எண்ணெ ஆயிபூட்டாப்போலே யிருக்குது—என்ன அதிஷ்டம! ஐயா, கொஞ்சம் மன்னிச்சிக்குங்கோ—என் தொண்ணையும் கட்டிப்போச்சி.

[கும்பல விரைவில் கலைகிறது, கரிகிருஷ்ண நாயகன் துட்டை யெல்லாம் பொறுக்கி எண்ணுகிருன்]

அப்பா, நீ யாரு, இப்பவாவது சொல்லமாட்டாயா?

வி. தாதா, அதென்னத்திற்கு உமக்கு?—எவ்வளவு மொத்தம் சேர்ந்தது, தாதா?

க. ஒரு ரூபாய் பதினாலணையஞ்சு—அப்பா, இந்தா, இந்த ஒரு ரூபாயெ நீ எடுத்துக்கொ—

[கொடுக்கப் பார்க்கிருன்]

வி. [தடுத்து] தாதா, இதற்காகவா கேட்டேன் என்று எண்ணினீர்கள்?—எனக்கு ஒரு காசும் வேண்டாம்.— நீங்களே எடுத்துக் கொள்ளுங்கள்.—

க. அப்பா!—நீ யார?

வி. அது என் உங்களுக்கு?

க. அப்பா, அப்படியல்ல, நீ செய்த பெரிய உபகாரத்துக்கு, நான் என்ன செய்யப்போறேன்?—நீ இல்லாவிட்டா இண்ணைக்கு அந்த ஒண்ணரை அணாவோடே அழுது கொண்டே வீடு போயச் சேரந்திருப்பேன! உன்னாலேதான இந்தப் பண மெல்லாம வந்தது—ஒரு ரூபாயக்குமேலே எவ்வளவு ஒண்ணும இண்ணு தோணணாலும எடுத்துக்கோ- உன் இஷ்டப்பிரகாரம. எனக்குச சாதாரணமா நாலணா ஆப்பிடும—இந்தப் பன்னெண்டணா அறந்துபோன தந்திக்காக எடுத்து வைசசே—மீதி ஒரு ரூபாயெ உனக்குக் கொடுக்கறே—என மேலே கோவம வாணாம.

வி. தாதா, எனக்கு உங்கள் மீது கொஞ்சமும் கோபமில்லை. எனக்கு ஒரு காசும் வேண்டாம். நீங்கள் மறுபடியும துட்டை வாங்கிக கொள்ளும்படி கேட்டால்தான் கோபம வரும—

க. அப்பா, அது எனக்கு நியாயமில்லெ—ஏதாவது வாங்கிக் கொ—என் மனசு திருப்திககாவது. 'காலததினாற் செய்த நன்றி சிறிதெனினும், ஞாலத்தினும மாணப் பெரிது' இண்ணு படிசசிருககேன் ! நீ செய்த உதவிக்கி, உனக்கு என்ன கொடுததாலும தீராது—நானு உனககு ஒண்ணும செய்யாப் போனு பாவம—அநத ரொணம வேண்டாமெனக்கு—

வி. அடடா !—உம—ஆனல், தாதா, நான் ஒரு உதவி கேட்கி றேன் செய்கிறீர்களா ?

க கேளபபா, எனனலே முடியுமானு, மனசார செய்யறெ.

வி. ஆனல்—முதலில என்னை யார் என்று கேட்காதீர்கள்.

க. இலலையபபா—உன் இஷ்டம.

வி. இரண்டாவது—நீா ஏதோ படிததவராகத தோணுகிறது, பிரசை யெடுககுமபடியாக இநத கதிககு—எபபடி வநதீர்?— உணமையைச சொலலும.

க. ஐயோ ! அதை யேன் கேககறே—கேடடு வருநதப் படப் போறே—அவவளவுதான.

வி. உஙகளுககு வருநததஙதை தருவதானல—சொல்லவேண் டாம.

க. எனக கொண்ணும வருததமிலலெ-நீ கேட்டு வருததப்படப் போறியெ இண்ணு யோசிசசே

வி. பெரிதல்ல சொலலுஙகள.

க. நீ நெனைசசபடி நான் கொஞ்சம அநதஸ்திலே இருநதவன் தான. அபபா வேடிககையா இநத பிடடல எலலாம கற்றுக் கொணடேன. மொதல தாரம தபபிபபோக, இரண்டாநதாம் ஒரு பாவியெக கட்டிகினே. அவள நான் பெனஷன் வாங்கி கினபிற்பாடு, என் சொததையெல்லாம்எடுத்துக்கினு ஒருநாள் என் வேலககாரனேடே நடநதுவிட்டாள்—தான் பெத்த ஒரு பொண் கொழுநதையெ விட்டுடு — வெளியே சொன்னு வெக்கக் கேடெண்ணு—வாயெ மூடிகினு பேசா மெ இருநதுட்டேன். அநத கொழுநதையெ நானு வளர்த்து

வர்றேன் கஷ்டப்பட்டு. ராத்திரி காலத்திலே எங்கேயாவது இப்டி பாடி, தினம் நாலணு சம்பாதிச்சி, எம்பென்ஷ ஞேடசேத்து, அந்த கொழந்தையே காப்பாத்தி, சம்சாரம் பண்ணிகினுவர்ரேன்.

வி. அந்த குழந்தைக்கு என்ன வயசு ?

க. இப்பொதான்—பத்து வயசு—இந்த வயசுலே நான் கை உட்டேட்டா அதுங்கதி என்ன ஆவறது பாவம்! —அதோ கதி தான !—அதுக்காவத்தா இந்த வயசுலெ நான் கஷ்டப்பட றேன் இப்படி—இல்லாவிட்டால் எனக்கென்ன—எங்கேயா வது அன்னதான சமாஜத்துக்கு போனு—அவ்வளவு சாப் பாடு போடராங்க—

வி. தாதா—ஒரு கடைசி வேண்டுகோள்— இதை நீங்கள் மறுக் கவே கூடாது.—கையைப பிடியுங்கள்—

[தன மடியிலிருந்து ஒரு பையை எடுதது ஏழு எட்டு ரூபாயை கிழவன் கையில் கொட்டி]

இதை அபபடியே எடுததுககொண்டு, திருமபிப பாராமல் வீடு போயச சேருஙகள! ஒரு வாரத்தையும இனி பேச வேண்டாம—நான் வேண்டிககொளளுகிறேன.—

க. அபபா !—

வி. பார்ததீர்களா !

க. இலலே இல்லே—இதோ போகிறேன்—அபபா, அநதப் பர மேசுவரன்தா, உனனேயும் உன பெண்சாதி பிளளேகளேயும் காப்பாததணும—என் மனசு குளிர்நததுபோலே உன் மனசும் குளிர்நதிருக்கவேணும எபபொழுதும! [போகிறான்.]

வி. ஆம் !—என் உடல் குளிரநதிருக்கும சீக்கிரம !—என்ன பாழுலகம ! இக கிழவன் கதியும இப்படியா ? ரங்கநாதத் திறகும இவவாறன கதி ஏதோ சம்பவித்திருக்கவேண்டு மென்று தோன்றுகிறது !—இநத உலகத்தில் ஏன் ஸ்திரீ களேப் படைத்தான் அநத ஈசன் ?—இனி தாமதிப்பே னயின் எனக்கு முழுப் பயித்தியம் பிடித்துப்போம்— எல்லாம் அனுபவித் தாச்சுது—இது மாத்திரம் ஒன்று

மிருதி வைப்பானேன்?—'யானேதும் பிறப்பஞ்சேன் இறப்பதனுக்கென்கடவேன்' என்றா. அது என்ன அவ்வளவு கஷ்டமா?—அதையும் பார்த்துவிடுவோம்—அடா! சந்திரகிரஹணம் இப்பொழுதுதான் விடுகிறது!—

[சமுத்திரத்தை நோக்கி விரைந்து செல்கிறான்; மறைவிலிருந்த ராஜேசுவரி அவனைப் பின் தொடர்ந்து விரைந்து செல்கிறாள்.]

காட்சி முடிகிறது.

மூன்றாம் காட்சி

இடம்—அதே யிடம்.

கிரஹணம் விட்டுப் பூரணசந்திரன் பிரகாசிக்கிறான். ஜனக்கூட்டம் அதிக நெருக்கமாக இருக்கிறது.

சிலர். ஏன ஐயா! பொழைச்சிகிணுை? பொழைச்சிகிணுை?

மற்றும் சிலர். பொழைச்சிகிணு ஐயா! பொழைச்சிகிணுை. ஐயா!

முதல் மனிதன். அதெப்படி ஐயா பொழைச்சிகிவா! நானதான் அந்த மூணு கரையா நுங்க பொண்மா தூககிகினுவந்து போட்டதே பாததேனே! செததவன பொழைச்சிகிணுனே?

இரண்டாம் மனிதன். அடே, நானதான சொலறனே! நான் தான நேரா பாததூட்டு வநதேனே. அஙகே, ஒரு டாகடரா, எவனோ ஒருததன வநது, குபபுர கவுககப் போட்டு, வயததிலே அமுககிணு, வாய வழியா தண்ணியெலலாம வநதுது, அபபுறம மலலாககப் போட்டு கையே மடககி மடககி எனனமோ பண்ணு, நாலைஞசு பேரு ஆளுஙகளே ஒடமபெல்லாம நண்ணு தேய்க்கச சொன்னுன்.—

மு-ம. உசிர் வநதூட்டுதோ?

இ-ம. நான்தான் சொல்றனே! வந்துதுடா எண்ணு? பேச்சு மூச்சில்லாதெ கடநதெவன்—மூசசுவிட ஆரம்பிச்சா—

மூ-ம. நீ பாத்தியோ ?

இ-ம. அந்த டாக்டர்தான சொன்னுனே-மூச்சு வருது பொழச்சிகினு—இனிமேலே பயப்படவேண்டியதில்லெ என்னு —அநத பொம்மனாட்டி கிட்ட—

மூன்றும் மனிதன். யார் அப்பா அநத பொமமனாட்டி ?

இ-ம. எனககு தெரியாதுங்க—யாரோ பணககாரியாட்டம் இருககுது. அநத டாக்டருக்கு உடனே தன் கையிலே யிருநத மோதாரததெ கழட்டி கொடுததா.

மூ-ம. அநத கரையாருஙகளுககு ஒண்ணும கொடுககலேயோ ?

இ-ம. அவள் சொன்னபடியே ஒவவொரு கரையானுககும் ஒவ் வொரு சவரன் கொடுததா.

நான்காம் மனிதன். யார அநத பொமபளே ? அவனுக கென்ன மாரு பாதயயா ?

மூ-ம. அவன் பொணடாட்டியா ?

இ-ம. சே! இருக்காது அவனே பாததா ஏழையாட்டம் இருக்குது! இவள ரொமப பணககாரியா யிருக்கரா, பொடவெ மாததிரம சாதாரணமா கடடிகினிருநதாலும.

நா-ம. அநத மனுஷன யார என்னு தெரிஞ்சுதா ?

இ-ம. தெரியலே, போலீஸ்காரு கூட வநது கேடடாஙக, அநத பொமமனாடடி தனககு கூட தெரியாதெண்ணு.

நா-ம. அப்புறம அநத மனுஷன் என்னமாரு ?

இ-ம. மூசசு கொஞ்சம வர ஆரமபிசசவுடனே—அநத டாக டர் கமபினியாலே நண்ணு போதது, அபபடியே ஆஸ்பத திரிக்கு கொண்டுபோவணு மெண்ணு—

ஐந்தாம்-மனிதன். இல்லெ இலலெ—ஆஸ்பததிரிக்கு கொண்டு போவலெ—அநத பொமமனாட்டி தன வண்டியிலே அப் படியே தூக்கிகினுபோயி வைககச்சொல்லி, அநத டாக் டரையும கூட அழைசசிகினு பூட்டா—

மூ-ம. அவன் கூததியாரா இருககும என்னு நெனைககிறே.

[சிலர் நகைகின்றனர்]

ஐ-ம. ஏண்டாப்பா அந்த பொம்மனுட்டி பாவத்தெ கொட்டிக்றெ! அவள் அவ்வளவு தூரம ஓடிகிடி அலேஞ்சிகிலேஞ்சி கஷ்டப் பட்டில்லாபபோனு, ஆள—ஆசாமியெ—ஆப்பிட்டிருக்கமாட்டானே!—அநதமுட்டும யாரொ நல்ல புண்ணியவதி—பாவம! அவள்தான, இநத மனுஷனே யார் எண்ணு தெரியாதிண்ணுளே—

இ-ம. நான கிட்ட மூஞசியெ பாதகதே—அநத பிடடில வைசசிகினு கொஞச நாழிககு முனனே இஙகே வாசிசசிகினு இருநதேனடா அநத கெழவனேடே—அவன மூஞசாடட இருநதது.

மூ-ம. அடடே! அநத பொமமனுடடிதான, அவனுக்கு ஒரு ரூபா போடடாடா! இபப கியாபகம வநதுது!

ஆறும் மனிதன். ஊம! யாராயிருநதாலும நமககென்னு? அவன் தலேவிதி செடடியா யிருநதுது, பொழைசசிகினு—இததாம் உலகம என்றது!—யாாகிடடவாஞு ஒரு தீககுசசி இருககுதா?

மூ-ம. ஏன் ஐயா?

ஆ-ம. சுருடடு அவிஞசிப போசசி, இநத கல்பாவிலே—அததெ பதத வைககணும.

[போகிறார்கள்.]

காட்சி முடிகிறது.

நான்காம் காட்சி.

இடம்—சென்னபட்டணம் : தேனும்பேட்டையில்
ஒரு பஙகளாவின் நடு அறை.
மிகவும் ஒழுஙகாக அலஙகரிககப்பட்டிருக்கிறது.
ஒரு சாய்வு நாற்காலியில் சாய்ந்தவண்ணம் விஜயரங்கம்
இருககிறான்.
ஒருபுறமாக ராஜேசுவரி நிற்கிறாள்.
விஜயரங்கத்தின் பககத்தில் ஒரு நாற்காலியில்
டாக்டர் கிருஷ்ணராவ் உட்கார்ந்திருககிறார்.

கி. இனி ஒன்றாகும பயப்பட வேண்டியதில்லே அம்மா, இவ்வளவு சீககிரததில் உடமபு தேறிவிடும் என்று நான் நினேக்க

வில்லை. நான் கொடுத்த மருநதைவிட, நீங்கள் இவருக்கு மனத்தில ஒரு கவலையில்லாமல் பாதுகாதது வநததே, இவரை இவ்வளவு சீககிரத்தில் பூரணமாய் சுவஸ்தப்படுததி விடடதெனறு நம்புகிறேன.

ரா. சரிதான்!—நான் என்னசெய்தேன்?

வி. என் உயிரைக காபபாறறினீாகள—டாகடர், எனககாக நீங கள் இததனைநாளாக எடுததுக்கொண்ட சிரமததிற கெல்லாம்—இபபொழுது நான் வநதனந தான் செய்யககூடும—ஆயினும் உஙகளுக்குச சேரவேண்டிய தொகைககாக கணக் கனுப்பினல்—

கி. அனுப்புவதாவது? நேற்று தான் கணககுப்படி பணம் எல்லாம அனுப்பிவிடடீர்களே—இனறு நான வநதது சிநேக பாவத்திறகாக, இதை நான கணககிடமாடடேன்—எனக்கு நேரமாகிறது—நான வருகிறேன்.—இனிமேல கடலின ஆழத்தைப பார்க்காதீர்கள!

வி. இல்லை—வாருஙகள்—

கி. நான் வருகிறேன் அமமா—இனி பததியம கிததியம ஒன் றுமவேணடாம, அவா இஷ்டமானதைச சாபபிடடடும—இனி ஒன்றுமே பயமிலலை—எலலாம பரிசோதிததுப பார்த தேன்—நான வருகிறேன.

ரா. வாருங்கள. [டாகடர் கிருஷ்ணராவ் போகிறார்]

வி. அம்மா, எவவளவு கொடுததீாகள—டாகடருககு நேறறு?

ரா. அதையேன் கேட்கிறீாகள?

வி. முனபு—உடகாருஙகள—தயவுசெய்து — இததனை நாளின் கதை இனி உதவாது. நான கேடபதறகெல்லாம நீங்கள் தயவுசெய்து பதில சொலலித்தான ஆகவேண்டும. என் உடமபு பூரணமாய் சவுககியமாய்விடடதென்றும, இனி ஒரு பயமும இல்லையெனறும டாகடரே சொலலிவிட்டார்.

ரா. சரி—உங்களிஷ்டம—ஒரு கேளவி தவிர வேறு எது வேண்டு மென்றாலும கேளுங்கள் சொலலுகிறேன்.

வி. நான் கேட்கக்கூடாத கேள்வி என்ன ?—அதைச்சொல்லும், நான் கேட்கவில்லை.

ரா. நான் யாரென்று என்னைக் கேட்கவேண்டாம். வேறு என்ன வேண்டுமென்றாலும் கேளும், சொல்லுகிறேன்.

வி. உம்—சரி—உங்களிஷ்டம். — நான் யாரென்று தெரியுமா உங்களுக்கு ?

ரா. தெரியும்.

வி. நான் யார் ?

ரா. விஜயரங்கப்பிள்ளை — 'தோன்றிற் புகழொடு தோன்றுக' முதலிய கிரந்தங்கள் எழுதிய நூலாசிரியர்.

வி. [பெருமூச்செறிந்து] ஊம—எப்பொழுது இதைக் கண்டு பிடித்தீர்கள் ?

ரா. அன்று அந்த வயோதிக பாடகனுக்கு — தாங்கள் உதவி செய்தபொழுது.

வி. ஓ !—அந்த—பாடகனுக்கு—ஒரு ரூபாய் — கொடுத்தது— நீங்கள் தானே ?

ரா. ஆம்.

வி. ஏன் ?

ரா. என் சந்தேகம் நிவர்த்தியாகும் பொருட்டு—

வி. இதற்குமுன் என்னைப் பார்த்திருக்கிறீர்களா ?

ரா. இல்லை—அன்றுதான் முதல் முதல் நேரில் பார்த்தது — தாங்கள் சந்திரனை உற்றுப் பார்த்தவண்ணம் பெருமூச்சுவிட்டாகளே—இப்படிச் செய்வது யார் என்று எனக்கு சந்தேகம் பிறந்தது—தங்களைக் கவனித்துப் பின்தொடர்ந்தேன்— அதற்காக மன்னிக்கவேண்டும்—

வி. நீங்கள் சாதாரணமாய் உடுக்கும் ஆடையாபரணங்களுடன் இல்லையே அன்று ?

ரா. இல்லை.

வி. ஏன் அப்படி ?

ரா. நான் மாறுவேஷம் பூண்டிருந்தேன.

வி. மாறு வேஷத்தில—நீங்கள்—அன்று கடற்கரைக்கு வர வேண்டிய காரணம் என்ன ? சொல்லககூடுமா ?

ரா. கூடும்—நீங்கள் என்ன காரணத்திற்காக—அன்று அங்கு வந்நீர்களோ, அதே—யோசனையோடுதான் — நானும் வந்தேன்.

வி. என்ன !—நான் எதற்காக அவ்விடம வந்தேன் என்று தெரியுமா உனக்கு ?

ரா. தெரியும—காரணத்தை காரியத்தினால் ஊகித்தறியலாம் என்று நீங்களே உங்கள புஸ்தகத்தில் எழுதியிருக்கிறீர்களே !—

வி. அதே காரணத்தோடா நீங்கள அங்கு வந்நீர்கள் ?

ரா. ஆம.

வி. ஆயின—என்னை யேன் தடுத்நீர்கள் ?—காப்பாற்றினீர்கள் ?

ரா. நான் செய்யத் துணிந்தது தவறு—என்று எனக்கு தாங்கள் ரூபித்து—என்னைக் காப்பாற்றினதின பொருட்டு—நன்றியறிதலாக—

வி. நான ரூபித்தேனா ? உம்மைக் காப்பாற்றினேனா ?

ரா. ஆம — அன்று தாங்கள ஒரு பலனையும கருதாது அந்த வயோதிகனுக்கு உதவியதைக் கண்டபொழுது — என் மனத்திலிருந்த பெரும பாரம நீங்கியது—அது வரைக்கும் உலகம எனக்காகப படைக்கப்பட்டது என்று எண்ணியிருந்தேன்—அப்பொழுதுதான், உலகத்தின் நன்மைக்காக நான் படைக்கப்பட்டேன் என்பதை யறிந்தேன்—இந்த உண்மையை தங்களிடமிருந்து அறிந்தபின்—நான் எப்படி என்னுயிரை மாய்த்துக்கொள்வது ?—தமமையும எப்படித் தற்கொலை புரிந்துகொள்ளவிடுவது ?—என்ன யோசிக்கிறீர்கள் ?

வி. வேறொன்று மில்லை—அப்பொழுது நான் உமக்கு ஞானோபதேசம் செய்தேனா ? அல்லது இப்பொழுது நீர் எனக்கு ஞானோபதேசம் செய்கிறீரா, என்று யோசிக்கிறேன்,

ரா. நீங்கள் அவ்வாறு சொல்லக்கூடாது — நீங்கள் அன்று எனக்குச்செய்த மஹோபகாரத்திற்கு நான் எந்த ஜன்மத்திலும் தமக்கு நன்றி பாராட்டவேண்டும்—நான் அன்று உம்மைக் கண்டிராவிட்டால்—என் கதி என்னாயிருக்கும்? நான் இப்பொழுது எங்கிருப்பேன்?

வி. எதன்பொருட்டு—நீங்கள்—உங்கள் உயிரைப் போக்கத்தீர்மானித்தீர்கள் என்று நான்—கேட்கலாமோ?

ரா. [பெருமூச்செறிந்து] நான் சொல்லத் தடையில்லை — ஆயினும் இப்பொழுது தாங்கள் அதை அறியாதிருத்தல் நன்றென்றுதோன்றுகிறது. அறிவு துன்பம் பயப்பதானால் அறியாமையே மேலானது என்று தாங்களே எழுதியிருக்கிறீர்களே!

வி. ஆம் உண்மை—நான் ஏன் அதை அறிய விரும்ப வேண்டும்? என்ன புத்தியீனமை! நான் அவ்வாறு துணிந்ததற்குக் காரணத்தை உங்களிடம் கூற எனக்கு மனம் வரவில்லை, உங்களுடைய காரணத்தை மாத்திரம் அறிய விரும்புகிறேன்!—நான் உங்களைக் கேட்டது தவறு, என்னை மன்னிக்க வேண்டும்.

ரா. ஐயோ! நீங்கள் கேட்டதில் தவறொன்றுமில்லை.—ஆயினும்—இவ்விஷயத்தைப்பற்றி, இனிமேல் நாம் ஒன்றும் பேசுவதில்லை, என்று ஒரு ஏற்பாடு செய்துகொள்வோம்—என்ன சொல்லுகிறீர்கள்?

வி. அப்படியே ஆகட்டும்.—உங்களிச்சைப்படியே.

ரா. சரி—வேறு ஏதாவது பேசுவோம்.

வி. ஆம்—அப்படியே செய்வோம்—நீங்கள் இதுவரையில் எனக்காக எவ்வளவு பணம் செலவழித்திருக்கிறீர்கள்?—தயை செய்து சொல்லவேண்டும்—

ரா. [சிறுநகைப்புடன்] வேறே பேசவேண்டுமென்றால் — இது தானா?

வி. இல்லை, சொல்லுங்கள்.

ரா. அதையேன் கேட்கிறீர்கள்?

வி. உங்களுக்கு நான் பலவிஷயங்களிலும் கடன் பட்டிருந்த போதிலும், பணவிஷயத்திலும் கடன் பட்டிருக்க எனக்கிஷ்ட மில்லை.

ரா. அதை, நான் கொடுக்கவேண்டிய கடனாகபாவித்தாலோ ?

வி. அது தவறாகும்—என் வேண்டுகோளை மறுக்காதீர்.

ரா. ஐயோ ! நான் தங்கள் வேண்டுகோளை மறுப்பேனா ? அப்படியே ஆகட்டும்—பிறகு சொல்லுகிறேன் கணக்கை— இப்பொழுது வேண்டாம்.

வி. இப்பொழுதே அக்கடனைத் தீர்ப்பதற்காக நான் கேட்கவில்லை—அப்படிச் செய்யவும் எனக்குச் சக்தி யில்லை யென்பதை நீரே அறிந்திருக்கிறீர்கள் — ஆயினும் — இவ்வளவென்று தெரிந்திருந்தால் கூடியசீக்கிரத்தில் அதைத்தீர்க்க வேண்டுமென்பதே என் கருத்து.

ரா. அப்படியே செய்யுங்கள் — நான் கணக்கு வைக்கவில்லை— ஆயினும் ஞாபகமிருக்கும்வரையில் நான் கணக்கிட்டு மொத்தம் செய்து சொல்லுகிறேன்—கூடிய சீக்கிரத்தில்.

வி. ஆம்—கூடியசீக்கிரத்தில் சொல்லுங்கள்—

ரா. ஆம்—அதற்குமுன்பாக, அக்கடனைத் தீர்க்க ஓர் உபாயம் நான் சொன்னாலோ ?

வி. என்ன உபாயம் ?

ரா. நான் இப்பொழுது சொல்லப்போகிறதைக் கேட்டு என்மீது கோபித்துக்கொள்ளக் கூடாது.

வி. இல்லை, சொல்லுங்கள்.

ரா. நான் நேற்று உம்முடைய 'தோன்றிற் புகழொடு தோன்றுக' என்னும் கதையைப் படித்துக்கொண் டிருந்தேன்—அதை நான் படிப்பது பதினைந்தாவது முறையாகும் !—இச் சிறந்த கதையை நாடகமாக எழுதினால்—என்ன நன்றாகயிருக்கும் என்று நான் யோசித்துக்கொண்டிருக்கும் தருணத்தில்—தெய்வாதீனத்தால்—ஒரு நாட்டுக்கோட்டை ச் செட்டி வந்து சேர்ந்தான் — அவன் தற்காலத்தில் சென்னபட்டணத்தி

விருக்கும் நாடக கம்பெனிகளுக்கெல்லாம் மிகவும் சிறந்ததான லக்ஷ்மிவிலாச சபையின் ஏஜெண்டு—அவன் தனது கம்பெனிக்கு ஏதாவது புதிய நாடகம் எழுதித்தர வேண்டுமென்று வற்புறுத்தினான்—அவனுக்குச் சில சமயங்களில் நமது தேசத்துப் பழைய கதைகளை நாடகரூபமாக எழுதிக் கொடுத்திருக்கிறேன்—அதற்கு அவன் பணம் கொடுத்திருக்கிறான்—அவனை இன்று காலை வரச்சொன்னேன்—அவன் வரும் சமயமுமாயிற்று.—

வி. நாடகரூபமாய் எழுதினால் நன்றாயிருக்குமென்று நினைக்கிறீர்களா?

ரா. கொஞ்சமும் சந்தேகமில்லை அதைப்பற்றி, கதையாகப் படித்துப்பெயர் படிப்பதானால், நாடகமாக ஆயிரம் பெயர் சுலபமாகக் கண்டுகளிப்பார்கள். நீர் எழுதித்தான் பாரும்—என் வேண்டுகோளை மறுக்காதீர்—

வி. என்ன? என்னையா எழுதச் சொல்லுகிறீர்கள்? நீங்களல்லவோ எழுதப்போகிறீர்கள் என்று பார்த்தேன்.

ரா. சரிதான்! அது என் சக்திக்கு மேற்பட்டது—தம்மால்தான் முடியும் அது—தாம் எப்படியும் எழுதி முடிக்கவேண்டும் அதை—தமக்கு ஒரு கஷ்டமாகாது. ஒரு வாரத்தில் தாம் அதை எழுதிமுடிக்கலாம்—ஆகட்டும் என்று சொல்லுங்கள்—என் கடனையும் நீங்கள் தீர்க்கலாம், தாம் விரும்பியபடி சீக்கிரத்தில்.

வி. முயன்று பார்க்கிறேன்—எனக்கென்னவோ, நன்றாயிருக்குமோ இராதோ, என்று சந்தேகமாயிருக்கிறது.

ரா. எனக்கென்னவோ சந்தேகமாகவே யில்லை—

[கீழே முத்தையன் செட்டியின் குரல்
'அம்மா எங்கே யிருக்கிறாள்?']

அதோ! வந்துவிட்டான். நான் இங்கழைத்து வருகிறேன்—அவன் அசாத்தியன்—பணத்தைப்பற்றிப் பேசவேண்டிய விஷயம் என்னிடம் விட்டுவிடுங்கள்—

ஒரு வேலைக்காரன் வருகிறான்.

வே. அம்மா, முத்தையன் செட்டியார் வந்திருக்கிறார், உங்களைப் பார்க்கவரலாமா என்று கேட்டு வரச் சொன்னார்.

ரா. வரச்சொல். [வேலைக்காரன் போகிறான்.] அவன் எந்நேரமும் தன் நஷ்டத்தைப்பற்றியே பேசுவான்—சம்பாதிப்பதெல்லாம் லாபம்—பேசுவதெல்லாம் நஷ்டம்!

அ ர மு முத்தையன் செட்டி வருகிறான்.

மு. நமஸ்காரம்!

ரா. வாருங்கள் செட்டியார், உட்காருங்கள்—

மு. என்ன போங்கோ! இந்த வருஷம் கழுதே—நஷ்டத்தும் போலே நஷ்டமா வருதாங்கிறே!

ரா. என்ன ஐயா, புது நஷ்டம்?

மு. என்ன போங்கோ! நேத்துகாலமே முக்கால் ரூபாய்க்கு ஒரு புது செருப்பு வாங்கனே, சாயங்காலம் ஒரு நாய்க்குட்டி அதைக் கடிச்சுட்டுது—முக்கால் ரூபாய், பன்னெண்டணு—நஷ்டம்! செருப்பில்லாமலே நடந்து வந்திருக்கிறேங்களே இப்போ--

ரா. அது போனாற்போகிறது—இவா யார் தெரியுமோ உங்களுக்கு?

மு. ஏ!—தெரியலே—மன்னிக்கணும்.

ரா. இவா—[விஜயரங்கம் கண்ணாற் சைகை செய்ய] ஒரு பெரிய தமிழ் வித்வான்—உங்கள் கம்பெனிக்காக ஏதோ புதிதாய் நாடகம் எழுதவேண்டுமென்றீரே—இவரைக் கொண்டு அதை முடிக்கலாம் என்று ஒரு யோசனை—

மு. இவாள்—நாமதேய மென்னமோ?

ரா. இவர் ஒரு காரணம்பற்றி சிலகாலம் தன் பெயரை வெளியிடக் கூடாதென்று நிர்மாணித்திருக்கிறார்.

மு. இவா—எதாவது நாடகம் எழுதியிருக்காளா? ஆடப்பட்டிருக்கா?

ரா. அதையெல்லாம்பற்றி உங்களுக்குக் கவலை வேண்டாம்—நாடகம் நன்றாயிருப்பதற்கு நான் உத்தரவாதம்—உங்களுக்கு எப்படிப்பட்ட நாடகமா யிருக்கவேண்டுமோ சொல்லுங்கள்—

மு. என்ன போங்க—உங்களுக்குத் தெரியாததல்ல—இந்த நாடகம் எங்கிற கழுதையிருக்கே—தேவடியாளைப்போலே—வேளைக்கொரு சேலை கட்டினாத்தான் வெலையாகும், ஆகவே நாடகத்தே புதுசாயிருக்கணும். இந்தக் கழுதெ கோவிலன் நாடகத்தை எடுத்துக் கொண்டேனா! முதல்லே லாபம் போலெ காட்டி கடைசியா—நஷ்டமா முடிஞ்சுது.

ரா. என்ன செட்டியாரே, கோவலன் நாடகத்தில் மூவாயிரம் ரூபாய் நீங்கள் சம்பாதித்ததாகச் சொல்லுகிறார்கள்—

மு. வாயாலே சொல்றவாளுக்கென்னாங்கிறே! நஷ்டப்பட்ட எனக்கல்லவோ தெரியும்—போன மாசம் அதிலே ஐயாயிரம் ரூபா நஷ்டம்—

ரா. எப்படி?

மு. போன மாமாங்கம் வந்துதே, அப்போ கும்பகோணத்துக்கு இந்த கழுதே நாடக கம்பெனியே அழைச்சிக்கிண்டு போயிருக்கே, ஐயாயிரம் ரூபாய் லாபம் கிடைச்சிருக்கும்—கொட்டகே அங்கே ஆப்பிடாமே—கழுதே ஐயாயிரம் ரூபாய் நஷ்டம் வைச்சூட்டுதிங்கிறேன்!

ரா. நிரம்ப சரி!—அதிருக்கட்டும்—நீங்கள் கோருகிறபடியே புதிய கதையை வைத்து நாடகமாக எழுதச்சொல்லுகிறேன்.

மு. அதிலேயும் பாருங்க—இந்த கழுதே—ஜனங்களுக்கு தெரிந்த கதையா யிருந்தாத்தான், காசு வருதுங்கிறே—இந்த கதே புஸ்தகம் நீங்க படிச்சி இருக்கைகளா?—யாரெப்பாத்தாலும் இந்தக் கதெயே நாடகமா போட்றது தானே எங்கிறா!—

[ஒரு புஸ்தகத்தை ராஜேசுவரி கையில் கொடுக்கிறான்.]

ரா. 'தோன்றிற் புகழொடு தோன்றுக'!

[விஜயரங்கம் கையில் கொடுக்கிறான்.]

வி. [அதைப் பார்த்து] இது யாருடைய புஸ்தகம?

மு. நம்மிட கம்பெனியிலே அயன் ஸ்திரீபாட் லோகநாயகி வாங்கனு. ஒருததா தவருதே எல்லாம படிச்சாசசி— எல்லோரும இதெ நாடவமா போட்டா நண்ணுயிருககுங கிருக, அததே அமமாளுககு காட்டலாமிணணு எடுதது வநதே—நீஙக இதெ படிசசி இருககிஙகளா?

ரா. நனருகப படிததிருககிருா—அவா சீககிரம நாடகமாக எழுதிககொடுபபாா—அதறகு என்ன—ஏறபாடு?

மு. ஏறபாடென்னுஙகிறே? அல்லாம உஙகளுககு தெரிஞ சிருக்கே—இநத களுதே நாடவததிலே ரொமப நஷ்டபபட டிருககிறே முனனெயெ—ஆகவே ஏதாவது கொறைசசி—

ரா. குறைககிறதாவது! இதெனன நான எழுதுகிறேனே அமமாதிரி நாடகமெனறு நினைததீாகள்? இதில் பேரம ஒனறும வேணடாம. ஐநநூறு ரூபாய கொடுததுவிட வேண்டும கணடிபபாய்.—அசசிடுகிற பாதயதை அவ ருடையது. அலலாமலும உஙகள கமபெனி தவிர மற் றவாகள ஆடுவதானுல அவருடன் வேறு ஏறபாடு செயது கொளள வேணடும.

மு. அடடடா! அபபுறம எனக கேது லாபம கிடடறது எங்கிறே! நஷ்டததேதொடெ நஷ்டமா?—சரி, ஆனு நான பொறபபட வேணடியதுதான—

ரா. சரி, புறப்படுஙகள.

மு. என்னுமமா, அவவளவு கண்டிப்பா சொலலிவிட்டறைக!— உஙகளோடே நான் பேரம பணண இஷ்டமில்லெ— முநநூறு ரூபாய் வைததுக கொளளுஙகள்—கணடிப வார்ததை.

ரா. செட்டியாரெ, நான் முன்பே சொன்னேனே, பேரம வேண்டாமென்று—வேறு ஏதாவது பேசுங்கள.

மு. ஆனு—நீஙக என்னு நானூறு ரூபாயிலெயா இருக்கிறைக?

ரா. இல்லை—ஐந்நூறு.—அதற்கு ஒரு காசும் குறைந்தால் இவர் எழுதமாட்டார்.

மு. என்ன வெஹற கண்டிப்பா யிருக்கே!—ஒங்களுக்காக ஒப்புக் கொள்ளறேன்—அதிலே ஒரு ஐம்பது ரூபாய் தள்ளிவிடுங்க.

ரா. செட்டியாரே, அப்படியானால் இந்த நாடகத்தை விட்டு விடுங்கள்—வேறு ஏதாவது எழுதச் சொல்லுகிறேன்.

மு. ஏ ஏ!—அப்படி சொல்லாதைங்க எங்கிறே!—இதுதான் முக்கியமா வேண்டியிருக்கு.—அயன் ராஜபார்ட் ஆசாமி கூட, தனக்கு ரொம்ப நண்ணா யிருக்குமிண்ணு சொல்லி யிருக்கறு—

ரா. ஆனால் ஐந்நூறு ரூபாய் சரியாகக் கொடுத்து விடுங்கள்.

மு. சரி—நீங்க அவ்வளவு கேக்கும்போது ஒரு ஐம்பது ரூபா நான் எனக்கு நஷ்டமாகட்டுமே.—எப்பொழுது முடித்துக் கொடுப்பார்? எனக்கு அவசரமாக ஒரு வாரத்தில் வேணும்.—அவர் ஒண்ணும் வாயெ திறக்கலையே?

வி. அதெல்லாம் சரிதான் செட்டியாரே, இதை நாடகமாக ஆடுவதென்றால், முதலில் இந்த நூலாசிரியருடைய உத்தரவு பெறவேண்டுமே—அதைப் பெற்றிருக்கிறீரா? இல்லா விட்டால் கிரிமினில் சட்டத்திற்கு உள்ளாகுமே.

மு. அடடா! அதென்ன களுதெ அது? அது தெரியாதே எனக்கு; அதென்ன சமாசாரம்?

வி. ஒரு நூலாசிரியருடைய உத்தரவில்லாமல், அவர் எழுதிய கதையை நாடகமாக எழுதினாலும், அல்லது ஆடினாலும், போலீஸ் வியாஜயமாகும்.—ஆகவே முதலில் இந்த நூலா சிரியருக்கு எழுதி, இதை நாடகமாக அமைத்து ஆட உத்தரவைப் பெறவேண்டும்.

மு. அடடா! எல்லாம் தீர்ந்தது இண்ணு பார்த்தா இந்த களுதெ கஷ்டம் ஒண்ணிருக்குதா? ஐயோ! அவரெ எனக்கு—தெரியாதே—உங்களுக்குத் தெரியுமோ?

ரா. ஆம், அவருக்குத் தெரியும் நன்றாய்.

மு. ஐயா! நான என்னு சொலறேங்கிரே, நானு எழுதி கெடடா,—அநத ஆளு, அதிகமா ரூபா கேபபா, நீஙக எழுதி கேடடைஙகணணு—சுலபமா பூடும—நான சொல் றததெ கேளுஙக—மொததததுலே அறநூறு ரூபா கொடுத் தூடறெ; அநத உததரவு எலலாம நீஙக பாததுகணும— எனககு வேறெ நஷ்டம வைககாதைஙக.

ரா. சரி—அபபடியே ஆகடடும.

மு. ஏதாவது—முதல்லெ—ரூபா வேணுமா?

வி. ஒனறும வேணடாம—போம்.

மு. அப்படியலலாஙகிறே!— எதுககும இநத முன்னூறு ரூபாயெ வைசசுகொளளுஙக—

[மூன்று நூறு ரூபாய் நோட்டுகளை மடியி லிருநது எடுததுககொடுககிறான]

வி. எனககிப்பொழுது வேணடாம—நாடகததை எழுதிமுடிதது அபபுறம வாஙகிக கொளளுகிறேன.

மு. அபபடியலலாஙகிறே—உஙகளுககு வியவஹாரம தெரி யலே—அமமா, நீஙக வாஙகிககொஙகோ அவருககு பதிலா?

ரா. சரி—கொடும. [வாஙகிக கொள்ளுகிறாள்]

வி. ஐயா, எனனை அவசரபபடுததாதீர்—எனனால் கூடிய சீக கிரததில எழுதி முடிககிறேன.

மு. இனிமே—உஙக பாரம எஙகிரே—எனககெனனு? நான வர்ரே—அமமா, நான வர்ரே.— ஏ— அவா கையாலே ரசீது அனுபபிசசூடுஙக வழககப்படி—நான வர்ரே ஒரு வாரம பொறுதது—நடுவிலேயும வநது பாததிண்டு போரே—உததரவு. [போகிறான்.]

ரா. சீ! நாம ஏமாநது போனோம—இனனும அதிகமாய்க கேட்டிருககவேணடும.—அவனுககு மிகவும அவசியமாய் வேண்டியிருககிறாறபோ லிருககிறது — இலலாவிடடால் அவவளவு எளிதில ஒபபுககொணடிருககமாட்டான்— தானாகவே நூறு ரூபாய் அதிகமாய் உயர்ததினானே— நாம கேளாமலே!

வி. போனற்போகிறது—என்ன ரூபாய் இது ! என்னை நேராகக் கேட்டிருந்தால் சும்மாக எழுதிக் கொடுக்க இசைந்திருப்பேன்—

ரா. அது தவறாகும்—சும்மாகப் பெறும பொருள்களின் மஹிமையை உலகம் உண்மையில் அறிகிறதில்லை. அன்றியும் உலகத்திற்கு நன்மை புரிய முயன்றால் அதற்குரிய பொருள் கையில சேகரிததுவைததல இன்றியமையாததாம். சரி, சாப்பிட்டானவுடன், இனறைகசே ஆரம்பியுங்கள்—இனி மேல் பொழுது போக்குவதற்கு மார்கக மில்லாமல்—எதையோ யோசித்துககொண் டிருக்கமாட்டீர்கள்—

வி. ஆம், உண்மையே—என் மனத்திற்கு ஏதாவது வேலை வேண்டும.—

ரா. நீர் விரும்பும வேலையே கிடைததகதே, இனி யென்ன ?

வி. ஆயினும— எனககாக— ஏன் நீஙகள இவவளவு கஷ்டமெலலாம எடுததுக கொளளுகிறீர்கள ?

ரா. என் மனததிறகு—ஏதாவது வேலை வேண்டுமே யென்று—போஜனவேளை ஆகிறது போவோம வாருஙகள.

[போகிறார்கள்.]

காட்சி முடிகிறது.

ஐந்தாம் காட்சி.

இடம்—சென்னபட்டணம் விக்டோரியா பப்ளிக் ஹால்
நாடகமேடை—திரைக்குப் பின்புறம்
ஒரு சோபாவின்மீது விஜயரங்கத்தை வளர்த்தி யிருக்கிறது.
பக்கததில் ராஜேசுவரி நின்று விசிறிகொண் டிருக்கிறாள்.
சுற்றிலும், கிருஷ்ணசாமி முதலியார், லோகநாயகி,
முதலிய வேஷதாரிகள் வேஷததுடன் சூழ்ந்து
நிற்கின்றார்கள். திரைககு வெளியாக பெருங்
கூசசலா யிருக்கிறது.
டாக்டர் கிருஷ்ணராவ் விஜயரஙகத்தின் பக்கத்தில்
முழந்தாளிட்டு நிற்கிறார்.

கி. ஒன்றும் பயமில்லை—நீங்கள் எல்லாம் ஒருபுறம் ஒதுங்கியிருஙகள்—காற்றை அடைக்காதீர்கள்.— அதோ மூர்ச்சை

தெளிக்கிறாற்போ லிருக்கிறது. அந்தக் கூச்சலை நிறுத்துங்கள் யாராவது திரைக்கு வெளியே போய்!—

[கிருஷ்ணசாமி முதலியார் வெளியே போகிறார்; கிருஷ்ணராவ விஜயரங்கத்தின் முகத்தில் குளிர்ந்த ஜலத்தைத் தெளிக்கிறார்.]

வி. [கண் விழித்து] நான் எங்கே— இருக்கிறேன்?— நான் மூர்ச்சையானேனா?

கி. ஆம், கொஞ்சம்— அதொன்றுமில்லை— அதைப்பற்றி யோசியாதீர்—ஜனங்கள் சந்தோஷத்தினால் போட்ட கூச்சலில் கொஞ்சம் மூர்ச்சையானீர்—அவ்வளவுதான—

வி. நான்—விழுந்தேனா?

கி. விழுந்திருப்பீர்—ஒரு பக்கமாய் நின்றுகொண்டிருந்த மைதிலி ஓடிவந்து உம்மைக் கரத்தில் தாங்கி யிராவிட்டால்—இதற்குள்ளாக நானும் ஓடிவந்து பிடித்துக்கொண்டேன். நீர் பேசிக்கொண்டிருந்தபொழுது, உமது நா தழுதழுத்ததும், நான் சந்தேகப்பட்டு உள்ளே வரலாமென்று விரைந்து வந்தவன், நீர் மூர்ச்சையானதும், அப்படியே மேடையின்பேரில் குதித்தேறிப் பிடித்துக்கொண்டேன்.—

வி. என்ன கஷ்டம் வைக்கிறேன—உங்களுக்கெல்லாம்—

கி. சரிதான்!—கஷ்டமென்ன இதில்?—

கிருஷ்ணசாமி முதலியார் மறுபடியும் வருகிறார்.

கி-மு. ஐயா டாக்டர்! ஜனங்களெல்லாம் அப்படியே நின்றுகொண்டிருக்கின்றனர். நான் என்ன சொல்லியும் போகமாட்டேன் என்கிறார்கள்—நீங்கள் திரைக்கு வெளியே போய், நூலாசிரியருக்கு உடம்பு ஒன்றும் இல்லை, என்று கூறினால்தான் போவார்கள்போ லிருக்கிறது.

கி. இதென்னடா கஷ்டம் ஒன்று!

[திரைக்கு வெளியே போகிறார்.]

ரா. என்னமா யிருக்கிறது உடம்பு?

வி. இப்பொழுது ஒன்றுமில்லை—வண்டியைக் கொண்டுவரச் சொல்லுங்கள் சீக்கிரம்—

கி-மு. உங்கள் வண்டி வருகிறதற்கு இன்னும் அரைமணி நேரம் பிடிக்கும்! என்ன கும்பல்! என்ன ஜனம்! இதுவரையில் இந்தக் கும்பலை விக்டோரியா ஹாலில் நான் பார்த்ததில்லை.

ரா. இதோ போய்ச் சொல்லிப் பார்க்கிறேன்.

[பின்புறமாகப் போகிறாள்.]

டாக்டர் கிருஷ்ண ராவ் திரையின் பக்கமிருந்து மறுபடியும் வருகிறார்.

கி. கேட்பவர்களுக் கெல்லாம் பதில் சொல்வ தென்றால்!— அவர்கள் கூச்சலுக்குமேல் நான் கூச்சல் போட்டுப் பேச வேண்டியதாயிற்று!— உங்களுக்கு எப்படி யிருக்கிறது இப்பொழுது?

வி. ஒன்றுமில்லை—சரியாய்விட்டது—ஏதோ கொஞ்சம் பல ஹீனம்.—

கி. அவ்வளவுதான்—நீங்கள் சீக்கிரம் வீட்டிற்குப் போய்— பேசாமல் படுத்துக்கொண்டு தூங்குங்கள்—நான் நாளை காலை—வருகிறேன்.—

[வெளியில பெண்டுகள் ஏறும் படிக்கட்டி னருகி லிருந்து 'டாக்டர் டாக்டர்! டாக்டரைக் கூப்பிட்டு வாருங்கள்!' என்று கூச்சல் எழுகிறது.]

கி. என்ன அது?

லோ. டாக்டர்! டாக்டர்! யாரோ பொம்மனாட்டி — கையிலே குழந்தையை வைச்சிண்டிருக்கிறா! அப்படியே படிக்கட் டண்டே மூர்ச்சையானா! போய்ப்பாருங்க! போய்ப்பாருங்க!

கி. என்னடா கஷ்டம் இது?

வி. டாக்டர்! சீக்கிரம் போய்ப் பாருங்கள்—என்னவென்று— பாவம்!

கி. இதோ!

[விரைந்து பின்புறமாகப் போகிறார்.]

ராஜேசுவரி மறுபடியும் வருகிறாள்.

ரா. வண்டியைப் பின் பக்கமாகக் கொண்டுவரச் சொன்னேன் நாம் பின் பக்கமாகப் போவோம்.—

வி. கொஞ்சம் பொறுங்கள்.—

ரா. உங்களிஷ்டம் — எனக்கொன்று அவசரமில்லை — ஏதாவது தாகத்திற்குச் சாப்பிடுகிறீர்களா ?

கி-மு. இதோ—கொஞ்சம் சோடா சாப்பிடுங்கள்.

[விரைந்துபோய் ஒரு சோடா புட்டியைத் திறந்து ஒரு டம்ளரில் விட்டுக் கொண்டுவந்து கொடுக்கிறான்.]

வி. [அதைச் சாப்பிட்டு] அப்பா, உனக்கு வந்தனம்.

கி-மு. சரிதான்—இதற்கெல்லாம் வந்தனம் ஒன்று—

ஒரு பக்கத்திலிருந்து முத்தையன் செட்டி பணப்பெட்டி யொன்றைத் தூக்கிக்கொண்டு வருகிறான்.

மு. களுதெ சென்னங்க ! இன்னம் போவமாட்டேங்கிறுக !

[ஒரு நாற்காலியில் உட்கார்ந்து]

ஐயாவுக்கு உடம்பு என்னமா யிருக்கு ?— கொஞ்சம் தேவலையா ?—

வி. ஒன்றுமில்லை—சவுக்கியமாய் விட்டது.

மு. அடே யார்டா அது ? ஐயாவுக்கு தாகத்துக்கு கொண் டாந்து கொடுடா ஏதாவது !

கி-மு. கொடுத்தேன் செட்டியாரே, கொஞ்சம் சோடா கொடுத்தேன்.

மு. களுதெ சோதா என்னத்துக்கு ? உப்புத தண்ணி !— கொஞ்சம் பால கொண்டுவந்து கொடுக்கச் சொல்லு—

வி. வேண்டாம் செட்டியாரே—எனக்கொன்று மில்லை இப் பொழுது.

ரா. என்ன செட்டியாரே, இப்பொழுது என்ன சொல்லு கிறீர்கள் ? நாடகம் ஜனங்களுக்குப் பிரீதியா யிருக்குமோ என்னவோ என்று சந்தேகப் பட்டுக்கொண் டிருந்தீர்களே ? இப்பொழுது என்ன சொல்லுகிறீர்கள் ?

மு. அட்டா ! நானு சந்தேகப்பட்டேங்கிறேங்க ? ஐயா தான் சந்தேகப்பட்டார்—எனக்கு சந்தேகமே யில்லையே—ஐயா வுக்குப்போட்ட சாயங்காலமே ரோஜாப்பூ மாலேகூட

உத்தரவு செய்திருநதேனே— ஐயாவுக்குப் போடலேயா அநத ஜமீன்தார் ?—எஙகே அநத மாலெ ?

ரா. அதோ, கழற்றி வைததிருககிறது.— மூர்சசையானபோது எடுததுவிடச் சொன்னூர் வைததியர்.

மு. அது கெடககட்டுஙகிறே—நாளைககு ஐயாவுககு எங்கையாலே ஜரிகையாலே போடடபோறெ !

வி. நாளைககா ?—என்ன நாளைககு ?

மு. நாளைககு மறுபடியும ஐயா நாடடவம் தான் ! இநத வாரம் எலலா இதுதான !—இணேககே நாளைககாவ எததனெ திககட்டு விததுபோசசுது எங்கிரைக !— அதுககாத தானே, இததனி நாழி புடிசசுது, நான் இஙகுவர !

ரா. அதோ, நமமுடைய வண்டி சபதம—புறபபடுவோமா ?

மு. அமமா, உஙகளோடே ஒரு பேசசு—

[ராஜேசுவரியை ஒரு புறமாய் அழைததுக் கொண்டுபோய்]

இனிமேலெ ஐயா எனுதற நாடடவ மெல்லாம எனககு ஒப்பநதம—நாடடவம ஒணணுககு ஆயிரம ரூபாய் கொடுதது விடறெ—நீஙக எபபடியாவது பேசி—ஏறபாடு பண் ணிடணும.—

ரா. எல்லாம பிறகு ஆகடடும.

மு. நீஙக அப்படி சொலலிடக கூடாது—உஙகளுககு நான் பிரதயேகமா—ஏதாவது ஏறபாடு பண்றேஙகிறே—

ரா. சரிதான்—கெட்டிககாரர்தான !—எலலாம நாளை காலே வீட டிற்கு வாருஙகள் பேசிககொள்ளுவோம.—

டாக்டர் கிருஷ்ணராவும் எட்டினபுறம் ஜமீன்தாரும் வருகிறார்கள்.

வி. டாக்டர், என்ன சமாசாரம, போயிருநதீரே ?

கி. ஒன்றுமிலலே — சரியாகிவிட்டது — கும்பல் நெருக்கத்தில் மூர்ச்சையானற போலிருக்கிறது.—அப்படியே விழுநததில் குழநதைககு முழங் கையில் கொஞ்சம் காயமபட்டது. குழநதையின் காயததைக கட்டி, பிறகு தாயின் மூர்ச்சை யைத் தெளிவிக்க, இவ்வளவு நேரம் பிடித்தது—

வி. வேறொன்றும் அபாய மில்லையே ?

கி. இல்லை இல்லை—வீட்டுக்குப்போய் விட்டார்கள் அவர்கள்—திரும்பி வரும்பொழுது நம்முடைய எட்டினபுறம் ஜமீன்தார் உம்மை நேரில் பார்த்து விசாரித்துவிட்டுப் போகவேண்டுமென்றார்—அழைத்துக்கொண்டு வந்தேன் அவரை.

வி. வரவேண்டும்—உங்களுக் கெல்லாம் என்றால் நிரம்ப சிரமம்?

எ-ஜ. நன்றாகச் சொன்னீர்கள் !—உங்கள் உடம்புக்கு ஒன்றுமில்லையே இப்பொழுது ?

வி. ஒன்றுமில்லை, தங்களைப்போன்ற பெரியோர்களுடைய ஆசீர்வாதத்தால—ஏதோ கொஞ்சம் பலஹீனம்—

எ-ஜ ஆமாம், ஒரு புஸ்தகம் எழுதுவதென்றால் என்ன கஷ்டமிருக்கிறது ! மூளைக்கு எவ்வளவுவேலை ! உடம்பைக் கொஞ்சம் ஜாக்கிரதையாய்ப்பார்த்துக்கொள்ளுங்கள்—நீங்கள் இன்னும் இந்த மாதிரி எத்தனையோ நாடகங்கள் எழுதவேண்டும்—பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழவேண்டும்—அதுவே என் ஆசீர்வாதம்—நீங்கள் சீக்கிரம் வீட்டிற்குப்போய் கொஞ்சம் நித்திரை செய்யுங்கள், என் வண்டியைத் தருவதா ?

வி. இல்லை—வண்டி யிருக்கிறது.

எ-ஜ. நான் நாளை காலை வந்து பார்க்கிறேன்—நான் வருகிறேன்

கி. நானும் வருகிறேன் , நீர் சீக்கிரம் வீட்டிற்குப்போம்.

[இருவருமாகப் போகிறார்கள்.]

மு. யாரடா அது ? ஐயா வண்டியெ சீக்கிரம் கூப்பிடச் சொல்.

ரா. வேண்டாம், முன்பே வந்திருக்கிறது.

வி. [எழுந்திருந்து] இந்த நாடகத்தில் வேஷமதரித்த உங்களுக்கெல்லாம் வந்தனம் செய்கிறேன். இப்பொழுது சாவகாசமில்லை — நாளைக்குச் சவகாசமாய் உங்களெல்லோருடனும் பேசுகிறேன்—

கி-மு. அப்படியே, அதிக சந்தோஷம்—இப்படிப்பட்ட அற்புதமான கதையை நாடகமாக எழுதி, நாங்கள் அதில் பெயர்

பெறும்படியாகச் செய்ததற்காக, நாங்கள் எல்லோரும் உங்களுக்கு நன்றி யறிதலுடையவர்களாக இருக்கிறோம்.

[எல்லோரும் வணங்குகிறார்கள்.]

வி. [அவர்களை வணங்கி] நான் வருகிறேன்—செட்டியாரே, நான் வருகிறேன்.

மு. அதென்னவுங்கோ—இதோ நானும வர்றெ உங்களோடே கூட, உங்கள் வீட்டுவரைககும—

லோ. ஐயா, இநத ரோஜாபபூ மாலையைவிடடுட்டு போறைஙகளே—இதே கழுததுலே போட்டிணடு போஙக—

வி. அமமா, இப்படி—கொடு—அதை—கையில.

லோ. ஆமாம—நாஙகல்லாம போடடா நீஙக போடடுகிவைகளா!

ரா. [போகும் பொழுது மெதுவாய்] தோன்றிற் புகழொடு தோன்றுக!

வி. உம— [பெருமூச்செறிகிறான்.]

[போகிறார்கள்.]

காட்சி முடிகிறது.

மூன்றாம் அங்கம்

முதற் காட்சி

இடம்—சென்னையில் புதிதாய்க் கட்டபட்ட 'விஜயரங்கம்' என்னும் நாடகசாலையில் ஒத்திகை நடத்தும் அறை

நடுவில் சாமிநாதன் நிற்கிறான். அவனைச் சுற்றிலும் லோகநாயகி, முத்துக்கிருஷ்ண நாயுடு முதலிய நாடகமாடுபவர்கள் நகைத்துக்கொண்டு நிற்கின்றனர்.

லோ. இன்னொருதரம சொல்லமமா இன்னொருதரம் சொல்லு.

சா. 'மானம் போனபின்னே வாழ்வேனோ, மண்ணின்மேல்.'

[தன்னைக் குத்திக் கொண்டு சாவது போல் நடிக்கிறான். எல்லோரும் கைகொட்டி நகைக்கிறார்கள்,

எல்லோரும். அச்சம், கிருஷ்ணசாமி முதலியார்தான்!

லோ. இதோ வர்ரார்!

கிருஷ்ணசாமி முதலியார் வருகிறார்.

கி. என்ன அது? என்ன அது? பிள்ளை அவர்கள் வரவில்லையா என்ன இன்னும்?

லோ. இல்லை, இன்னம வரலே.

கி. கூசசல் என்ன இங்கே?

லோ. வேறொன்னு மில்லெ. இநதப் பையன் உங்களைப் போல நடிததுக காட்டறு, அதநெப் பார்தது சிரிசசோம்!

கி. என்னைப் போலவா? எதோ நான் பார்க்கவேண்டும்—எதோ.

லோ. எதோ இன்னொருதரம் சொல்லம்மா.

சா. 'மானம போனபின வாழ்வேனே மண்ணின்மேல்?'
[முன்பு போல் நடித்துக் காட்டுகிறான்.]

கி. [நகைத்து] நன்றாய்க கவனிததிருககிறான. புததிசாலி!—அப்பா, இபபடிவா, இன்னும யாா யாரைபபோல் நடிக்கத் தெரியும உனககு?

மு-கி. ஒருத்தர் பாக்கி இல்லாமல் நேறறு மேடையில் யார்யாரைப் பார்ததானே அவர்களைப்போ லெலலாம நடிககிறான்.

கி. அப்படியா!—எதோ—லோகநாயகிபோல் கொஞசம நடி.

லோகநாயகி தவிர மற்றவர்கள். } ஆம! ஆம!

லோ. பையா! என்னெ எழுததாளி செய்தயோ, கொடுப்பேன் தவடையில்!

கி. ஏனனமாவது? குழந்தை வேடிக்கையாக நடிததுக் காட்டினல் அதில் தவறென்ன? சநதோஷ மல்லவோ படவேண்டும். நீ சொல்லம்மா—சொல்.

சா. அநத அம்மா—கோவிச்சிக்கிவாங்க.

கி. கோவித்துக கொள்ளுகிறதாவது! அப்படி யொன்றும் கோவித்துக் கொள்ள மாட்டார்கள் — நானிருக்கிறேன் பயப்படாதே— [சாமிநாதனைத் தட்டிக் கொடுக்கிறான்.]

சா. 'பெண்ணாய்ப் பொறக்கிறத்தெவிட, பேயா பொறக்கலாம்!'
[லோகநாயகி அழுவதுபோல் அழுது காட்டுகிறான்.]

லோதவிர மற்றவர். ஆஹாஹா! [நகைக்கின்றனர்.]

லோ. நா அப்பவே சொன்னேனே!

[சாமிநாதன் கையைப் பிடித்திழுத்து கன்னத்தில ஓர் அறை அறைகிறாள். சாமிநாதன் உரதத சப்தமாய் அழுகிறான்.]

மற்றவர் ஆ! ஆ!

விஜயரங்கம் சரேலென்று உள்ளே வருகிறான். உடனே எலலோருமு அசைவற்று நின்றுவிடுகின்றனர். சாமிநாதன் அழுகையை அடககிககொள்ளப் பாாககிறான்.

வி. என்ன இது எல்லாம்?—ஏன் அழுகிறான் குழந்தை?—இங்கே வாடா அப்பா— [சாமிநாதன் மெல்ல அருகில் வர] யார் இவனைக் கன்னததில அறைந்தது இப்படி சூடு உண்டாக?—யார்? சொல்லுகிறீர்களா என்ன?

கி-மு. லோகநாயகி.

வி. ஏன்?—ஏன் அம்மா அடித்தாய இவனை?

லோ அவன் என்ன செய்தாங் கேளுங்கோ முன்னே

வி என்னடா அப்பா செயதாய்?

சா. [அழுதுகொணடே] இந்த ஐயா—அந்த அம்மா—நேத்து ஆட்டததிலே — சொன்ன போலே — சொலலச சொன்னாங்கோ—அப்படியே சொன்னேன—அதுக்கு சவடையிலே அடிசசாங்க—

லோ. நானு வேண்டா மிண்ணு சொன்னனா இல்லையா?

வி. அவர்கள் வேண்டாமென்று சொன்னபொழுது ஏன் செய்தாய்?

சா. இந்த ஐயாதான்—சொல்லச் சொன்னாங்க

வி. கிருஷ்ணசாமி முதலியார், நீங்கள் சொன்னீர்களா?

கி-மு. இதென்ன நீங்கள் கூட கேட்கிறீர்களே? குழந்தை ஏதோ தான் நேற்று பார்த்ததுபோல அவரவர்களைப்போல் நடித்

துக் காட்டினால், அதற்குச் சந்தோஷப் படுவதைவிட்டு—கோபம் கொள்ளலாமோ ?—என்னைப்போல் நடித்தான், அதற்காக நான் கோபம் கொண்டேனோ ?—இல்லை இஷ்டமில்லாவிட்டால்—வேண்டா மென்றால போகிறது, அதற்காகக் குழந்தையை அடிப்பதாவது ? விரல்விரல்களாக எழும்பிப்போ யிருக்கிறதே !

வி. ஆம்—லோகநாயகி, அப்படித்தான் ஏதாவது தவறிழைத்த போதிலும் வாயால் கண்டிப்பதைவிட்டு, கையால் அடிக்கலாமா ?—உன் குழந்தையா யிருந்தால் இப்படி அடித்திருப்பாயா ?

லோ. எங் கொழுந்தையா யிருந்தா அப்படியே கொண்ணுபோட்டிருப்பேன் ! ஏதோ தெருவில் போகிற கொழந்தைக்கே இவ்வளவு பரிஞ்சி பேசரைகளே—இன்னும் உங்க கொழந்தையா யிருந்தா என்ன செய்விங்களோ ?

வி. என் குழந்தையா யிருந்தால்—நான் ஒருகால் பொறாத தாலும் பொறுப்பேன்—அலலாதபடியினால்தான நீ செய்தது தவறு என்று அதிக கண்டிப்பாய்க் கூறவேண்டி யிருக்கிறது—இனி இம்மாதிரி செய்வாயானல எனக்கு மிகவும் கோபம் வரும், ஜாக்கிரதை. சரி, நேரமாகிறது !—இன்று நான் கொஞ்சம் நேரம் பொறுத்து வந்ததற்காக மன்னியுங்கள்—கொஞ்சம அவசரமான வேலையாய்ப போயிருநதேன்—ஒத்திகை ஆரம்பியுங்கள்—முதல் காட்சியில், யார ஆரம்பம் செய்கிறது ?

[புஸதகததை எடுததுககொணடு]

—லோகநாயகி, ஆரம்பி—

லோ. எனக்கு உடமபு சவுக்கியமாயில்லே—நான் ஒத்திகபண்ண முடியாது.

வி. உம்—வீணுகப் பிடிவாதம் செய்யாதே—நான் சொல்வதைக் கேள், ஆரம்பி

லோ. ஆனல்—அந்த பையனுக்கு அந்த வேஷம் கொடுக்காதிருந்தா—நான் ஒத்திகை பண்றேன்.

வி என்ன !—வீணாகக் கெட்டுப்போகாதே—ஆரம்பி.

லோ. நான் கெட்டுப் போறேனே, யார் கெட்டுப் போருகளோ பாப்போம்!—நான் மாட்டேன்—நான கேட்டபடி செய் யாப்போனா—

வி. என் கடைசி வார்த்தையைக் கேள்—உன் நிபந்தனைப் பிரகாரம் நான் உனக்கேறபடுத்தும்படியான எந்த நாடக பாத்திரத்தையும் நீ வேண்டாமென்று மறுக்கலாகாது; அப்படி மறுப்பாயாயின் நான் உன்னை நீக்கிவிடலாம.

லோ. நீங்க நீக்கிவிடரதென்ன? நானே விலகிப போறேன்—என் சம்பளத்தெ கொடுத்துவிடுங்க—சரஸ்வதி விலாச சபையில் நான் எப்போ வருவேனோ இண்ணு காத்திண்டிருக்கா.

வி. சரி, ஆனால்—இன்னும் இந்த மாசம முடிய நான்கு நாளிருக்கிறது, நீயாக விலகிப போகிறபடியால நான் உனக்கு இந்த மாசத்திய சம்பளத்தைக கொடுக்க வேண்டிய நிமித்தமில்லை. ஆயினும், இதோ பூராவாகக் கொடுக்கிறேன்—பெற்றுக் கொண்டு போ.

[தன் ஜேபியிலிருந்து ஒரு செக புஸ்தகத்தை எடுத்து அதில ஒரு செக எழுதி அவள் கையில கொடுக்கிறான்.]

லோ சரி—கொடுங்கள்—நானில்லாமே இந்த நாடகம என்னமா நடக்கிறதோ பாாக்கிறேன் !

வி. உம்—சரிதான்—போய்வா. [லோகநாயகி கோபத்துடன் போகிருள்]

இன்றைக்கு இனி ஒத்திகை வேண்டாம். மறு ஒத்திகை என்றைக்கு என்று உங்களுக்கெல்லாம சொல்லி யனுப்புகிறேன். நீங்கள் எல்லாம் உத்தரவு பெற்றுக்கொள்ளுங்கள்.

[எல்லோரும் விடை பெற்றுச் செல்லுகின்றனா]

கிருஷ்ணசாமி முதலியார்—இப்படி வாருங்கள்.

[கிருஷ்ணசாமி முதலியாா மாத்திரம சாமிநாதனுடன் திரும்பி வருகிறா]

உங்களை நேற்றிரவே கேட்கவேண்டுமென் றிருந்தேன்—

இந்த குழந்தையை எங்கே பிடித்தீர்கள்? நிரம்ப புத்திசாலி யாகக் காணப்படுகிறான்—

கி-மு. எங்கள் பக்கத்து வீட்டிலிருக்கும் குழந்தை; என் பையனோடு பள்ளிக்கூடத்திற்கு ஒன்றாய்ப் போய்ப் படிக்கிறான்; சாயங்காலத்தில என் பையனுக்கு 'வடிவேலு' வின் பாகத்தைச் சொலலிக்கொணடு வரும்பொழுது, இவனுமகூட விருந்து அந்த பாகததை யெல்லாம் அப்படியே ஒப்பித்துக்கொண்டு வருவான். நேற்று திடீரென்று என் பையனுக்கு வலி காணவே—நான் எப்படி நாடகத்தை நடத்துவது 'வடிவேலு' வின பாகமில்லாமல, என்று யோசித்துக் கொண்டிருக்கையில-இந்த, குழந்தையை அதை நடிக்குமபடி செய்யலாமே யென்று யோசனை பிறக்க—இவன் தாயாரிடம் மிகவும் மன்றாடி உத்தரவுபெற்று அழைத்து வந்தேன் நம்முடைய நாடகசாலைக்கு எங்கே மேடைக்கு வந்தபின் பயப்படுகிறானோ என்று பார்ததேன். என் பையனைவிட நன்றாய் நடிததான்.

வி ஆம்—அப்படித்தான் எல்லோரும் சொன்னார்கள்—எனக்கும் அப்படித்தான தோன்றியது—உஙகள் பையனுக்கு இன்று உடம்பு எப்படி யிருக்கிறது?

கி-மு. கொஞ்சம் சுமாரா யிருக்கிறது—பாாத்தீர்களா! மறந்தேன்! அவனுக்கு ஒரு மருந்து வாங்கிக்கொணடு போக வேண்டியதாயிருக்கிறது. நான் டிராம் வண்டியில் போய் வாங்கிக்கொணடு வருகிறேன்—நீங்கள் கொஞசம் நேரம் இங்கே இருப்பீர்களோ இல்லையோ?

வி. இருப்பேன்.

கி-மு. இவன் இங்குதானிருக்கட்டும்—நான் போய் அந்த மருந்தை வாங்கிக்கொண்டு திரும்பிவந்து இவனை வீட்டிற்கு அழைத்துப் போகிறேன்.

வி. அப்படியே செய்யுங்கள்.

கி-மு. அப்பா, இங்குதானிரு—நான் இதோ வந்துவிடுகிறேன்.

[போகிறார்.]

வி. [சாமிநாதனைச சற்றுநேரம உற்றுப் பார்த்து] இப்படிவா.

[சாமிநாதன் அருகிற் போகிறான்.]

உன் பெயர் என்ன?

சா. சாமிநாதன் எம்பேரு—எங்கம்மா சாமி இண்ணு கூப்பிடறாங்க

வி. உன் அம்மா பெயர் என்ன?

சா. அமமா பேரா ?—அம்மாதான

வி. உன் அப்பா—இருக்கிறாரா ?

சா இருக்கறாரு

வி. எங்கே ?

சா. ஊரலே.

வி. எந்த ஊரிலே ?

சா அது அம்மா சொல்ல மாட்டேண்றாங்கோ—நான் கேட்டா அழுறாங்கோ அம்மா, அததொட்டு நான் கேகறதிலலே

வி. ஊரில் இருக்கிறா என்று உனககு எப்படித தெரியும ?

சா அமமாதான் சொலறாஙகளே

வி அவா--ஊரிலிருந்து எபபொழுது வருவார் தெரியுமா உனக்கு ?

சா. தெரியும.

வி தெரியுமா !—எப்பொழுது ?

சா. சாமிக்கு எப்போ இஷ்டமோ அப்போ வருவாரு.

வி. எந்த சாமிக்கு ?

சா. எனக்கல்லா—கோவில்லே இல்லெ சாமி? அந்த சாமிக்கி.

வி. யார் சொன்னது அப்படி ?

சா. அம்மா சொன்னாங்க.

வி. [பெருமூச்செறிந்து] உனக்கிஷ்ட மில்லையா உங்கள் அப்பா —ஊரிலிருந்து வரவேண்டுமென்று ?

சா. எனக்குக்கூட இஷ்டம்—அதுதான் கோவிலுக்கு போவும் போதெல்லாம்,—கண்ணை மூடிகினு—சாமியே கேக்கறனே—எங்கப்பாவே எங்கிட்ட—அனுப்பிக்கச சொல்லி.

வி. சாமி—என்ன பதில் சொன்னார்?

சா. இத்தினி நாளும் பதில சொல்லலே—போன வெள்ளிக் கெழமே, கண்ணே மூடிகினு கேட்டனா, அப்போ மாத்திரம்—ஆவட்டும் இண்ணாரு.

வி. சாமியா?

சா. ஆமா—நான்தான் காதாலே கேட்டனே.

வி. அப்பொழுது, உங்கள் அப்பா வருவாரா சீக்கிரம்?

சா. ஓ!—சாமி பொய் பேசுவாரா?

வி. மாட்டார்!—உம்—இதை உங்கள் அம்மா விடம் சொன்னையா?

சா. சொன்னே — அம்மா அதத்தெ கேட்டு—அழுதாங்க—அழுதாலும் அப்புறம் எனக்கு முத்தி கொடுத்தாங்க

வி. ஈசனே!—அப்பா, உன் வயதென்ன? தெரியுமா உனக்கு?

சா. தெரியும்—எனக்கு ஆறு வயசாவுது—நாயித்துக் கெழமெ வந்தா ஏழாவது வயசு பொறக்கும்.

வி. அதெப்படித் தெரியும் உனக்கு?

சா. தெரியுமே—வெள்ளிக்கிழமெ வருஷம் பொறப்புவல்லே? பள்ளிக்கூடத்திலேகூட லீவு உட்டலே?

வி. ஆமாம்—

சா. அண்ணக்கிதான் நான் பொறந்தனா—வருஷப் பொறப்பு பொறந்ததும் நானு பொறந்தேன் இண்ணு அம்மாசொன்னாங்க—எனக்கு நண்ணா தெரியும், வருஷா வருஷம், வருஷப் பொறப்புநண்ணு, நானு பொறந்த நாளிண்ணு, அம்மா எனக்கிஷ்டமானது என்ன மாறு வாங்கி கொடுக்கிறாங்களே!—நானு நண்ணா படிச்சாகா.

வி. ஈசனே! நான் நினைக்கும் வண்ணம் இருக்குமாக!—என்ன மதிமோசம் போனேன் நான்!—

சா. என்னா அது?

வி. உன் பேச்சல்ல—கிட்டவா—உம்—இந்த வெள்ளிக்கிழமையா உனக்கு வாங்கிக் கொடுக்கப் போகிறார்கள் உங்கள் அம்மா ?

சா. ஆமாம்.

வி. என்ன கொடுக்கப் போகிறார்கள் உனக்கு ?

சா. நானு, எங்க ஊட்டு எதிரிலே நாய்காரெ வைச்சிகினு இருக்கிறானெ நானு நாயிகுட்டி, அதிலெ சின்ன குட்டியெ வாங்கிதரச சொனனேனே —

வி. வாங்கிக் கொடுக்கிறேன் என்றாகளா ?

சா. நாய்க்காரன்—ரொம்ப வெலெ சொல்லரா—இப்பொ ரூபா யிலலெ, எல்லாம் வாரவர்ஷம் பாாத்துக்கலாம்— இந்த வர்ஷம் பொம்மே நாய்குட்டி வாங்கி தரெண்ணுங்க—

வி. அது உனக்கு துககமா யிருக்கிறதா ?

சா ஒரு வர்ஷததுக்குள்ளோ—அநத சின்ன குண்டு குச்சி நாயிகுட்டியே, யாராறைலும வாங்கிகினு பூடடா என்ன செய்யரது இண்ணு நெனைசசிகின எனககு அழெ வருது—ஆனா நானு அழறதில்லே—

வி. ஏன் ?

சா. நானு அழுதா, அப்புறம அம்மா அழுவாங்க—அம்மாவுககு அழெவரப் பண்ணலாமா நானு ?—அம்மா எம்மேலே எவ்வளவு ஆசையா யிருக்கிறாங்கோ ?—அதனொட்டு.

வி சாமி, அந்த நாயககுடடியை நான் உனக்கு வாங்கிததரவா ?

சா. [சிரிதத முகததுடன] வாங்கிததாரைங்களா ?

[திடீரென்று முகம்மாறி]

ஆனா—

வி. என்ன ஆனல் ?

சா ஊம்—அம்மா—ஓர்த்தரையும் ஒண்ணும் வாங்கிக கொடுக்கச் சொலலி கேக்கக்கூடா திண்ணுங்களே ?

வி. நீ கேட்பதன் முன்பாக நானே வாங்கிக் கொடுப்பதாகச் சொன்னேனே

சா. நீங்களே சொன்னிங்கல்லா ?

வி. ஆமாம், நானுகத்தான் சொன்னேன் முன்பு.

சா. அப்பொ, அம்மா கோவிச்சிக்க மாட்டாங்கல்லா ?

வி கோபித்துக் கொள்ள மாட்டார்கள்—என்று நினைக்கிறேன்.

சா. ஒருவேளெ அம்மா கோவிச்சிகிளு—அந்த நாயிகுட்டியே நீங்க இங்கயே வைச்சிகிங்கோ—நானு எப்டிவாளு இங்கே வந்தேனிண்ணு பாத்துடடுப் போறேன்.

வி. அந்த நாயக்குட்டியின்மேல ஏன் உனக் கவ்வளவு ஆசை ?

சா. அது நல்ல நாயக்குட்டி—சின்னதா, குண்டா, அழகா யிருக்குது—வால் மாத்திரம் கறுப்பா—நானு "கண்ணு கண்ணு" இண்ணு கூப்பிட்டா குடுகுடுகுடு இண்ணு ஓடியாருது ! அதுக்கு எம்மேலே ரொம்ப ஆசை இண்ணு நாய்க்காரன்கூட சொன்னுன்.

கிருஷ்ணசாமி முதலியார் மறுபடியும வருகிறுா.

கி-மு. வாடா அப்பா, போகலாம்.

சா. நானு வரட்டுமா ?

வி. போய்வா.

சா. காபகம் வைச்சிகிரைங்களா ? நானு குட்டியிலே சின்ன குட்டி.

வி கிருஷ்ணசாமி முதலியார், நான் இரண்டு தினம் பட்டணத்தைவிட்டு வெளியே போகவேண்டி யிருக்கிறது நான் வருகிற வரையில் ஒத்திகை யெல்லாம நீங்கள் பார்த்துக் கொள்ளுங்கள்

கி-மு. எங்கே—அவ்வளவு அவசரமாக ?

வி திருநெலவேலி வரையில்.

கி-மு. சரி, அப்படியே ஆகட்டும்.

சா. அந்த நா குட்டிககி வால் மாத்திரம் கறுப்பாயிருக்கும்—தெரியுமா ?

வி. சரிதான்.

[கிருஷ்ணசாமி முதலியார் சாமிநாதனை அழைததுக்கொணடு போகிறுா.]

வி. பிறந்த தேதியை முனிசிபல் ரிஜிஸ்டரில் பார்த்தால் தெரிந்து போகிறது.—என்ன மணி?—உடனே புறப்பட்டால் இன்றைக்கே போகலாம்—பரமேசுவரா! நீர்தான் என் சந்தேகத்தை யெல்லாம் நிவர்த்தி செய்யவேண்டும்!

[விரைந்து போகிறான்]

காட்சி முடிகிறது

இரண்டாம் காட்சி.

இடம்—சென்னை—திருவல்லிக்கேணியில் ஒரு சிறிய வீட்டின் முன்பாகத்தின் கூடம

சாமிநாதன் பொமமை நாய்க்குட்டியைக் கையில் வைத்துக்கொண்டு நிற்கிறான்.

அருகில மங்கையர்க்கரசி அவன் முதுகைத் தடவிக் கொடுத்துக்கொண்டு நிற்கிறாள்.

ம கண்ணே! வருத்தப்படாதே—நான் என்ன செய்வது? உன் முகவாட்டத்தைப் பார்த்து சகிக்காமல்—ரூபாய் போனால் போகிறதென்று அந்த நாயக்காரனிடம் போய்ப் பார்த்தேன் அந்தக் குட்டியை வேறு யாரோ நேற்று சாயங்காலம் வாங்கிக்கொண்டு போய்விட்டதாகச் சொல்லுகிறான். மற்ற மூன்று குட்டிகளில் ஏதாவதொன்று—உனக்கிஷ்டமானதைச் சொல்—வாங்கித் தருகிறேன் நீயே வந்து பார்த்துச் சொல்லுகிறாயா?

சா வேணும—வேறே நாய்க்குட்டி.

ம. கண்ணே, நான் சொல்வதைக் கேள். இன்று நீ பிறந்த நாளில் முகவாட்டத்துடன் இருக்கலாமா?

சா நானு—சந்தோஷமதா யிருக்கணும இண்ணு பாக்கரே—அந்த நாய குட்டியே நெனிசசிகிணு—துக்கம்—அதுவா—உள்ளே யிருந்து வருதம்மா!

ம. கண்ணே, கண்ணே,—நான் இனி என் செய்வது?—போனது போகட்டும், அதைப்பற்றி நினையாதே—நீ துக்கப் பட்டு—எனக்கு துக்கம் வரும்படி செய்யலாமா?

சா. இல்லெ அம்மா, நீங்க—துக்கப்படாதைங்க—நானு சந்தோஷமா யிருக்கரே—

ம. அதுதான் நல்லது—நீ விளையாடிக்கொண்டிரு. நான் உள்ளே சென்று உனக்கு பூரி லட்டு செய்து கொண்டு வருகிறேன்

சா. ஏன் அம்மா ? சாமி பொய் பேசமாட்டார் அல்லா ?

ம. மாட்டார் கண்ணே—ஏன் கேட்கிறாய் ?

சா. அந்த நாய்குட்டியெ உனக்கு கொடுக்கரே எப்படியும், இண்ணு சொன்னாரு—

ம. ஆனால்—எப்பொழுதாவது—கொடுப்பார பயப்படாதே.

[முத்தமிட்டுவிட்டு உள்ளே போகிறாள்]

சா. [பொம்மை நாய்க் குட்டியைத் தூரத்தில் வைத்து] சு சு சு ! சு!
இது கழுதெ நாய் குட்டி ! கவுறு கட்டி இழுத்தாதான் வரும்

[ஒரு பக்கமாகப் போய் உட்கார்ந்து கண்ணை மூடிக்கொள்ளுகிறான்]

சாமி ! என் நாய் குட்டியெ கொடுங்க !—

விஜயரங்கம் ஒரு சிறு நாய்க்குட்டியுடன் வாசற்படி யருகில் வந்து நிற்கிறான்.

சா. சாமி ! என் கண்ணு நாகுட்டியெ கொடுங்க !

[விஜயரங்கம் தான் கொண்டு வந்த நாய்க் குட்டியை அவன் முன்னிலையில் விட்டுவிட்டுச் சற்று தூரத்தில் ஒதுங்கிநிற்கிறான்.]

[கண் விழித்து நாய்க்குட்டியைப் பார்த்து, பரபரப்புடன் எடுத்துக் கட்டி யணைந்து முத்தமிட்டு] அம்மா ! அம்மா ! சாமி நா குட்டியே கொடுத்தா எனக்கு !

[உள்ளே நாய்க்குட்டியுடன் ஓடுகிறான்.]

வி. ஜகதீசனே ! ஜகதீசனே ! [பெருமூச்செறிகிறான்.]

மங்கையர்க்கரசி சாமிநாதனுடன் உள்ளே யிருந்து விரைந்து மறுபடி வருகிறாள்.

ம. ஏதடா சாமி இது ?

சா. சாமி குடுத்தார் அம்மா !

ம. [விஜயரங்கத்தைப் பார்த்துத் திடுக்கிட்டு நின்று] சாமி—இவர் யார் தெரியுமா—உனக்கு ?

சா. தெரியும் அம்மா—அங்கே நாடகமெல்லாம் போடராங்களே அங்கே இருக்கிறவங்க அம்மா.

ம அவரை—நாய்க்குட்டி வேண்டுமென்று—கேட்டாயா நீ ?

சா. இல்லெ அம்மா,—நானு கேக்கலெ அம்மா—அவுங்களா கொடுக்கிரே இண்ணு—சொன்னாங்கம்மா !

ம. அவா கையிலிருந்து இதை உன்னை யார் வாங்கச் சொன்னது ?

சா அவா கையிலிருந்து வாங்கலே அம்மா !—நானு கண்ணெ மூடிகினு — சாமியெகேட்டேனு—ஊம் — கண்ணெதெறந்து பாத்தா—நாகுட்டி எதிரிலே இருந்துது அம்மா—

ம. என் உத்தர வில்லாமல் ஒருவரிடமிருந்தும் ஒன்றும் வாஙகக் கூடாதென்று சொல்லியிருக்கிறேனே இல்லையோ ?

சா. [வருத்தத்துடன்] சொல்லி—இருக்கரைங்க.

ம. முன்பு—இதைக் கொண்டு போய்—அவரிடம்—கொடுத்து விட்டு வா.

வி. [கஷ்டத்துடன் பேசுகிறான்] மங்கையர்க்கரசி — பொறு பொறு—அவசரப்படாதே—

ம. [கோபத்துடன்] சாமிநாதன் !—முன்பு கொடுத்து விட்டுவா.

சா. [கண்களில் நீர் ததும்ப] இந்தாங்க ஐயா—

[நாயக் குட்டியை விஜயரங்கத்திடம் கொடுக்கிறான்.]

வி மங்கையர்க்கரசி !—நான் செய்த தப்பிதத்திற்காக—என்னை உன் மனம் பூரணமாகுமளவும்—எவ்வளவு வேண்டுமென்றாலும் தண்டி—அவன்—அறியாப் பாலன்—அவனையேன் தண்டிக்கிறாய் ?

ம. உமக்கு என்னத்திற்கு அது ?

வி. சொல்லுகிறேன்—நான் சொல்வதை, அவன்—குழந்தை—கேட்பது நல்லதல்ல—அவனை உள்ளே அனுப்பிவிடு—கொஞ்சம் நேரம்.

ம. சாமி—கொஞ்சம் உள்ளே போயிரு.

[சாமிநாதன் நாய்க்குட்டியைத் திரும்பித் திரும்பிப் பார்த்துவிட்டு மெல்ல உள்ளே போகிறான்; கீழேயிருந்த நாய்க்குட்டி அவன் பின்னால் உள்ளே ஓடுகிறது, மங்கையர்க்கரசி அதைத் தடுக்கப் பார்க்கிறாள்.]

வி. [அவளைத் தடுத்து] வேண்டாம், உன்னை வேண்டிக் கொள்ளுகிறேன் பரமேசுவரனைப் பார்த்து அந்த நாய்க் குட்டிக்கு அவனைப் பின் தொடரும்படி புத்தி கொடுத்திருக்கிறார்—அதனைத் தடுக்காதே—அவனுக்கு இன்னும் வருத்தத்தை யுண்டுபண்ணாதே

ம. ஆம்! அந்த பரமேசுவரனைப் பார்த்து, உம்மை நான் தூங்கிக்கொண்டிருந்தபொழுது ஒரு வார்த்தையும் சொல்லாமல் விட்டுப் பிரியச் சொன்னாரோ? எங்கு போகிறீர் என்பதையும் தெரிவிக்காமற் போகச் சொன்னாரோ? காகிதத்தில் எழுதிவைத்தபடி ஒரு வருஷம் ஆனவுடன் திரும்பி வருகிறேன் என்றதையும் தவறச் சொன்னாரோ? ஆறு வருஷங்களாக இவர்கள் என் கதியானு லென்ன வென்றிருக்கச் சொன்னாரோ? உம்மை மாத்திரம்—எதேச்சையாய்—சுகமா யிருக்கச் சொன்னாரோ?

வி. நான் இக்காலத்தை யெல்லாம் சுகமாயக் கழித்தேனோ இல்லையோ என்பதை பிறகு சொல்லுகிறேன்—இப்பொழுது நீ முதலில் கேட்ட கேள்விகளுக்குப் பதில் சொல்லுகிறேன்—இவ்வாறெல்லாம் என்னை நடக்கச் செய்தது அந்தப் பரமாத்மாவின் இச்சைதான் என்று உறுதியாய் நம்புகிறேன்.

ம. என்ன!—பரமாத்மா ஒரு காலும் உம்மைப் பாப மிழைக்கும்படிச் சொல்லி யிருக்க மாட்டார்—செய்தது நீர் இருக்க, அவர்மீது பழியை யேன் விருதாவில் சுமத்துகிறீர்?

வி. நான் அவர்மீது பழி சுமத்தவில்லை—நான் முன் ஜன்மங்களிற் செய்த பாபங்களுக்கெல்லாம் தக்க பிராயச்சித்தம் அனுபவிக்க வேண்டும் என்று, இவ்வாறு எனக்குப் புத்தி

கொடுத்திருக்க வேண்டும், என்று சொல்ல வந்தேனே யொழிய, வேறொன்று மில்லை—

ம. என்ன நீர் பிராயச்சித்தமாகக் கஷ்டம் அனுபவித்தது இந்த ஆறு வருஷமாக? பெண்சாதி பிள்ளையோடிருந்தால் காலுக்குக் கட்டாயிருக்கு மென்று—எதேச்சையாக மனம் போன வழி—சந்தோஷமா யிருந்ததா? இது பிராயச்சித்த மானால், உலகில் எல்லோரும் பாபமே செய்ய விரும்புவார்கள்—இப்படிப்பட்ட பிராயச்சித்தத்தை அனுபவிக்க!

வி. இந்த ஆறு வருஷங்களாக—நான் அனுபவித்ததைச் சொல்லுகிறேனே, பிறகு நீயே தீர்மானம் செய்—நான் சுகமனுபவித்தேனோ துக்கமனுபவித்தேனோ என்பதை,—சொல்லவா?

ம. சொல்லும்

வி. உன் தகப்பனார் இறந்தவுடன் இவ்வுலகத்தின்மீது எனக்கு ஒருவித வெறுப்பு உண்டாகி—இவ்வுலகத்தின் கஷ்டம் இன்னதென்று உண்மையில் அறிய வேண்டு மென்று, நான் ஒரு வருஷம் உருமாறி வசிக்க எண்ணங் கொண்டவனாய்—உன்னை விட்டுப் பிரிந்தேன் அன்றிரவு பிறகு அந்த ஒரு வருஷம்—எளிய வேலைக்காரனைப் போல வேஷம் பூண்டு—இவ்வுலகத்தில் எனக்கிருந்த நம்பிக்கையெல்லாம் போய்—கஷ்டப்பட்டது அந்த பரமாத்துமாவுக்குத்தான் தெரியும்! இவ்வுலகத்தில் ஒருவன் எவ்வளவு மனத்துயர் அனுபவிக்கலாமோ, எவ்வளவு தேக கஷ்டம் அனுபவிக்கலாமோ, அவ்வளவையும் அனுபவித்துத் தீர்த்தேன்! பிறகு ஒரு காரணம்பற்றிக் கடலில் வீழ்ந்து—என்னுயிரையே மாய்த்துக் கொள்ளப் பார்த்தேன் — தெய்வாதீனமாக உயிர்ப்பிக்கப் பெற்றேன்—

ம. ஏதாவது புதிய கதை எழுதுகிறீரா இப்பொழுது?

வி. மங்கையர்க்கரசி! உன் மனத்துக்கு வந்தபடி சொல்—நீ சொல்லத்தகும், நான் கேட்க வேண்டியவனே—ஆயினும் நான் இப்பொழுது கூறுவதில் அணுவளவேனும் பொய்யிருக்கிறதென்று எண்ணாதே—

ம. சொல்லி முடியும்—கதையை.

வி. சரி, உன் இஷ்டம்...நான் என் கடமைப்படி சொல்லவேண்டியதைச் சொல்லுகிறேன்—அதை நீ நம்பினாலும் நம்பாவிட்டாலும் உன் இஷ்டம்—பிறகு நான் உயிர்பிழைக்கப்பட்டபின், உலகில ஒருவன் பெறக்கூடிய சகல ஐசுவரியங்களையும் பெற்றேன்!—எல்லோராலும் புகழப்பட்டேன்! ஆயினும் இந்த ஐந்து வருஷங்களாக எனக்கு மனத்தில் நிம்மதி என்பது கிடையாது, சந்தோஷம் என்பதும் கிடையாது.

ம. ஏன்? உமக்கென்ன குறைவா யிருந்தது?

வி. இந்த ஐந்து வருஷ காலமாக—உன்னைப்பற்றி நான் நினைக்கும்பொழுதெல்லாம், என் மனம் பட்டபாடு அந்த பரமாத்மாவே அறிவார் சிறு குழந்தைகளைக் காணும்பொழுதெல்லாம் என் மனம் உள்ளுக்குள்ளே குன்றியது அவர் ஒருவர்தான் அறிவார்—எனக்குப் பித்தம் பிடிக்காதிருந்ததே அதுதான் ஆச்சரியம்!—

ம. பொய்யான கதைகளையும் நாடகங்களையும் எழுதும்பொழுது, படிப்பவர்களெல்லாம் இது மெய்யாகவே நடந்திருக்கும் என்று நம்பும்படிச் செய்கிறீரே, இந்தக் கதையை நான் நம்பும்படிச் செய்ய உமக்கேன் சக்தியில்லாமற் போயிற்று?

வி. அந்த பரமேசுவரன் பாதத்தாணைப்படி சொல்லுகிறேன், இதை உறுதியாய் நம்பு இதில் அணுவளவும் பொய்யில்லை—

ம. நம்புகிறேன்—இந்த ஒரு காரணத்தைச் சொல்லிவிடும், பிறகு நீர் கூறுவதையெல்லாம் நம்புகிறேன—இந்த ஐந்து வருஷ காலமாக என்னைப்பற்றியும் குழந்தையைப்பற்றியும் ஏதோ நினைந்து வருந்தியதாகச் சொன்னீரே, அது உண்மையாயின் அரை நொடியில் எங்களிடம் வந்திருக்கமாட்டீரா? இந்த ஆறு மாதமாகத்தானே சென்னப்பட்டணம் வந்தேன். அதற்குமுன், நாமிருந்த வீடு தெரியாமற் போச்சுதா? காப்பிணியா யிருந்தபொழுது விட்டுவிட்டுப் போனீரே,

என்னவானாள், எக்கேடு கெட்டாள், என்றாவது விசாரித்தீரா? அதற்குக் காரணத்தைச சொல்லும், முன்பு.

வி. பரமேசுவரா! பரமேசுவரா!—நான செய்த பாபங்களை யெல்லாம் அனுபவித்துத்தானே தீரவேண்டும்!—மங்கையர்க்கரசி!—அக் குழந்தை—என் குழந்தையென்று—அப்பொழுது நான் அறியவில்லை—

ம என்ன!—யார் குழந்தை என்று—ஓ—!—அப்படியா சமாசாரம்!—அவ்வளவு கேவலமாகவோ என்னை எண்ணினீர்?—நில்லும் தூர!

வி. ஐயோ! நான் அவவாறு நினைததது தவறு என்று ஒப்புக் கொள்ளுகிறேன்! ஒபபுக்கொளளுகிறேன்! மங்கையர்க்கரசி!

ம. என்னைப் பெயரிட்டழையாதீர்! அவ்வாறு கேவலமாக எண்ணியபின் உமக்கு அந்தச சுதந்திரம் கிடையாது!—உம்மைப்போல் என்னையும எண்ணிவிட்டீரா?

வி. என்னைப் போலவா?

ம. ஆம—உம்மைப்போல என்றுதான் கூறினேன்!

வி மங்கையாக்கரசி, நான உனமீது சந்தேகபபட்டதறகாக உனக்கு இஷ்டமானபடி யெல்லாம திட்டு—பொறுக்கிறேன். என்னை மஹாபாபி, பாதகன், என்று அழை—ஒப்புக்கொள்ளுகிறேன்.—இந்த ஆறு வருஷமாக உனக்குத துரோகம் கனவிலும் நினைத்தேன் என்று மாததிரம எணணாதே.—உன்னைக் கையிரந்து வேண்டிக்கொள்ளுகிறேன்.

ம. தீண்டாதீர் என்னை!—இன்னொருததியைத தீண்டிய கரத்தால்!

வி. இன்னொருததியையா!—ஐயோ! கேவலம் பாமர ஜனங்கள் நம்புவதை நீ நம்பாதே! நான—

ம. ஜனங்கள் கூறுவதை நான் நம்புவதாவது? என் கண்ணாரக் கண்ட பிறகு! அன்று விக்டோரியா பப்ளிக் ஹாலில் நடந்ததை மறந்தீரோ?

வி நான் மறக்கவில்லை—அந்த உண்மையையும உரைக்கிறேன்—நான் பேசிக்கொண்டிருந்தபொழுது என் கண்கள் உன்னை

யும்—குழந்தையையும் சந்திக்கவே—அப்பொழுது உண்மை யறியாதிருந்தபடியால்—எனக்குப் பெருந் துக்கம் மேலிட—மெய்ம்மறந்தேன்.—பக்கத்தில் ஒருபுறமாய் நின்றுகொண் டிருந்தவள், நான் கீழே விழாதபடி ஓடிவந்து தாங்கியதாகக் கேட்டறிந்தேன் பிறகு—அப்பொழுது என்னைத் தீண்டினது தவிர வேறொன்றில்லை—சத்தியமாக நம்பு! மங்கையர்க்கரசி! உன்மீது நான் சந்தேகப்பட்டு ஐந்து வருஷம் கஷ்டம் அனுபவித்தேன்—மற்றொரு பெண்மீது பழி சுமத்தி அப் பாபத்திற் குள்ளாக்கிக் கொள்ளாதே உன்னை! வேண்டாம்! வேண்டாம்!

ம. யார் அப் பெண்?

வி. உண்மையில் யார் என்று எனக்குத் தெரியாது இதுவரை யில் முன்பு நான் கூறிய என் விருத்தாந்தத்தில்—சிறிது பாகம் கூறாமல் மறைத்தேன், அதையும் சொல்லி விடுகிறேன், கேள். நீ எனக்குத துரோகம் செய்தாய் என்று நான் நினைத்ததும்—உலகத்திலுள்ள என நம்பிக்கை யெல்லாம் அடியுடன் அற்றவனாய்—என் உயிரை மாய்த்துக் கொள்ள வே சமுத்திரத்தில ஒரு நாள் வீழ்ந்தேன்—மடிந்தேன் என்றே நான் சொல்லி யிருக்கவேண்டும்—எப்படியோ அதைப் பார்த்துக்கொண டிருந்து, பிணமாய்க் கிடந்த என் னுடலை சமுத்திரத்தினின்றும் எடுப்பிக்கச் செய்து, வயித் தியர்களைக் கொண்டு மிகவும் கஷ்டப்பட்டு எனக் குயிருண் டாக்கிய மாது சிரோமணி யவளே!—அதுமுதல என்னைத் தன் சகோதரனைப் போலவே பாவித்து வருகிறாள்.

ம. அதைத்தானே 'சொல்லுகிறார்கள்—சொல்லட்டும்' என் என்னும் நாடகமாக எழுதினீர்?

வி. ஆம்.—அதை நீ படித்திருக்கிறாயோ?

ம. அதை மாத்திரமன்று—நீர் அச்சிட்டிருக்கும் புஸ்தகங்களில் ஒன்றையும் விடவில்லை.

வி. ஆனால், அந்த நாடகத்தில்—ரகுநாதன், முடிவில் தன்மீது பழியில்லை யென்று பிரமாணம் பண்ணுகிற மொழியினைத்

தும் என்னுடைய மொழி என்று நினை—ரகுநாதன் மனைவி அவனை மன்னித்ததுபோல், நீ என்னை மன்னிக்கமாட்டாயா?

ம. ஆம்—ரகுநாதன் என்ன, நீர என்மீது சந்தேகப்பட்டது போல்—அவன் மனைவிமீது சந்தேகங் கொண்டானா?

வி. இல்லை—ஆயினும் அந்த சந்தேகமெல்லாம் நீங்கி நான் எண்ணியது தவறு என்று உன்னிடம் கூறவே நான் இங்கு வந்தேன்—இனியாவது என்னை மன்னிக்கமாட்டாயா?

ம. எப்பொழுது அந்த சந்தேகம் நிவர்த்தியாயது?

வி. அதையும் சொல்லுகிறேன் கேள்—அகஸ்மாத்தாய்—சாமி நாதன் போனவாரம் எனது நாடகசாலைக்கு வர,—இப்பொழுது அங்கே நடக்கும் நாடகத்தில் முக்கிய ஸ்திரீ வேஷம் தரிக்கும் லோகநாயகி என்னும் பெண், சாமிநாதன் முகமும், குரலும், அச்சம் என் ஜாடையா யிருக்கிறதென்று, என்னை ஏளனம் செய்தாள்—எனக்கும் அதே மாதிரியான சந்தேகம் பிறக்க, இவன் யாரென்று கண்டறிய வேண்டுமென்று, உங்கள் வீட்டுப் பக்கத்து வீட்டுக்காரராகிய கிருஷ்ணசாமி முதலியாரை, மறுநாள் சாமிநாதனை நாடக சாலைக்கு அழைத்து வரும்படி கேட்டேன். பிறகு கிருஷ்ண சாமி முதலியார் கூறிய மொழிகளினாலும், நான் மறுநாள் காலை விசாரித்ததினாலும், நீ இன்னாள் என்று கண்டறிந்தேன். பிறகு மறுநாள் சாமிநாதனுடன் பேசிக்கொண் டிருந்த பொழுது, அவன் பிறந்த தினம் இன்றைக்கு என்று அறிந்தவுடன்—நான் சந்தேகப்பட்டது தவறு என்று என் புத்தியிற் படவே, அவன் பிறந்த தினத்தைக் கணக்கிட்டுப் பார்க்க வேண்டுமென்று, உடனே அன்றைத்தினமே, றெயிலேறி திருநெல்வேலிக்குப் போய், முனிசிபல் பிறப்புக் குறிப்பைப் பார்த்து—சந்தேகம் நிவர்த்தியானேன். உடனே தந்தி கொடுத்து, அவன் விரும்பிய நாய்க்குட்டியை வாங்கசசொல்லி, இன்று காலை றெயிலிலிருந்து இறங்கினதும், அதை யெடுத்துக் கொண்டு—உன்னைக் காண வந்தேன்—உன் மன்னிப்பைப் பெற. மங்கையர்க்கரசி! நான் இதுவரையில் அனுபவித்த தெல்லாம் போதாதா?

ம. நீர் அனுபவித்ததைப்பற்றி யோசிக்கிறீரே யொழிய—நான் இந்த ஆறு வருஷமாக என்ன துயரம் அனுபவித்தேன் என்று யோசித்தீரா ?—அன்றைத்தினம் இரவு—கண் விழித்து உம்மை என் பக்கலில் காணாது நான் கலங்கியது தெரியுமா உமக்கு ?—பிறகு உமது கடிதத்தைப் படித்துப் பார்த்து கதறியதைக் கண்டீரா நீர் ? பிறகு திக்கில்லாமல், அனுதையாய் ஒன்பது மாதம் உமது பாலனைச் சுமந்து பெற்று—ஆண் குழந்தையென்று கண்டபொழுது, நமது புருஷன் நம்முடன் சந்தோஷிப்பதற்கில்லையே யென்று வருந்தியதை அறிவீரா ? பிறகு றெயில் ஆபததிலிருந்து தப்பிய பொழுது எல்லோரும் சமாதானம் செயதும், உமது மொழி என் காதில் விழவில்லையே யென்று என் மனம் கலங்கியதைச் சொல்லவா நான்? அப்புறம் நாடகசாலையில் நம்முடைய புருஷனை எல்லோரும் புகழ்கிறார்களே என்று நானுக உம்மைப் பார்க்க வந்தபொழுது--எங்களைக் கண்டதும் நீர் மூர்சசையாக—அவள்—உம்மைத் தாங்கியதைக் கண்டபொழுது, என் உள்ளம் எவ்வாறு பதறியது என்பதையும், அதை நினைத்து நான் மூர்ச்சையானேன் என்பதையும், யார் உமக்குச சொல்வது?—பிறகு இந்த ஐந்து வருஷ காலமாக—சாமிநாதனுக்கு புத்திவந்தவுடன் — மற்றப் பிள்ளைகள் ஏளனம் செய்யும் பொழுது, வாடிய முகத்துடன் என்னிடம் வந்து, அப்பா எப்பொழுது வருவார், என்று கேட்கும் பொழுதெல்லாம், பதில் கூற வகையறியாது தேம்பி யழுது திகைத்ததை யெல்லாம் அந்தப் பரமேசுவரர் தான் உமக்குச சொல்லவேண்டும்!—என்னை மன்னிப்பு கேளாதீர்!—அவரைக் கேளும்!

[தேம்பி அழுகிருள்]

சா. [உள்ளே யிருந்து] அம்மா ! நான் வரலாமா ?

வி. மங்கையர்க்கரசி, உன் கண்ணைத் துடைத்துக்கொள். உன்னை நான் வேண்டிக் கொள்ளுகிறேன்—என்னை நீ மன்னிக்காவிட்டாற் போகிறது—ஈசன் என்னை மன்னிப்பார் என்று நினைக்கிறேன்—அதோ, நமது குழந்தை வருகிறுன்—நீ கண்ணீர்விட் டழுது அவனுக்கு இன்று துக்கம் விளைக்காதே—

சா. [உள்ளேயிருந்து] அம்மா நான் வரட்டுமா?

ம. வா—கண்ணே.

சாமிநாதன் வருகிறான்; பின்னால் நாய்க்குட்டி
ஓடி வருகிறது.

சா. ஏம்மா அழுதைங்க?—இந்த நாய்குட்டியெ, எம் பின்னாலே நான் வரச் சொல்லலெ அம்மா! அதுவா ஓடி வந்துது அம்மா! நான் இத்தெ கொடுத்துடரெம்மா—நீங்க அழாதைங்க—இந்தாங்கையா நாகுட்டி—

வி. மங்கையர்க்கரசி!—

ம. [கண்ணீரைத துடைததுக்கொண்டு] சாமி,—இப்படி வா—வைத்துக்கொள் அதை நீயே—

சா. உங்களுக்கு வருத்த மில்லியே?

ம. இல்லையடா கண்மணி.

சா. ஆனா எனக்கு ரொம்ப சந்தோஷம்—என் கண்ணுக்குகூட சந்தோஷம். [நாய்க்குட்டிக்கு முத்த மிடுகிறான்]. ஐயா, சாமி கொடுத்தாரா, நீங்க கொடுததிங்களா, இந்த நா குட்டியெ?

வி. அப்பா—ஸ்வாமிதான்—உனக்குக் கொடுத்தார்—என்னைக் கொடுக்கச சொன்னார்—

சா. ஏன் ஐயா—அழுவரைங்க?—அம்மா—ஏன் அவரு அழுவராரு? பாவம்! நாகுட்டி குடுத்துட்டாரு இண்ணா?—வோணும் இண்ணா, நீங்களே வைச்சிகிங்கோ—நானு வந்து அப்பப்போ பாத்துட்டு வர்ரெ.

வி. வேண்டாம் அப்பா, நீயே வைத்துக்கொள்—அவருக்கு மனம் எப்பொழுது வருகிறதோ அப்பொழுதுதான் மன்னிப்பார் என்னை! அப்பொழுது நீயும் மன்னிப்பாய்!—மங்கையர்க்கரசி! நான் வருகிறேன்—சாமி, நான் வருகிறேன்.

[சாமிநாதனை வாரி எடுத்து முததமிட்டுவிட்டு, திடிரென்று கணகளில் நீரவடிய வெளியேவிரைந்து போகிறான்.]

சா. பாவம்! அழுவராரு!—ஏம்மா அழுதுகிறு போறாரு? யார் அம்மா அது?

ம. கண்ணே!—அவர்தான் உன் அப்பா!

[வாரி எடுத்து மார்புடன் அணைத்து முத்தமிடுகிறாள்.]

காட்சி முடிகிறது.

மூன்றாம் காட்சி.

இடம்—சென்னை—'விஜய ரங்கம்' என்னும் நாடகசாலையில மேடைக்குப் பின்புறமாயுள்ள ஓர் அறை.

ஒரு மூலையில் ஒரு நாயககுட்டி கட்டப்பட்டிருக்கிறது. விஜயரங்கம் சாமிநாதனைக் கையில் பிடித்துக்கொண்டு உள்ளே வருகிறான்; ராஜேஸ்வரியும், லோகநாயகியும், பின் தொடர்ந்து வருகிறார்கள்.

லோ. ஐயா! ஐயா! நான் செயதது தப்பு இண்ணு ஒப்புக் கொள்ளறே.—எனக்கு புத்தி வந்துது—இனி அந்தமாதிரி சொல்ல மாட்டே—இந்ததரம் மாத்திரம மன்னிங்க—

வி. இதுவரையில் மன்னித்தது போதும்! இன்று கடைசி நிமிஷத்தில், இவர்கள் உன வேஷத்தைத் தரிப்பதாக ஒப்புக் கொண்டிராவிட்டால், என் நாடகம் என்னகதி யாயிருக்கும்!

[சாமிநாதன் நாய்க குட்டியை, அவிழ்த்துக்கொண்டு வெளியே போகிறான்.]

லோ. ஐயா! நான் செய்தது ரொமப தப்புதான்! புத்தி யில்லாமே அப்படி பிடிவாதம் பண்ணே.—என்பேர்லே தயவுவைச்சி, இந்ததரம் மாத்திரம் மன்னிங்க; என் ஜன்மமிருக்குர வரையிலே நான் உங்களிடத்திலேயே உழைக்கிறே, உங்க காலைப் பிடிச்சி வேண்டிக்கொள்றேன்—இநத கடைசிமுறை மன்னிங்க.

வி. இது எத்தனையாவது கடைசிமுறை? என்னையேன் தொந்தரவு செய்கிறாய்? நீ வீடுபோய்ச் சேர்.

சாமிநாதன் நாய்க்குட்டி யில்லாமல் உள்ளே வருகிறான்.

சா. நாயிஞ—அம்மா உள்ளே வரலாமா இண்ணு கேக்கச் சொல் ராங்க.

வி. அம்மாவா?—உடனே வரச்சொல் கண்ணே!

தானாகக் கதவுவரையில் போய் மங்கையர்க்கரசியை அழைத்து வருகிறான்.

மங்கையர்க்கரசு, நீ வருவதற்குக் கூடவா கேட்டுக்கொண்டு வரவேண்டும்?—உட்காருகிறாயா?

ம. வேண்டாம்—சீக்கிரம் உங்கள் வேலையை முடியுங்கள்.

வி. இதோ வந்துவிட்டேன்—லோகநாயகி, என்னை இனி தொந்தரவு செய்யாது—நான் என் உத்தரவை இனி மாற்ற மாட்டேன்.

லோ. அம்மா! நீங்களாவது கொஞ்சம் சிபாரிசு செய்யுங்க; நான் தான உங்களுக்கு சிரமம் கொடுத்தே—ஆனாலும் பெண்பாலாகிய நீங்களாவது என்மேலே கொஞ்சம் இரங்கக்கூடாதா?

ரா. இந்த ஒரு முறை—மன்னிக்கலாகாதா நீங்கள்?

வி. அம்மா! என்ன நீங்களும் அவள் பக்கம் பேசுகிறீர்கள்? எல்லா ஏற்பாடுகளும் செய்தான பிறகு, ஜனங்கள் எல்லாம் கூடியபின், இன்று நாடகம் நடத்த முடியாது என்று நான் எந்த முகத்துடன் சொல்லியிருப்பேன்! பணம் போனாற் போகட்டும்—பிறகு என் பெயர் என்னவாகும்? நடு ஆற்றில் போனபின் கவிழ்த்து விடுவது போலல்லவோ செய்தாள்! நீங்கள் எனக்கு உதவியிராவிட்டால் என் பெயர் என்னாயிருக்கும்! உங்கள் வேண்டுகோளை மறுப்பதாக எண்ண வேண்டாம்.

லோ. அம்மா! நீங்களாவது சொல்லுங்களேன் உங்கள் புருஷனிடம் ஒரு வார்த்தெ—இங்கே தள்ளிவிட்டா வேறெங்கெயும் என்னெ எடுத்துகொள்ள மாட்டாங்களே!—அம்மா, உங்களுக்கும் என்மேலே பரிதாபமில்லையா?—அப்பா குழந்தெ!—நீயாவது உங்க அப்பாவுக்கு ஒரு வார்த்தெ சொல்லு மாட்டாயா? இந்த வேலையிலிருந்து என்னெ தள்ளிவிட்டதே அறிந்தா, என் கடன்காரர்களெல்லாம் என்னைக் கொண்ணூடு வாங்க!

சா [தன் தகப்பனிடம் சென்று] பாவம்! நாயினு—இந்த அம்மாளெ மன்னிச்சுடுங்க நாயினு—இல்லாப்போனு அவுங்களெ யாரோ கொண்ணூடுவாங்களாம்—பாவம்!

வி. [மங்கையர்க்கரசியைத் திரும்பிப் பார்த்து பிறகு தலை குனிந்து] லோகநாயகி,— சரிதான்போ, நாளை காலைவா — சொல்லுகிறேன்.

லோ. அவ்வளவு போதும்—கையெடுத்து உங்களெக் கும்பிடுகிறேன்.

[சாமிநாதனை நோக்கி]

அப்பா!—என் வயத்திலே பாலைவார்த்தெ! உங்க அப்பாவைப்போலெ பேரெடுத்து நீ நூறு வருஷம் வாழணும்!—நான் வர்ரேன்.

[கண்ணைத் துடைத்துக்கொண்டு வெளியே போகிறாள்.]

வி. மங்கையர்க்கரசு, இவர்கள் தான் மைதிலி அம்மாள், முன்பு ஒரு முறை என்னுயிரைக் காப்பாற்றியதாகச் சொன்னேனே, அவர்கள் தான். இவர்கள் இன்று எனக்கு மஹோபகாரஞ் செய்தார்கள். இன்று சாயங்காலம் வரைக்கும் பேசாமலிருந்து விட்டு, நானில்லாமல் இன்று நாடகமெப்படி நடக்கப்போகிறதென்று அகங்காரம் கொண்டவளாய் அந்த லோகநாயகி, இன்று ஆட்டத்திற்கு தன் சம்பளத்தை இருமடங்காக்கினு லொழிய வரமாட்டேன் என்று சொல்லி யனுப்பினுள், உடனே இவர்கள், தாம அந்த வேஷம் தரிப்பதாகத் தெரிவித்து, சொல்ப காலத்திற்குள் பாடத்தை யெல்லாம் படித்து வெகு நன்ருய் நடித்தார்கள்—ஜனங்களெல்லாம் மிகவும் சந்தோஷப் படும்படியாக—நீதான் பார்த்துக் கொண்டிருந்தாயே.—

ம. ஆம்—மிகவும் நன்ரு யிருந்தது.

வி. அம்மா—உங்களுக்கு நான் என்ன கைம்மாறு செய்யக்கூடும்?

ரா. நான் வேண்டும் கைம்மாறு ஒன்றிருக்கிறது.

வி. என்ன சொல்லுங்கள்—உடனே செய்கிறேன்.

ரா. என்னை மறுபடியும் மேடைமீது வரும்படியாகக் கேட்கலாகாது என்பதே.

வி. உப்—சரி—அப்படியெ உங்களிஷ்டப்படி.

ரா அம்மா, உங்களை ஒன்று கேட்கலாமா நான்?

ம. கேளுங்கள்.

ரா. சீக்கிரம் குழந்தையை உங்கள் புருஷன் வீட்டிற்கு அழைத்துக் கொண்டு போய் திருஷ்டி சுற்றிப் போடுங்கள். இன்று நாடகம் நன்றாய் முடிந்ததெல்லாம் அவனுடைய புத்திசாலித் தனத்தினால்தான் என்று எண்ணுகிறேன். ஆயிரக்கணக் கான ஜனங்களின் கண் பட்டிருக்கும்—என் கண்ணே பட்டிருக்கும் ஒருநால்.

ம. அப்படியே ஆகட்டும்.

ரா. அம்மா, நான் வருகிறேன். 'ஈன்றபொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக் கேட்டதாய்' என்றபடி இன்று நீ மிகவும் சந்தோஷப் பட்டிருகக வேண்டும்.— அப்படியே எல்லா விஷயததிலும் இன்று முதல், நீர் சந்தோஷமா யிருப்பீராக!—நான் வருகிறேன். [போகிறாள்.]

சா. அம்மா, அந்த அம்மா ரொம்ப நல்லவங்கல்லா?

[மங்கையர்க்கரசி அவனை வாரி எடுதது முத்தமிடுகிறாள்.]

வி. மங்கையர்க்கரசு—இப்பொழுதாவது என்னை மன்னித்த தாக ஒரு வார்த்தை சொல்லமாட்டாயா?

[அவள் கரததைப் பற்றுகிறான். இட்சணம் வெளியில் 'குதிரை! குதிரை! குதிரை! ஒதுஙகுஙகள்! ஒதுஙகுங்கள்!' என்கிற கூசசல் கேட்கிறது].

சா. [ஜன்னல் வழியாக வெளியே பார்தது] நாயினு! நாயினு! என் நாய்குட்டி! என் நாய்குட்டி! [வெளியே ஓடுகிறான்.]

வி ம சாமி! சாமி! போகாதே! போகாதே!

[என்று கூவிக்கொண்டு பின்னால் ஓடுகிறார்கள்.]

காட்சி முடிகிறது.

நான்காம் காட்சி.

இடம்:—"விஜயரங்கம்" என்னும் நாடகசாலையின் பின்புறத்தில், வேஷம் தரிப்பவர்கள் பிரவேசிக்கவும் வெளியே போகவும் ஏற்படுத்தப்பட்ட வாயில்.

ஜனங்கள் ஒரு பக்கம் கும்பலாய் உரத்த சத்தமாகப் பேசிக்கொண்டிருக்கின்றனர். மற்றொருபுறம் சில ஜனங்கள் இங்கு மங்குமாக ஓடிக்கொண்டிருக்கின்றனர்.

சிலர். குதிரெயெ புடிச்சாங்களா? குதிரெயெ புடிச்சாங்களா?

மற்றும் சிலர். குதிரை எக்கேடாறு ஆவுது! கொழந்தெ தப்பிச்சிக்கிறு ஐயா?

முதல் மனிதன். கொழந்தைக்கு அபாய மொண்ணுமில்லெ—அவுங்கப்பனுக்கு தான் ரொம்ப அடி பட்டாப்பொலெயிருக்குது!

சிலர். ஐயோ! பாவம்! எப்படி? எப்படி?

மு-ம. குதரெ ஓடிவரும்போது, ஒரு நாய்குட்டி எதிரிலே இருந்தாம், அதெ எடுக்கணும் இண்ணு, கொழந்தெ போறு:—அப்படியே கால சறுக்கி குதிரெக்கி நேரே உழுந்துட்டாறும். அவங்கப்பென் ஓடிவந்து கொழந்தையெ இழுத்து போட்டாறும்.—கொழந்தைக்குப் படற அடி, அவங்கப்பனுக்குப் பட்டுதாம்.

சிலர். எங்கே பட்டுதாம் அடி? எங்கே பட்டுதாம்?

மு-ம. குதிரெ கொளம்புபட்டு அப்படியே மண்டெ தெறந்து போச்சா!

சிலர். பொழச்சிகிவாறு? பொழசிகிவாறு?

மு-ம. சொல்றத்துக்கில்லே! மோட்டார் வண்டியிலே வைச்சி இப்பதாம் எடுத்தும் போறுங்க!—

இரண்டு மனிதர்கள் வருகிறார்கள்.

இ-ம பாவம்! பாக்கரத்துக்குப் பரிதாபமாயிருக்குது!

மு-ம என்ன! பூட்டுதா என்ன?

இ-ம இலலெ—உயிரிருக்குது இண்ராங்க—அவர் பொண்சாதியாம் பாவம், அந்தம்மாளும் அந்த கொழந்தையும் அழுவுறதே பாக்க முடியலே!

மு-ம அந்த சின்ன நாகுட்டிகூட அழுவராப்போலெ கத்துதே!

சிலர். அந்த நாகுட்டியாலெ தானே இவ்வளவு வந்துது, அத்தே கொண்ணாடணும் முன்னே.

மு-ம. அதென்ன செய்யுமையா பாவம்!—அவுங்கவுங்க தலெவிதி.

சிலர். யாருக்கையா சாயம்பட்டது?

மு-ம. விஜயரங்கப் பிள்ளைக்கி ஐயா! அவர் பேராலெ இந்த நாடக சாலெ கட்டும்போதே தெரியு மெனக்கு—திர்ஷ்டி கெட்டதையா!

மு-ம ஆனா அந்த பையன் அவர் கொழந்தையா?

மு-ம. ஆமாம்

சிலர் யாரு? நாடகத்திலெ ஆடனானே சின்ன பையன், அவனா?

மு-ம. ஆமாம்

சிலா. ஐயோ பாவம்! இததினி பேரு கண் திர்ஷ்டியே பட்டிருக்கும்! பாவம்!

ஒரு குதிரைககாரன் தள்ளாடிககொணடு வருகிறான்.

கு. ஐயா, நாடவம் கலஞ்சி போசசிங்களா?

இ-ம. அடே!—நீ என்ன செய்துகினு இருந்தெ இததனி நாழி?

கு எசமாங்க கோவிசசிகாதைங்க!—நாடவம் ஆப்போசசா—இண்ணு கேக்கறெ!

இ-ம. நீ என்ன, தூங்கிகினு இருந்தையா என்ன?

கு. [உரக்க] எங்கப்பா! கோவிசசி காதைங்க—நாடவம் கலஞ்சி போச்சிங்களா இண்ணு கேக்கறெ நானு!

மு-ம. அடே அவன் குடிசசிட் டிருக்கிராண்டா! அப்பா, நாடவம் அப்பவே கலஞ்சி போசசி— நீ ஏன கேக்கறெ?

கு எஜமான் வந்தூடுவாருங்க -என் குதிரையெ காணோம்—அதுக்குதானுங்க.

பலா. அடடடே! இவன் குதிரெதாண்டா! இவன் குதிரெ தாண்டா! இவன் குடிசசூட்டு எங்கேயோ உழ்ந்துகெடந்தா, குதிரெ பிசசிகினு பூட்டுது.

கு. எங்குதிரெ—ஓடிப்பூட்டுதுண்ணா சொல்ரைங்க! எங்குதிரெ ஓடாதுங்க!

சிலர். போடா! கழுதெ! அப்பவே ஓடிப்போச்சுடா! போய் பார்ரா!

கு. ஏங்—குதிரெ—ஓடாதுங்க! [போகிறான்].

[சிலர் நகைக்கின்றனர்].

காட்சி முடிகிறது.

ஐந்தாம் காட்சி.

இடம்—சென்னையில தேனும்பேட்டையில் விஜயரங்கப் பிள்ளையின் பங்களாவின் மேல்மாடியில் ஒரு பெரிய அறை.

மிகவும் விலையுயர்ந்த நாற்காலிகள் மேஜைகள் போட்டிருக கின்றன. ஒருபுறம் சுவரில திரிமூாததிகளின் படம் தொஙக விட்டிருககிறது. மற்றொருபுறம் மடிப்புத திரையொன்று அமைக்கப்பட் டிருககிறது. வடக்குப் புறததிலுள்ள படிக் கதவு திறந்திருககிறது. மேற்குப்புறமாகப் படுக்கையறைக்குப் போகும் கதவு மூடப்பட்டிருக்கிறது. சாமிநாதன் திரிமூர்தகிகளின் படததில் கீழிருக்கும் ஒரு சோபாவின்மேல் உட்கார்ந்து கணணைமூடி கைகூப்பிககொண டிருக்கிறான். ரங்கநாதப் பிள்ளை மெல்லப் படியின் வழியாக மெத்தைககு வருகிறான்.

சா. சாமி!—எங்க நாயினாவெ நீங்க எப்படியாவது காப்பாத்தணும்!—நீங்க இட்டுகினு பூடக்கூடாது—நீங்க இட்டுகினு பூட்டா அம்மா அழுவாங்க!—நானும் அழுவேன்—அது உங்களுக்கு பாவம்!—நீங்க சொல்றபடி யெல்லாம் கேக்கறெ—எங்க நாயினாவெ மாத்தம் காப்பாத்துங்க!

[அப்படியே சோபாவின் மீது படுததுவிடுகிறான்]

ர. [மெல்லிய குரலுடன்] வயித்தியர்கள் உள்ளே இருக்கிறார்கள்போ லிருக்கிறது—எப்படியும் இதனுண்மையை நான் சீக்கிரம் அறியவேண்டும்—இல்லாவிட்டால் எனக்குப் பயித்தியம் பிடித்துப் போம்! அவள் இங்குதான் வந்ததாகச் சொன்னார்களே—அதோ அவளது குரல்!—இங்குதான் வருகிறாள்போ லிருக்கிறது—நான் மறைந்துகொள்ளுகிறேன்

[திரைக்குள் மறைந்துகொள்ளுகிறான்.]

படியின் வழியாக மங்கையர்க்கரசி ராஜேசுவரியால் தாஙகப்பட்டு வருகிறாள்.

ரா. அம்மா, தைரியமாயிருங்கள். ஈசன் கருணையினால் உமது கணவன் இக்கண்டமும் தப்புவார் என்று எனக்குள் ஏதோ தோன்றுகிறது. அவர் எத்தனை பெயருக்கு தர்மம் செய்திருக்கிறார் என்பதை இன்று காலைதான் கண்டேன்-அவரது தேக சௌக்கியத்தைப்பற்றி விசாரிக்க வருபவர்களிடமிருந்து; அவர் செய்த தர்மம் அவர் தலையை காத்திடும், அஞ்சாதீர்கள்

ம. பரமேசுவரா! பரமேசுவரா!—கொஞ்சம் வயித்தியர்களைக் கேளுங்கள், தயவுசெய்து—நான் உள்ளே போய் அவரைப் பார்த்துக்கொண்டாவது இருக்கிறேனே—

ரா. வேண்டாம்—நான் சொல்வதைக் கேளுங்கள்-வயித்தியர்கள் ஒருவரும் அருகில் இருக்கக்கூடாதென்று கட்டளையிட்டிருக்கிறார்கள். இவ் விஷயங்களிலெல்லாம் அவர்கள் சொல்லுகிறபடியே நாம் நடக்கவேண்டும்—சற்று இப்படி உட்காருவோம் வாருங்கள் [ஒரு சோபாவின்மீது உட்காருகிறார்கள்].

ம. சாமி!—இங்கென்ன செய்கிறான் இவன்?

ரா. உறங்குகிறான் போலிருக்கிறது—அவனை எழுப்பாதீர்கள்

படுக்கையறையின் கதவை மெல்லத் திறந்துகொண்டு டாக்டர் கிருஷ்ணராவும் அவருக்கு உதவியான ஒரு வயித்தியரும் வருகிறார்கள்.

கி. அம்மா, உங்களுக்கு சந்தோஷமான சமாசாரம் கொண்டு வந்திருக்கிறேன்—பிள்ளையவர்களுக்கு இனி ஒரு அபாயமுமில்லையென்று நம்புகிறேன்.—ஆயினும் அவர் தப்பிப் பிழைத்தது தெய்வாதீனம் எனச் சொல்லவேண்டும்—

ம. ஐயா! எனக்கு மாங்கல்ய பிச்சை கொடுத்தீர்கள்! உங்களுக்கு நான் என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்?

கி. அம்மா, நான் வயித்தியனாயிருந்தபோதிலும் இப்படிப்பட்ட விஷயங்களில் தெய்வத்தின் கருணையே முக்கியமென்று உறுதியாய் நம்புகிறேன். ஆயினும் மனுஷ்ய யத்னத்திற்காக வந்தனம் அளிப்பதானால்—எங்களை வந்தனம் செய்வதைவிட, மைதிலி அம்மாளுக்கு வந்தனம் செய்யவேண்டும்—ஏனெனில்—ரத்தச்சேதமில்லாதபடி அவ்வளவு ஜாக்கிரதையாக, அடி

பட்ட உடனே நேற்றிரவு இவர்கள் கட்டியிராவிட்டால், ரத்தப் பெருக்கினால் அவரது உயிர் போயிருக்குமென்று உறுதியாய் நம்புகிறேன். கற்றறிந்த வயித்தியன்கூட அவ வளவு ஜாக்கிரதையாகக் கட்டியிருக்கமாட்டான் — அம்மா, நீங்கள் இதை எங்கே கற்றீர?

ரா. நான் சில வருஷங்களுக்கு முன், காயம்பட்டவர்களுக்கு முதல் உதவி புரியும் விதம் இப்படி என்று ஸ்திரீகள் கற்கும் படி ஏற்படுத்திய வகுப்பில் சேர்ந்து கற்றேன்—

ம. நான் உள்ளேபோய் அவரைப் பார்க்கலாமா?—நான் ஒரு வார்த்தையும் பேசவில்லை—

கி. அம்மா, இப்பொழுது வேண்டாம்—இப்பொழுதுதான் மயக் கம தெளிகிறதுபோ லிருக்கிறது—அவராகக் கூப்பிட்டால் போங்கள். அதறகாக என்னுடைய மற்றொரு அசிஸ்டெண்ட் கோவிந்தராஜ முதலியாரை அறைக்குள் உட்கார வைத்திருக் கிறேன். அவர் உங்களுக்குத் தெரிவிப்பார் —எனக்கு கொஞ் சம் அவசரமான வேலை யிருக்கிறது. நாளை காலை வரு கிறேன்—நீங்கள் இனி ஒன்றும் பயப்படவேண்டாம் —நான் வருகிறேன் அம்மா நீ ஒரு டாக்டராக பிறநதிருக்க வேண் டும் அம்மா மைதிலி! நான் வருகிறேன்.

[டாக்டா கிருஷ்ணராவும அவா உதவி வயிததியரும போகிறாாகள.]

ம. அம்மா! நீங்கள் முன்பொருதரம் என் கணவனது உயிரைக் காப்பாற்றினீர்கள்—மறுபடியும் இம்முறையையும் காத்தீர் கள்—உங்களுக்கு நான் என்ன கைம்மாறு செய்யக்கூடும்?— எதை வேண்டுமென்றாலும் கேளும் தருகிறேன—

ரா. தருகிறீர்களா?

ம. ஆம், சத்தியமாக! என்னால் கொடுக்கக் கூடிய எதை வேண்டினும்.

ரா. ஆயின்—இந்த உறுதிமொழி எனக் களியும்—கேவலம பாமர ஜனங்கள் சந்தேகிப்பதுபோல்—உமது கணவன் மீது எப் பொழுதும் சந்தேசம் கொள்வதில்லை யென்று—

ம அப்படியே

ரா [அவளது கரத்தைப் பற்றி] அம்மா! என்னை உமக்கு இன்னு ரென்று தெரியாது. என் விருத்தாந்தத்தையும் நீர் அறியீர். தெய்வா தீனத்தால் உமக்குத் தெரியுமாயின் நீர் என்மீது பரிதாபப்படுவீரே யொழிய, எனமீது ஒரு குற்றமும் சாற்ற மாட்டீர்—ஆயினும் இதை மட்டும் உமக்கு உறுதியாய்க் கூறுகிறேன். ஏதோ நான் ஜன்மாந்தரத்திற் செய்த பாபத் தினுல், என் கணவனிடமிருந்து நான் பிரிக்கப்பட்டிருக் கிறேன்—ஆயினும் உமது கணவனுக்கும் உமக்கும் இடை யில், நான் கனவிலும் வந்தவ ளல்லவென்று பரமேசுவரன் பாதத்தாணைப்படி கூறுகிறேன்!—நம்பும் என் வார்த்தை யை.—என்னுயிரை அவர் காப்பாற்றினுர், அது முதல் நான் அவரை என் சகோதரனுகவும் குருவாகவும் பாவித்து வருகிறேன்! இது சத்தியம்—

ம. அம்மா, மைதிலி, உமது வாாததையை உறுதியாய் நம்பு கிறேன் —உம்மீது சந்தேகப்பட்டதறகாக என்னை மன்னியும்.

ரா. மன்னித்தேன்—உம்மீது தவறில்லை— ஒரு அற்ப காரணத் தைக் கொண்டு—கற்றறிநத என் கணவனே சந்தேகப்பட்டா ரென்றால—நீா சந்தேகப்பட்டது ஒா ஆச்சரியமாமோ?—

சா. [கணவிழித தெழுநது] நாயினு கூப்பிடராங்க என்னெ!—

ம என்னடா சாமி?

சா. உங்க நாயினுவுக்கு ஒடம்பு ஒண்ணு மில்லெ, உன்னெ கூப் பிடராங்க போ, இண்ணு சொன்னுரெ சாமி —நான் பொறெ நாயினுகிட்ட.

ம. கண்ணே! பொறு!—உன்னைக் கூப்பிடவில்லை நாயினு!—நீ கனவு கண்டிருப்பாய் ஒரு வேளை.

சா. கூப்பிட்டாங்கம்மா இண்ணெ.—என் காதிலெ கேட்டுதெ.—

படுக்கை யறையின் கதவை மெல்லத் திறந்துகொண்டு கோவிந்தராஜ முதலியார் வெளியே தலையை நீட்டுகிறார்.

கோ. அம்மா,—குழந்தையையும் உங்களையும் பார்க்கவேணு மென் கிறார் —

சா. நான்தான் சொன்னனெ.

கோ. [வெளியே வந்து] இனி போகலாம் நீங்கள்—ஒன்றும் பயமில்லையம்மா—

[மங்கையர்க்கரசி, சாமிநாதனை அழைத்துக் கொண்டு படுக்கையறைக்குள் போகிறாள்.

ரா. இவ்வுலகில் நமது அற்ப புத்திக்கு எட்டாத விஷயங்கள் எத்தனை இருக்கின்றன.

கோ. அவர்கள் அதிக நாழி பேசவேண்டாம் என்று சொல்லுங்கள்—கொஞ்சம் தூங்கட்டும்—இன்னும் பலஹீனமா யிருக்கிறார்—நான் போய் சாப்பிட்டுவிட்டு வருகிறேன். நேற்றிரவு சாப்பிட்டது.

ரா. போய் வாருங்கள—இங்கேயெ சாப்பிடுகிறது தானெ?

கோ. இல்லை—நான் வந்துவிடுகிறேன் சீக்கிரம்.

[படி வழியாகக் கீழே போகிறார்]

ரா. பரமேசுவரா! நான் பூர்வ ஜன்மங்களிற் செய்த பாபங்களுக்கெல்லாம் பரிஹாரமாக இந்த புண்ணியமாவது செய்யும்படி அனுக்கிரஹிததீரே! மங்கையர்ககரசி தன் கணவனைக் கண்டு மகிழ்வதுபோல் நான் எப்பொழுது—எந்த ஜன்மததில்—என் கணவனைக் கண்டு மகிழப் போகிறேன்?

ரங்கநாதம் திரைக்குள்ளிருந்து திடீரென்று வெளியே வருகிறான்.

ரா. ஆ!—யார் அது?—நான் கனவு காண்கிறேனு?

ர. இல்லை இல்லை! நினைவுதான்!—உன் எதிரில நிறபவன்—உன்மீது வீணான சந்தேகங்கொண்டு—உன்னை இததனை வருஷமாக விட்டுப் பிரிந்து—உலகில் உழன்று—முடிவில் உன்னைக் கொல்வதற்காக இங்கு வந்து ஒளிததிருந்த பாபியே பாபியே!

ரா. கொஞ்சம்—மெல்ல—பேசுங்கள்—அவர்கள் இதைக் கேட்பானேன்?

ர. ஆம் ஆம்.—என் வெட்கக்கேடு அவர்களுக்குத் தெரிவானேன்?—ராஜேசுவரி!—என்னை மன்னிப்பாயா நீ?—உனக்கு நான் பெரும் தவறிழைத்தேன்—ஒப்புக்கொள்ளுகிறேன்—நீங்க ளிருவரும் சற்று முன்பாக இங்கு பேசிய

வார்த்தைகள், மூடியிருந்த என் கண்களை விளக்கின நன்றாய்! —நீ என்னை மன்னித்ததாகக் கூறிவிட்டால் சற்றுமுன் உனக்கு நான் தீர்மானித்திருந்த தண்டனையை எனக்கே விதித்துக்கொள்ள வேண்டியதுதான்.—

ரா. பொறும்! [அவனது கரத்தைப் பற்றி] வேண்டாம்!—நான் மன்னித்தேன் உம்மை—உம்மீது குற்றமில்லை—என் ஊழ்வினைப் பயனாகும் இது! அம்மட்டும்—இப்பொழுதாவது—

ர. பரமேசுவரன்—என் கண்களை விளக்கினரே! கண்ணே!

[அவளைக் கட்டியணைத்து முத்தமிடுகிறான்].

காட்சி முடிகிறது.

ஆறாம் காட்சி.

இடம்—திருநெல்வேலியில, முதல் அங்கம் முதற் காட்சிப்படியே.

பின்புறத்து படியின் வழியாக விஜயரங்கம், ரங்கநாதம், மங்கையர்க்கரசி ராஜேசுவரி, நாலவரும பேசிக்கொணடு வருகிறார்கள்.

ர. ஏனம்மா, இனிமேல என்பேரில் ஒன்றும் குறை கூறமாட்டாயே? மணவிருந்து கூட சாப்பிட்டாயிற்று—இனி ஏதாவது மிகுதி இருக்கிறதா?

ம. இல்லை—கலியாணப் பெண்ணை மாமியார் வீட்டிற்கு அனுப்ப வேண்டியதுதான்!

[எலலோரும் நகைக்கிறார்கள்].

சாமிநாதன் அநதகனான் பரஞ்சோதியைக் கையைப் பிடித்துக்கொணடு மெல்ல படியின் வழியாக அழைத்து வருகிறான்.

ர. இந்தக் கிழவனுக்கு இந்த வேலையேன் வைக்கிறீர்கள் இன்னும்?

வி. [அவனிடமிருந்து வெற்றிலைப் பாக்கு தட்டை வாங்கிக் கொண்டு] நானா வைக்கிறேன்?—ஏதாவது வேலை செய்துகொண்டிராவிட்டால் அவனுக்கு தூக்கம் வராது—நான் வேண்டாமென்றால் கேட்டாலல்லோ?

சா. [பரஞ்சோதிக்கு] வா, தாதா, கீழே இட்டும் போறெ.—

ர. என்ன தாதா என்றழைக்கிறான் சாமி அவனை ?

வி. நான் வனவாசம் போயிருந்தேனே—அந்த சமயமெல்லாம்—சாமியைப் பிறந்ததுமுதல் அவன்தான் எடுத்து வளர்த்து வந்தான். [மெல்ல] இவர்கள் கஷ்ட ஸ்திதியி லிருந்தபொழுது தன் சம்பளத்திலிருந்து சேர்த்துவைத்த பொருளை யெல்லாம் இவர்களுக்கே செலவழித்திருக்கிறான் அப் பணத்தை நான் திருப்பிக் கொடுத்தால் வாங்கமாட்டேன் என்கிறான். —நான் என்ன செய்வது? வயது வந்ததுமுதல், சாமி அவனை தாதா என்றே அழைத்து வந்தானும்—அப்படியே இருக்கட்டும் என்று நானும் விட்டுவிட்டேன்

ர. ரொம்ப சரி—என்ன பரஞ்சோதி?

ப. ஐயா.

ர. நான் வடக்கே காசி முதலிய இடங்களுக் கெல்லாம் போய் வருகிறேன. அங்கிருந்து உனக்கேதாவது வேண்டுமா ?

ப. மருமகப்பிள்ளெ எஜமாங்க தயவு!—எனக்கு என்னாவேணும்! ஒண்ணும் வேணும்—நீங்கலலா சுகமா யிருந்தா போதும்.

வி. ஆ ஆ !—நிஜத்தைச சொல்லிவிடு—பரஞ்சோதிக்கு மனசுலெ ஒரு குறைதா னிருக்கிறதாம்—

ப. என்ன அது ?

வி. நான் சொல்லிவிடுகிறேன்—தன் குட்டி எஜமானுக்கு கலியாணம் பண்ணி பார்த்துவிட்டுப் போகவேண்டுமாம!

ரா. சாமிக்கா ?

வி. ஆம். [எலலோரும நகைக்கிறாகள்].

ர. ஆமாம்—கண் தெரியாதே அப்பா உனக்கு? என்ன பிரயோஜனம் ?

ப. தெரியாபோனா என்னாங்க ?—மனசு திருப்திக்கு—அது ஒண்ணுதாம் கொறெ இருக்குதுங்க

ர. ஒன்றும் பயப்படாதே அப்பா! ஸ்வாமி அந்தக் குறையையும் நிறைவேற்றுவார்.—பயப்படாதே.